The nodes start to exchange local link-state information with their immediate neighbours and each of them builds its own 2-hop neighbour table containing the neighbours' address block range, tree level and hop distance. When forwarding packets to a destination beyond 2-hop distance, the sending node applies a simple heuristic to pick a next hop that is close to the spanning tree root (and hence knows more about the network topology) but not too far away from the sending node. One drawback in this solution is that, as new nodes dynamically join the network, the address allocation process may have to be re-performed in order to adapt to the topological changes.

The IETF tackles the mesh network routing problem via the route-over approach and has developed RPL (IPv6 Routing Protocol for Low-Power and Lossy Networks) as the current standard solution. RPL shares the same spirit with IEEE 802.15.5 in that it models a cluster of nodes as a spanning tree called Destination-Oriented DAGs (DODAG), with all directed paths terminating at the root. When two nodes inside a DODAG

The mesh using routing protocols, which consumes lots of memory, or carried with the IP packet as source routes during forwarding, which conicts with the small MTU restriction from the link layer. Due to IP's host-oriented communication semantics, routing will remain a major challenge in IP-based IoT mesh technologies.

**PROBLEMS AT TRANSPORT LAYER**

The transport layer in the TCP/IP architecture provides congestion control and reliable delivery, both of which are implemented by TCP, the dominant transport layer protocol on the Internet. TCP has been engineered for many years to e ciently deliver a large bulk of data over a long-lived point-to-point connection without Stringent latency requirement. It models the communication as a byte stream between sender and receiver, and enforces reliable in-order delivery of every single byte in the stream.

However, IoT applications usually face a variety of communication patterns which TCP cannot support efficiently. First, due to the energy constraints, devices may frequently go into sleep mode, thus it is infeasible to maintain a long-lived connection in IoT applications. Second, a lot of IoT communication involves only a small amount of data, making the overhead of establishing a connection unacceptable. Third, some applications (e.g., device actuation) may have low-latency requirement, which may not tolerate the delay caused by TCP handshaking. When working within lossy wireless networks, the in-order delivery and retransmission mechanism of TCP may also cause head-of-line blocking, which introduces unnecessary delay. Moreover, most wire-less MAC protocols also implement link-layer automatic re-peat request (ARQ), which may further impair the performance of TCP if the L2 retransmission delay is longer than the TCP RTO [9].

we some industrial IoT standards (e.g., ZigBee IP [2]) still mandate the TCP support, more and more IoT protocols (such as BACnet/IP [1] and CoAP [25]) decided to build transport functionalities into the application layer and chose UDP as the transport layer protocol, which essentially turns the transport layer to a multiplexing module. Such trends highlighted the need for the application level framing

With application level framing, network can identify individual application data units (ADUs), thus enabling more excitable transport support, e.g., apply different retransmission strategies for different types of ADUs, distributing data more efficiently with in-network caching, etc. Unfortunately, current TCP/IP architecture does not allow applications to embed application semantics into network level packets, thus failing to provide sufficient support for application level framing.

## PROBLEMS AT APPLICATION LAYER

Most IoT applications implement the resource-oriented request-response communication model. For example, monitoring applications request data generated by the sensors; and control applications request operations on the physical objects through the actuators. These applications resembles today's Web services that have adopted REST (Representational State Transfer) architecture for application-layer communication.

The need for implementing REST at the application layer highlights the missing support of important functionalities at the lower layers of the TCP/IP architecture, including resource discovery, caching, and security. In this section, we examine how current IoT applications bridge those gaps and the limitation of their solutions.

### Resource discovery

The resource-oriented communication model usually re-quires a resource discovery mechanism, whereby the applications can request or invoke operations on the resources. The solution for resource discovery in traditional IP net-works is DNS-based Service Discovery (DNS-SD).

First of all, DNS-SD aims to support service discovery, where the service usually refers to a running program (e.g., a printing service running on some printer). In contrast, the resources in the context of IoT covers a broader scope: besides services, it may also refer to IoT devices, sensor data, etc.. Therefore, the IoT resource discovery requires a more general approach to identify heterogeneous resources. For example, instead of using DNS records, CoAP adopts a URI-based naming scheme to identify the resources (like in HTTP). Based on that, the IETF core WG has developed CoRE-RD  a CoAP-based resource discovery mechaism that relies on less constrained resource directory (RD) servers to store the metainfo about the resources hosted on other devices.

Secondly, traditional service discovery often relies on multicast when dedicated services such as DNS and CoRE-RD are not available in the local environment. For example, DNS-SD uses Multicast DNS (mDNS) [5] as the carrier of communications for service discovery and name resolution within the local network. However, as we analyzed in Section  link-local multicast has effianciency issues in IoT environments.

An alternative solution to using multicast is to synchronize the resource metainfo across the network in a peer-to-peer fashion (which is similar in spirit to the MPL multicast forwarding protocol we discussed in For example, the IETF home net WG is developing the Home Networking Control Protocol (HNCP) to distribute home network configurations using a synchronization mechanism differed by the Distributed Node Consensus Protocol (DNCP).

It is worthwhile to note that the necessity of those solutions is due to the fact that the network and transport layers in TCP/IP are unable to discover the resources dened by the application-layer names. For example, the Neighbour Discovery protocol for IPv6 can only discover configurations at the network layer and below; while the SRV records in DNS-SD typically identify the services by the IP addresses and port numbers. Given the universal demand for resource discovery in the IoT applications, an efficient IoT network architecture should include that as one of its core functionalities and free the applications from implementing their own custom solutions.

The TCP/IP communication model requires that both the client (resource requester) and the server (resource holder) are online at the same time. However, in IoT scenarios, the constrained devices may frequently go into sleeping mode for energy saving. Moreover, the dynamic and/or intermittent network environment usually makes it diffcult to maintain stable connections between communicating parties. Consequently, the IoT applications often rely on caching and proxying to achieve e cient data dissemination.
The selected proxy node can request the resources on behalf of the sleeping nodes and store the response data temporarily until the requesting nodes wake up. The cached contents can also be used to serve similar requests from other nodes who share the same proxy, which saves network bandwidth and reduces response

latency. The resource origin server may also appoint some proxy nodes to handle the requests on its behalf (called reverse-proxy) so that it can reduce the client and may go when it need to.

While it is helpful, the application-level caching implemented by CoAP and HTTP has several limitations in the IoT environment. First, the clients need to explicitly choose a forward- or reverse-proxy node in order to utilize the con-tent caching capability. Those preconfigured caching points may not be optimal for all the client nodes. The clients may utilize the resource discovery mechanism to nearby proxies on demand. But such solution introduces extra complexity to the whole system. Second, in dynamic network environments where the connectivity is intermittent, the pre-selected proxy point may become totally unreachable. When the network topology changes, the clients need to reconfigure or re-discover the proxies, or otherwise stop using caches and proxies at all. Third, the caches and proxies break the end-to-end connections assumed by the current security protocols, making it even harder to protect the application data.

To make the caching functionality e cient and edibles in the IoT environment, the network architecture need to provide opportunistic caches pervasively inside the network and allow the applications to utilize them without incurring con figuration and communication overhead. This further requires the network layer to be aware of the application-layer resources and integrate the caching into the forwarding process so that each network packet can explore the caches as it traverse the network. It also requires a fundamental change to the security model in order to make the in-network caches secure and trustworthy.

Security is critical to IoT applications due to their close interaction with the physical world. The mainstream security model of IP-based applications is channel-based security (e.g., TLS [8] and its datagram variant DTLS [22]), which provides a secure communication channel between the re-source server and the client. The secured-channel solutions, however, do not t into the IoT environments for several reasons.

The issue with channel-based security is the over-head of establishing a secure channel. Both TLS and DTLS require two or more rounds of security handshake to authenticate a channel and negotiate the security parameters, before the rstapplication data is sent out.

The second issue is that both ends of a channel have to maintain the states of the channel until it is closed. This may impose a high pressure on memory usage when a de-vice needs to communicate with many peers simultaneously in a densely-meshed network. Note that this issue, together with the one, leads to a difficult trade.

Currently all those functionalities (including the REST interface itself) are implemented by the application layer protocols. However, some of those functionalities could have been more efficective if moved into the core network. For ex-ample, the congestion control could bend t from the feed-backs of network and link layers to make wiser decisions. Caching could be more e cient if the caches are ubiquitous inside the network, rather than relying on dedicated caching proxies. To utilize in-network caching, URI-based forwarding, REST interface and object security should also be sup-ported at the network layer so that the cached content can be easily located, retrieved and authenticated. This protocol stack optimization eventually lead to a simpler and more e cient architecture that closely resembles the Information-Centric Network (ICN) vision.

The ICN architectures such as NDN [16, 31] not only pro-vide native support for the functionalities that IoT applications intrinsically demand, but also address the lower-layer network challenges. It applies the same ADU across layers and gives the packet control back to the applications. It does not have artificial requirements on minimum MTU; the d stack actually reduces the size of packet headers. It is inherently multicast friendly since pervasive caching al-lows data to be reused by multiple consumers efficiently. Its data oriented communication avoids the issue of addressing and routing to a large number of sensor nodes and opens the opportunity for scalable routing and forwarding over application layer names. The data centric security avoids the overhead entailed by the channel-based security solutions and better suits the IoT devices with limited resources and intermittent connectivity. The architectural simplicity leads to smaller code size

for the application software, lower energy and memory footprint for the device, and better utilization of the network resource compared to the current IP-based IoT stack.

## CONCLUSION

When the TCP/IP protocol stack was developed in the early 1980s, the goal was to connect mainframe computers through the wired connectivity. Although the protocol stack kept evolving after the IP fiation was published, the fundamental assumption behind the architecture design has not changed. IoT networks represent a new type of applications where the IP architecture cannot easily t in without significant modification to the protocol stack.

In this paper, we discussed the challenges of applying TCP/IP to IoT networks that arise from the network and transport layers. We also discussed how the application layer protocols like CoAP provide their own solutions for the desired functionalities that the lower layers fail to sup-port. The mismatch was made more evident by comparing the current IoT stack with the desired architecture from the application's point of view. We proposed an architectural change that moves the REST-related components into the core network layer and eventually arrived at a more e cient architecture to the existing application layer solutions. This new IoT stack would embrace the ICN design and implement the required functionalities natively and more efficiently in-side the network.

## REFERENCES

BACnet - A Data Communication Protocol for Building Automation and Control Networks, Mar. 2013.

ZigBee IP Specification Revision 34. ZigBee Document 095023r34, Mar. 2014.

R. Barnes. Use Cases and Requirements for JSON Object Signing and Encryption (JOSE). RFC 7165 (Informational), Apr. 2014.

லிட்டெரி ஃபைண்டிங்ஸ்
பல்துறை ஆய்வுக்கான பன்னாட்டு ஆய்விதழ்

LITERARY FINDINGS

A Peer Reviewed International Journal of Multidisciplinary Research - ISSN :2278-2311

VOL: 12 JULY - 2023 ISSUE: 3

# THE TWO MOST IMPORTANT WAYS TO DEFEND AGAINST SECURITY THREATS

## THE TWO MOST IMPORTANT WAYS TO DEFEND AGAINST SECURITY THREATS

*** V.MOHANDASS***

***V.MOHANDASS***
I M.Sc (Computer Science),
Sri Vasavi College (self-finance wing)

**Abstract**

*An average of 5,000 to 7,000 new computer* security threats *are announced each year. That's as many as 19 every day. The rates at which new threats appear make it difficult to decide which ones require your attention. It might surprise you that, while your competitors waste money on high-tech, expensive, and sometimes exotic defenses, you can get far more value by concentrating on just two things you already do. You can spend less money and nothing you do otherwise will provide a better defense. The two things you need to do better are not a secret. You already know you need to do them. You know from your own experience that what I'm saying is true. The data in favor of doing them is overwhelming. Still, most companies don't do them well enoug.*

***Key Words: Computer Security, Threats, Waste, Spend.***

## Change your security focus



Most computer security defenders focus on the wrong things. They focus on specific threats and what they did after hackers broke in, not how they broke in. There may be hundreds of thousands of unique software vulnerabilities and hundreds of millions of unique malware families, but they all share about a dozen different ways that they initially exploited an environment, including:

- Unpatched software
- Social engineering
- Misconfigurations
- Password attacks
- Physical attacks
- Eavesdropping
- User errors
- Denial of service

Focusing on and reducing these root exploitation causes will help you significantly defeat hackers and malware. If you want to minimize computer security risk the fastest, identify the biggest root exploitation causes in your company that allow threats to do the most damage to your environment. Stop the biggest root cause and you stop every threat that uses that root cause.

Without a doubt, these two root causes are responsible for the most successful and damaging attacks in most companies and have been for decades. One of these root exploitation methods has likely been behind any big attack that has made news in the mainstream media. In my experience, when a company of any size or even the military suffers a big attack, it's can be traced to one of those two root causes.

Your company's experience may vary, and if it does, you can ignore this article. The biggest problems for the majority of readers are unpatched software and social engineering. If they fix those two things, it will do more to decrease security risk than all the other things they could do combined.

## Better software patching

Both hackers and malware look for unpatched software as a way to break into an environment. They prefer unpatched software as an attack vector because it requires a minimum of end-user involvement. The hacker can attack network computers and services looking for unpatched software, compromise them, and then move on to further internal targets, if necessary. Or they can try to trick a user into opening an email or visiting a website that attempts to exploit an unpatched vulnerability.

Sure, attackers sometimes use software exploitations for which no vendor patch is available (zero-day exploits), but only a few dozen known zero-days are used in a given year compared to the thousands of publicly known exploits. In any case, it's very difficult to prevent a zero-day attack and you would be far better off concentrating on the much larger, persistent threat. You don't know if your company will ever be

exploited by a zero-day attacker, but it will be attacked many times by threats looking to exploit unpatched software.

**Why patching is still a problem -- and how to fix it**

The key to driving down security risk the fastest is to concentrate on the highest risk software programs on your highest risk computers. Most companies try to patch every software program (and there are hundreds of thousands of unique programs) with the same effort. This approach is bound to fail. It's a numbers game of applied effort times the number of devices and software programs you have to patch.

There is a big difference between the most unpatched programs in your environments and the most likely to be exploited software programs. If you can understand that difference, then you understand this recommendation perfectly.

For example, for many years the most unpatched program on a Microsoft Windows computer was Microsoft Visual C++ Runtime Library. It was a program library that was redistributed with many third-party programs. Even though it was the most unpatched program, it was rarely exploited by attackers or malware. Why? Because it wasn't easy to exploit. It could be located in hundreds of thousands of different folders and usually wasn't advertising itself in a way that would make it easy to exploit. The same could be said for probably 95 percent of your installed software programs. They may be unpatched, but they aren't often exploited.

Instead, other popular unpatched programs like Sun/Oracle Java, Adobe Acrobat, and internet browsers, which were in consistent locations and easy to exploit, became the go-to exploitation targets. On servers, web server and database server software became the go-to targets. For that reason, you are far better off trying to perfectly patch internet browser-related software on end-user computers and advertising services on server computers.

**How to Protect Your Computer from Ransom ware**

Ransomware can prevent you from accessing your computer and encrypt your files so you can't use them. Routinely backing up your files on a secured cloud service or external hard drive is your best defense. If you use an external drive, go offline during backups and keep the drive disconnected from your computer when you're not backing up files. Install antivirus and anti-ransomware utilities, keep them updated, and enable automatic Windows updates. For the best shot at staying secure, avoid opening suspicious links or attachments, and make sure the websites you visit are secure.

**Method 1 : Backing up Your Files**

1. **Invest in a removable drive:** When used strategically, an external hard drive is among the most effective backup tools at your disposal. Only plug it into your machine when you back up files, and go offline during backups.

- If you keep your external drive connected to the computer while it's online, it could become hijacked along with your computer during a ransomware attack.

2. **Store your files with a secure cloud-storage service:** If you store your files with a service, like Carbonite, Dropbox, or Onenote, you'll most likely be able to restore any files hijacked during a ransomware attack. Just make sure your cloud storage service allows you to access earlier versions of your files, so you can recover the files as they were prior to the ransomware attack.

- Dropbox, for example, allows you to track changes made to all files within 30 days.

3. **Back up your files regularly:** If you don't already have one, create a consistent backup routine. If you work with important files every day, back them up on an external drive or with a cloud storage provider daily.

- If you save copies of all of your files frequently, you won't have to worry about losing them during a ransomware attack.

**Method 2 : Securing Your System**

1. **Install a dedicated ransomware blocker:** In addition to an antivirus service, you should install a utility that specifically protects your machine against ransomware. Two well-reviewed free options are Cybereason Ransomfree and Malwarebytes Anti-Ransomware.

- Recommended paid versions include Bitdefender Antivirus Plus 2017 and Webroot SecureAnywhere Antivirus. A one year subscription for each service costs less than $20 (US).

2. **Update your security software regularly:** Your operating system's security suite, antivirus utility, and ransomware blocker won't be effective unless you update them regularly. Nearly all ransomware attacks have targeted Windows, but a few have affected macOS. Regardless of your machine's operating system, install updates whenever they're offered.

- If you use Windows, click on the Control Panel and make sure your Windows automatic updates are enabled.
- If your machine runs macOS, go to System Preferences and select the App Store icon to modify your update settings. You can opt to automatically install system updates alone or auto-update apps as well.

3. **Use a pop-up blocker:** Ransomware hackers can embed malware in advertisements on websites you'd otherwise trust. Enable a pop-up blocker on whichever browser you use to decrease your risk of clicking on a malicious advertisement.

4. **Keep your browser updated. Install** your browser's updates and patches whenever they're released to keep it as secure as possible. Like your operating software, your browser periodically releases updates that contain security patches.

- Your browser's pop-up blocker and unprotected website detector need to be updated in order to be effective.

**Method 3 : Adopting Safer Internet Practices**

1. **Avoid opening suspicious emails and links.** Ransomware typically spreads through malicious links or attachments sent via email. Stay alert, and never open an email, attachment, or URL that seems suspicious.

- For the best chance at staying secure, just don't open anything from a company you don't do business with or from someone you don't know. If you have any doubts, don't click it.
- If you get an email with a subject such as "You'll never believe this!" from a friend, you should send them a text or phone call to see if they actually meant to send the email.

2. **Check the file extension before opening an attachment.** Before opening any attachment, you should make a habit of checking its file extension, which is the .doc, .pdf, or other abbreviation that's listed after the filename. Before opening an attachment, right click on it and select the option to scan for malware from the drop-down menu.

- Avoid opening .exe files, or executable files, since they can run a ransomware application. If you do need to exchange .exe files legitimately, share them using a cloud service or in a password-protected ZIP file.

3. **Avoid unprotected websites.** Whenever you visit a website, make sure you see "https" at the beginning of its address. The "s" stands for secure, and indicates that the website is encrypted.

- If your session isn't encrypted, any account that you sign into could be vulnerable. To protect your information, enter your passwords only into encrypted pages, avoid staying permanently signed into accounts, and use a different password for each account.

**4. Disconnect immediately if you've opened a suspicious file.** If you've clicked on something suspicious but a ransomware screen hasn't yet appeared, disconnect from Wi-Fi or unplug your wired connection immediately. Encrypting files to hijack them takes some time, so if you act quickly you might be able to stop the ransomware application before it finishes.

- Disconnecting your machine can also help protect other computers on your network. In addition to disconnecting the infected computer, you should disable Wi-FI and Bluetooth on all machines within your network.

**References:**

https://www.wired.com/2016/05/4-ways-protect-ransomware-youre-target/

https://www.computerworld.com.au/article/633111/two-most-important-ways-defend-against-security-threats/

https://www.csoonline.com/article/3253331/patch-management/the-two-most-important-ways-to-defend-against-security-threats.html

https://www.itworld.com/article/3253331/patch-management/the-two-most-important-ways-to-defend-against-security-threats.html

லிட்டெரி ஃபைண்டிங்ஸ்
பல்துறை ஆய்வுக்கான பன்னாட்டு ஆய்விதழ்
LITERARY FINDINGS
A Peer Reviewed International Journal of Multidisciplinary Research - ISSN :2278-2311
VOL: 12 JULY - 2023 ISSUE: 3

# வைரமுத்து கவிதைகளில் சமுதாயம்

## SOCIETY IN VAIRAMUTHU POEMS

***N.SIVARAMAN***

***ந.சிவராமன்**

ஆய்வியல் நிறைஞர் (பகுதிநேரம்)

தமிழாய்வுத்துறை

மஹேந்ரா கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)

காளிப்பட்டி, நாமக்கல்

**Abstract**

For every Tamil fan, when it comes to songs or poems, the first person who comes to our mind is Kavipperarasu Vairamuthu. A renowned lyricist and poet in the Tamil film world, he has won various awards including the National Award and has been awarded the title of "Kappiyap Perarinjar". The penitent son of Tamil. A poet who made the world aware of the wisdom and rise of the Tamil people. This article examines the thoughts about society found in Vairamuthu's poems, the way in which he portrays the problems in the society in each of his poems is special. Poetry is considered the soul of society and the voice of the soul.

***Key Words: Tamil, World, Wisdom, Penitent, Society.***

**முன்னுரை**

ஒவ்வொரு தமிழ் ரசிகனுக்கும் பாடல்கள் என்றாலோ, கவிதைகள் என்றாலோ நம் நினைவுக்கு முதலில் வருபவர் கவிப்பேரரசு வைரமுத்து அவர்களே. தமிழ்த் திரையுலகில் புகழ் பெற்ற பாடலாசிரியராகவும், கவிஞராகவும் திகழும் அவர் தேசிய விருது உள்பட பல்வேறு விருதுகளைப் பெற்று "காப்பியப் பேரறிஞர்" என்ற பட்டத்தைப் பெற்றவர். தமிழ்த்தாயின் தவப் புதல்வன். தமிழனின் ஞானத்தையும், எழுச்சியையும் உலகறியச்செய்த ஊற்றுக்கவிஞன். தாம் எழுதிய ஒவ்வொரு கவிதைகளிலும் சமூகத்தில் ஏற்படும் சிக்கல்களைப் படம்பிடித்துக் காட்டும் விதம் சிறப்புக்குரியது வைரமுத்துக் கவிதைகளில் காணப்படும் சமுதாயம் பற்றிய சிந்தனைகள் இக்கட்டுரை ஆராய்கிறது.

**கவிஞர்களின் பார்வையில் சமுதாயம்**

கவிஞன் தன் காலத்தைத் தன் கவிதைகளின் வழியே வெளிப்படுத்த வேண்டும். அவன் வாழ்கின்ற காலத்தைக் கணிக்கின்ற காலத்தைக் காட்டுகின்ற கண்ணாடியாக அக்கவிஞனின் படைப்புகள் திகழ வேண்டும் கவிஞர்கள் சமூகச்சீர்கேடுகளையும், கொடுமைகளையும் கண்டு கொதித்து எழுகின்ற ஆற்றலும், அச்சீர்கேடுகளை நிவர்த்தி செய்கின்ற தீர்வுகளையும், மானுடம் மேம்படுத்துவதற்குரிய மனித நேயத்தையும் தன் கவிதைக் கட்டுமானத்திற்குள் கொண்டு வரவேண்டும். சமூகத்தை தன் கவிதைகள் மூலம் விமர்சிப்பவராக கவிஞர்கள் திகழ வேண்டும் என்கிறார் ஆங்கிலக் கவிஞர் ஷெல்லி அவர்கள்

**“உண்மையான கவிஞன் தன் காலத்தை**

**விமர்சிப்பவனாக இருக்க வேண்டும் அத்தகைய சூழலில்**

**தன் மேல் விழுகின்ற பழி. பாவம், கோபம், அவமானம்**

**போன்றவற்றைப் பொருத்துக்கொள்ள வேண்டும்”**

என்கிறார்.

**கவிதைகளில் சமுதாயம்**

கவிதைகள் சமுதாயத்தின் ஆன்மாவாகவும், ஆன்மாவின் குரலாகவும் கருதப்படுகின்றன. சமுதாயத்தில் காணப்படும் பிரச்சனைகளால் கவிஞர்களின் உணர்வுகளும் சிந்தனைகளும் பாதிக்கப்படுவதாலும், அப்பாதிப்பிலிருந்து தானும் தன் சமுதாயமும் விடுபடுவதற்கான தீர்வுகள் கவிதைகளின் வாயிலாக வெளிப்படுகின்றன எனக் கவிதையின் ஆற்றலை

**“உரைநடையைக்காட்டிலும், மேடைப் பேச்சைக்காட்லும்**

**கவிதை ஆற்றல் வாய்ந்த கருவியாகப் பயன்படுகிறது”**

என அறிஞர் தட்சிணாமூர்த்தி குறிப்பிடுகின்றார்.

**கவிதையின் பயன்**

கவிதைகள் சமூகத்தில் காணப்படும் அநீதிகளைப்படம் பிடித்துக் காட்ட வல்லதாகவும், சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் கண்ணெதிரே காணப்படும் கொடுமைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகவும் இருக்க வேண்டும். சமூகப் புரட்சிக்கான அடித்தளத்தை அது உறுதியுடையதாகவும் புதியதோர் சமுதாயத்தை உருவாக்குவதாகவும் கவிதையின் நோக்கும் பயனும் அமைய வேண்டும்.

**“உழைப்பாளியின் உரிமையை எதிரொலிக்கின்ற பொழுது**

**ஒரு உளியின் உரசலையும்**

**மனோபலம் மகுடம் சூட்டுகின்ற பொழுது**

**ராக்கெட்டின் உந்துதலையும்**

**காதலின் கீதத்தை இசைக்கின்ற பொழுது ஒரு**

**கன்னக் கிள்ளலையும்**

**சோகத்தின் சுமையைச் சுட்டுகின்ற பொழுது ஒரு**

**பஞ்சின் ஒத்தடத்தையும் கவிதை**

**கொண்டிருக்க வேண்டும் என்கின்றார்”**

கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்கள்

**அரசியல்**

சமுதாயத்தில் காணப்படும் ஏற்ற தாழ்வுகளுக்கு இன்றைய அரசியல் நிலை பெரிதும் காரணமாய் உள்ளது. இன்றைய அரசியல் நிலைமையை மக்களுக்கு எடுத்துக்கூறி மக்கள் மத்தியில் புரட்சிகரமான சிந்தனையை உருவாக்குவதே கவிதையின் நோக்கமாகும் என்கின்றார் அறிஞர் டேலெவின் என்பார்.

சமுதாயத்தில் ஏற்படும் இன்பதுன்பங்கள் பொருளாதார மாற்றங்கள், சாதிக்கொடுமை போன்றவற்றிற்கு அடிப்டைக்காரணங்கள் அமைபவர்கள் இன்றைய அரசியல் வாதிகளே "சத்தியம்" சர்க்கரைப் பொங்கலாக இன்று மாறிவிட்டது. தேர்தலின் போதுமட்டுமே நினைக்கிறார்கள் என்பதைக் கவிஞர் சலவைக்குப் போடாத ஜனநாயகம் எனும் கவிதை மூலம் விளக்குகிறார்.

**"ஜனநாயகம் மலைதான்**

**சத்தியமோ – அந்த**

**மலையில் தொலைந்த மணி**

**எங்கள் - வாக்காளர்**

**எல்லோரும் சேர்ந்து**

**மலையில் தொலைந்த மணியை**

**ஐந்தாண்டுக்கு ஒருமுறை**

**அவசரமாய்த் தேடுவர்"**

என்று குறிப்பிடுகிறார்.

**சுதந்திரக் கனவு**

நம்நாடு ஆங்கிலேயரிடமிருந்து விடுதலை பெற்று இன்றைய அரசியல்வாதியிடம் சிக்கித்தவிப்பதை ஒரு நாட்டின் குடிமகனின் நிலையிலிருந்து கவிஞர் குறிப்பிடுகிறார்.

**"அவன்**

**ஒரு பட்டுவேட்டி பற்றிய**

**கனவில் இருந்த போது**

**கட்டியிருந்த கோவணம்**

**களவாடப்பட்டது"**

என்று 1947 ஆகஸ்டு 15 என்ற கவிதையின் மூலம் நாட்டுமக்கள் அரசியல் வாதிகளால் எவ்வாறு ஏமாற்றப்படுகிறார் என்பதை நமக்கு எடுத்துக்காட்டுகின்றார்.

**மதவேறுபாடு**

"மதம்" என்ற ஒன்றைக் கருவாகக் கொண்டு இன்று சமூகத்தில் பல்வேறு கொடுமைகள் நடைபெறுகின்றன. "மதம்" என்றாலே வன்முறையின் மொத்த அடையாளமாகக் கருதப்படுகிறது.

**"ஒன்றே குலம் ஒருவனே தேவன்"** என்பார் திருமூலர்

**"யாதும் ஊரே யாவரும் கேளிர்"** என்பார் பூங்குன்றனார்.

அத்தனையும் சொல்லி என்னாயிற்று, "எம்மதமும் சம்மதம்" என்ற நிலைமாறி ஜனங்களை மிருகமாக்கி வருகிறது மதம் என்கிறார். பாரதி

சாதியும் அப்படித்தான் கலப்பு மணம் எனும் கவிதை மூலம் வெளிப்படுத்துகிறார் கவிஞர்

**"கலர்த்துணிகள்**

**கலப்பு மணம் புரிந்துகொண்டால்**

**தேசியக் கொடி என்று**

**சிரம் தாழ்த்துவீர்**

**ஒரு ஆணும் பெண்ணும்**

**கலப்பு மணம் புரிந்தால் மட்டும்**

**காலிபண்ணச் சொல்வீர்கள்"**

என்று குறிப்பிடுகின்றார்.

**கல்வி**

**"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவருக்கு**

**மாடல்ல மற்ற யவை"**

என்று கல்வியின் அவசியத்தை அழிவில்லா செல்வம் என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

சமூக வளர்ச்சிகளுக்கும், சமூகமாற்றத்திற்கும் அடிப்படையாக அமைவது கல்வி. அறியாமை இருளகற்றும் கல்வியை நாம் அனைவரும் பெறவேண்டும். ஆனால் இன்று சில கல்வி நிறுவனங்கள் சேவை மனப்பான்மை விடுத்து வியாபார நிறுவனங்களாக மாறிவிட்டன.

**"இந்தப்பட்டறையில்**

**கூர்செய்யக்**

**கடப்பாறைகளைக் கொடுத்தோம்**

**அவை**

**குண்டுகளாய்த் திரும்பிவந்தன"**

எனக் கல்வி நிறுவனங்களின் வியாபார நோக்கை அவனுக்கே அவன் அந்நியமானான் என்ற கவிதைமூலம் விளக்குகிறார்.

**இன்றைய சமூகம்**

இன்றைய சமூகத்தில் பெரும்பாலோனோர் தங்களின் அதிகப்படியான நேரங்களை சினிமாக்களிலேயே தேவையற்று செலவழித்துக் கொண்டிருக்கிறார்கள். இதனை

**"நம்மூர் ஜனங்கள்**

**வேறெங்கிலும் வடித்த**

**வேர்வையை விடவும்**

**சினிமா டிக்கெட்டுக்குச்**

**சிந்தியதே அதிகம்"**

என்று தீக்குச்சிக்குத் தின்னக்கொடுப்போம் எனும் கவிதை மூலம் வெளிக்காட்டுகிறார்.

**முடிவுரை**

இவ்வாறு சமுதாயமும் இலக்கியமும் ஒன்றைவிட்டு ஒன்றை பிரிக்க முடியாதபடி இணைந்து காணப்படுகின்றன. இன்றைய சூழலில் அரசியல், பொருளாதாரங்களாலும், சாதி, மதப்பிரச்சனைகளாலும் சமூகம் எவ்வாறு சீர்கெட்டுக் காணப்படுகிறது என்பதைக் கவிஞர் தம் கவிதை வரிகளில் வெளிப்படுத்துகின்றார்.

**துணைநூற்பட்டியல்**

1. பாலா - புதுக்கவிதை ஓர் பார்வை – 1991.
2. சுபாசு – எது புதுக்கவிதை? – 1997.
3. வைரமுத்து – வைரமுத்து கவிதைகள் - சூர்யா வெளியீடு.

லிட்டெரி ஃபைண்டிங்ஸ்
பல்துறை ஆய்வுக்கான பன்னாட்டு ஆய்விதழ்
LITERARY FINDINGS
A Peer Reviewed International Journal of Multidisciplinary Research - ISSN :2278-2311
VOL: 12 JULY - 2023 ISSUE: 3

# மூன்றாம் உலகப்போர் புதினம் காட்டும் சமூகப் பிரச்சினைகளும் தீர்வுகளும்

## WORLD WAR III INNOVATED SOCIAL PROBLEMS AND SOLUTIONS

***Dr.P.SUDHARANI**

***முனைவர் பொ.சுதாராணி**
உதவிப்பேராசிரியர் தமிழ்த்துறை
அருள்மிகு பழனியாண்டவர் மகளிர் கலைக்கல்லூரி
சின்னக்கலையம்புத்தூர்.

**Abstract**

Literature is one of the greatest treasures of mankind. Literature changes in form from time to time and concept from perspective. Yet the works of literature speak only of man. Literature that is socially conscious and can contribute to the welfare of the society in some way survives the times. In this way, the literature of this era has started to transform into a weapon of struggle against social injustice rather than just entertainment. Therefore, the literature of this era deals with contemporary problems and provides solutions on various platforms.

***Key Words: Literature, Greatest, Mankind, Concept, Struggle.***

இலக்கியங்கள் மனித இனத்திற்குக் கிடைத்த மாபெரும் செல்வங்களாகும். இலக்கியங்கள் காலந்தோறும் வடிவத்திலும், பார்க்கும் கோணந்தோறும் கருத்திலும் மாற்றமடைகின்றன. ஆயினும் இலக்கியங்களின் பாடுபொருட்கள் மனிதத்தை மட்டுமே பேசுகின்றன. சமூக அக்கறைகொண்ட, சமூகத்தின் நலனுக்கு ஏதோ ஒரு வகையில் பங்களிக்கக்கூடிய இலக்கியங்களே காலத்தால் நிலைத்து நிற்கின்றன. அவ்வகையில் இக்கால இலக்கியங்கள் வெறும் பொழுதுபோக்குகளாக அன்றி சமூக அநீதிக்கு எதிரான போராட்ட ஆயுதங்களாக மாற்றமடையத் தொடங்கியுள்ளன. எனவே இக்கால இலக்கியங்கள் சமகாலச் சிக்கல்களைப் பேசுவதுடன் பல்வேறு தளங்களில் நின்று தீர்வும் தருகின்றன.

**மூன்றாம் உலகப்போர்**

கவிஞர் வைரமுத்துவின் புதினங்களில் குறிப்பிடத்தகுந்த ஒன்று ‘மூன்றாம் உலகப்போர்’ புதினம் ஆகும். புவி வெப்பமய மாதலாலும், மழை குறைவினாலும், தொழில் மயமாவதாலும் விவசாயம் வீழ்ந்து வருவதைக் காணச் சகிக்காத ஒரு விவசாயியின் அறச்சீற்றமும், அறம் சார்ந்த, சமூகச் சீர்குலைவிற்கு எதிரான நேர்மையான கேள்விகளும் ‘மூன்றாம் உலகப்போர்’ புதினத்தின் உயிர்நாடியாகத் திகழ்கின்றன. தற்போது உலகை அச்சுறுத்தி வரும் சமூகச் சிக்கல்களையும், பலகாலமாக மனதை நெருடிக்கொண்டிருக்கும் உறவுச் சிக்கல்களையும் விரிவாகப் பேசி, நடுவாண்மை பிசகாது தீர்வு கூற முற்பட்டிருக்கிறார் கவிஞர் வைரமுத்து.

**சமூகச் சிக்கல்கள்**

கருத்தமாயி, கிட்டம்மா தம்பதியின் மூத்தமகன் சின்னப்பாண்டி, இளையமகன் முத்துமணி. வேலை கிடைக்காது கையூட்டுக் கொடுத்தேனும் வேலை பெற முயற்சிக்கும் சின்னப்பாண்டி, அடுத்தடுத்து சமூக மதிப்புகளுக்கெதிரான செயல்களில் இறங்குகிறான். தவறுகளை எல்லாம் ‘சாமர்த்தியம்’ என்று பெயரிட்டு அழைக்கும் வேலைகளைச் செய்கிறான். தன் பூர்வீக பூமியைத் தொழிற்சாலைக்கு விற்றுவிடத் துடிக்கிறான். வனத்தை அழிக்கும் அரக்கர்களுக்குத் துணை நிற்கிறான். ஒரே இரவில் கோடீஸ்வரனாகத் துடிக்கும் பல இளைஞர்களின் பிரதிநிதியாய்ச் சின்னப்பாண்டி காட்டப்படுகிறான். தன் தந்தையை எதிர்க்கவும் முற்படுகிறான். சாம, பேத, தான, தண்ட முயற்சிகளில் ஈடுபட்டு அந்த நிலத்தைக் கையகப்படுத்த முனைகிறான்.

இளையமகன் முத்துமணி நம்பிக்கை நட்சத்திரம். சின்னப்பாண்டியினால் உருவாக்கப்படும் சிக்கல்களுக்கும், சமூகமே உருவாக்கி வரும் சிக்கல்களுக்கும் தீர்வு காண விரும்புகிறான் முத்துமணி. கல்லூரி ஆய்வு மாணவன். ஆசிரியர்களும், எமிலி எனும் அமெரிக்கத் தோழியும், இஸிமுரா எனும் ஜப்பானியத் தோழனும் முத்துமணிக்கு இச்சிக்கல்களைத் தீர்க்க உதவிபுரிகின்றனர். மரங்களை அழித்தலும், மரபு வழிப்பட்ட வேளாண்மையைக் கைவிடுதலும், அளவுமீறி தொழிற்சாலைகளைப் பெருக்கிக் கொண்டு செல்லுதலும் நம்மை நரகக் குழிக்குள் தள்ளுபவை என்பதை இந்நண்பர்கள் மூவரும் ஊர் மக்களிடையே உரக்கப் பேசுகின்றனர். புவி வெப்பமயமாதல், பருவ நிலைகள் மாறுதல் ஆகிய பெரும் விளைவுகள் மரம் அழித்தல் எனும் ஒற்றைப் புள்ளியில் துவங்குகின்றன எனும் விழிப்புணர்வை மக்களுக்கு ஊட்டுகின்றனர்.

முக்கியமாக இளம் தலைமுறையினரின் இம்முயற்சியில் சற்றும் குறைவறாத சமூக அக்கறையுடன் திகழ்பவர், பெரியவர் கருத்தமாயி. இன்றும் கருத்தமாயி போன்றவர்களின் உருவில் நாம் எண்ணற்ற நம்மாழ்வார்களைக் காணமுடிகிறது. மரபு வழிப்பட்ட வேளாண்மையைக் காக்கப் போராடுதலும், நவீனத் தொழில்நுட்பத்திற்கு வேளாண்மை மாற வேண்டியதன் அவசியத்தை உணர்தலும் தலைமுறை தலைமுறையாக நம்மிடையே உள்ள இயற்கையோடு தொடர்புடைய நம்பிக்கைகளைப் பாதுகாத்தலும் என்று கருத்தமாயியின் வலிய முதிய கரம் இளங்கரங்களுடன் கைசேர்த்து இவ்வறப் போராட்டத்தில் இணைகிறது.

**வேளாண்மை அழிதல்**

வேளாண்மை அழிந்து வருதல் என்பது தற்போது உலகம் முழுவதும் பரவிக்கொண்டிருக்கும் ஒரு கொடிய பிணி. விளைபொருட்களுக்கு விலை இல்லை, வேளாண்மைக்குத் தண்ணீரும், மின்சாரமும் போதுமான அளவு இல்லை, விளைநிலங்களைத் தொழிலகங்கள் கைப்பற்றுதல் எனும் பிரச்சினைகளை வேளாண் தொழில் எதிர்நோக்குகிறது. மரங்களை அழித்தலாலும், அதீத பாலித்தீன் பயன்பாட்டாலும் மாறி வரும் பருவநிலை வேளாண்மைக்கு முக்கிய எதிரி. இத்தகைய சிக்கல்களைப் பேசும் மூன்றாம் உலகப்போர் புதினம் அதற்கான தீர்வுகளையும் பதிவு செய்ய முற்படுகின்றது. முறைப்படுத்தப்பட்ட நீர்ப்பயன்பாடு, பாலித்தீன் பயன்பாட்டைக் குறைக்கும் விழிப்புணர்வுப்பிரச்சாரம், திடக்கழிவு மேலாண்மை, மரம் நடுதல், மரம் அழிக்க எதிர்ப்புத் தெரிவித்தல் என்று மேற்கூறிய பிரச்சினைகளுக்குரிய தீர்வுகளை இளைஞர்களின் வாயிலாக இப்புதினம் பதிவுசெய்கிறது.

**அறம் சார்ந்த பிரச்சினைகள்**

சமூகத்தின் கரும்புள்ளிகளாகத் திகழும் கயவர்கள் சிலரை வாசகர்களுக்கு அடையாளம் காட்ட சின்னப்பாண்டி கதா பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. உயர்ந்த சமூக மதிப்புகளின் மீதான அலட்சியம், உறவுகளைக்கூட ஆதாய நோக்கில் காணுதல், தன் சுய முன்னேற்றத்திற்காகச் சமூகத்தைச் சீர்குலைக்கும்

வேலைகளைச் செய்தல், அப்பாவி மக்களைப் பணத்தாசை காட்டியும், நைச்சியமான போலிப்பாச வார்த்தைகளைக் கூறியும் நிலங்களைத் தொழிற்சாலைக்கு வாங்கிக்கொடுக்கும் கைக்கூலியாகச் செயல்படுதல் என்று சின்னப்பாண்டி அறத்திற்கு எதிரான பிரச்சினைகளின் ஒட்டுமொத்த உருவமாய்த் திகழ்கிறான்.

இப்புதினத்தில் சின்னப்பாண்டி பொருளாதாரத்தில் மேம்பட்டாலும், மன அமைதி பெற்றவனாகவோ, உறவு நிலையில் மேம்பட்டவனாகவோ காட்டப்பெறவில்லை. மிகுந்த மனப்போராட்டமும், மன உளைச்சலும் மிக்கவனாகவே காட்டப்பெறுகிறான். இவனது இந்த நிலை வாசகர்களைச் சிந்திக்கச் செய்வதே ஒரு தீர்வு. இறுதியில் கருத்தமாயியின் கரங்களால் அவன் உயிர்விடும்போது வாசகர்களுக்கு அவனது இறப்பு உணர்த்தும் செய்தியே மேற்கூறிய அறம் சார்ந்த பிரச்சினைகளுக்குத் தீர்வாகும்.

**உறவு சார்ந்த உளச்சிக்கல்கள்**

பெற்றோர்கள் நற்குணங்கள் நிரம்பியவர்களாக இருப்பினும் சில நேரங்களில் அவர்களது பிள்ளைகள் தீயவர்களாக இருப்பது உண்டு. அவ்வாறு இருப்பின் அவர்களது உறவுநிலை சுமூகமாக இருக்காது. அங்கு நீடிக்கும் உளச்சிக்கலே மிகப்பெரிய பிரச்சினை. இப்புதினத்தில் கருத்தமாயி குடும்பத்தினருக்கும், சின்னப்பாண்டிக்குமான உறவுநிலை இத்தகையதே. இதற்கான தீர்வை வாசகர்களின் கையிலேயே இப்புதினம் ஒப்படைக்கிறது.

ஆண் பெண் நட்புநிலையில் தடுமாறும் முத்துமணியின் உளப்போராட்டம் பின்னாளில் அவனே அதை மாற்றிக்கொண்டு மீண்டு வருதல் ஆகியன அழகாகச் சித்தரிக்கப்பட்டுள்ளன. நம் தமிழ்ச் சமூகம் ஆண்டாண்டு காலமாக ஆண் பெண் உறவுநிலையில் உள்ள கோட்பாடுகள் சிறிது மாற்றி இப்புதினத்தில் எழுதப்பட்டுள்ளன. தனி மனித விமர்சனங்களைப் புறந்தள்ளும் வலிமை பெறுவதே இதற்கான தீர்வாய்க் காட்டப்படுகிறது.

**முடிவு**

மரபுகளைக் கைக்கொண்டிருக்கும் ஒரு தலைமுறை, புதிய கோட்பாடுகளில் காலெடுத்து வைக்கும் மற்றொரு தலைமுறை, இவ்விரு தலைமுறைக்கும் இடையே உள்ள பொதுவான சிக்கல்கள், இவ்விருவருக்குமான தனிப்பட்ட சிக்கல்கள் ஆகியவற்றைப் பேசி அவற்றிற்கான தீர்வுகளை இப்புதினம் முன்வைக்கிறது.

லிட்டெரி ஃபைண்டிங்ஸ்
பல்துறை ஆய்வுக்கான பன்னாட்டு ஆய்விதழ்
LITERARY FINDINGS
A Peer Reviewed International Journal of Multidisciplinary Research - ISSN :2278-2311

VOL: 12 | JULY - 2023 | ISSUE: 3

# சமூக மரபும் அகமரபுச் சிந்தனைகளும், எதிர்வினையாக்கமும் கணையாழிச் சிறுகதை வழிப்பார்வை

## SOCIAL TRADITION AND INHERITANCE IDEAS AND REACTIONS - KANIYAZHI'S SHORT STORY OVERVIEW

*M.SENTHAMILSELVI

*மு.செந்தமிழ்ச்செல்வி
முனைவர் பட்ட ஆய்வாளர்
மனோன்மணியம் சுந்தரனார்
பல்கலைக்கழகம்
உடுமலைப்பேட்டை

**Abstract**

In Tamil society, a woman who has lost her husband is called Kaimbena. The girl is isolated and neglected by the society. She is forced to walk like everyone else in public places without any adornment. She is confined to the house dressed as a bat and with a shaved head. There is also a custom that characterizes such a condition as Kaimai Nonbu. The situation has changed today due to the efforts of some social activists. Based on this statement, the heroine of the Kal short story lives with her husband based on the social convention of the first concept while suppressing her desire for the second concept of loku. But her repressed lust comes in the form of a fantasy of coexistence with Loku through a dream. Her consciousness refuses to accept this idea. This short story symbolizes that the woman's steadfast soul is tempted like a toad inside a solid stone gnaws away at the stone.

***Key Words: Situation, Walk, Efforts, Desire, Fantasy Solid, Stone.***

உளவியல் என்பது நடத்தை முறைமெய்ம்மைகளை விளக்கும் அறிவிலாகும். மனித குலம் தோன்றிய காலந்தொட்டு, உளவியல் ஆய்வுமுறையும் தோன்றிற்று எனலாம். மனித சமுதாய வரலாற்றினை நோக்கும்போது, தன்னுடன் இணைந்து வாழும் மனிதர்களை உற்றுநோக்கும் இயல்பு ஒவ்வொரு மனிதனிடமும் காணப்படுகிறது.

மற்றவர்களின் நடத்தை முறைகளுக்குத் தக்கவாறு தனது நடத்தையை மாற்றிக் கொள்ளவும். தனது இயல்பிற்குத் தக்கவாறு, மற்றவர்களின் நடத்தையை முறைகளைச் சீரமைக்கவும் இத்தகு உளவியல் ஆய்வு பயன்படுகிறது.

உளவியலானது, மனிதனின் சிந்தனையை ஒழுங்கமைத்து அதனை அறிவு வயப்படுத்துவதாகவும், மனித இனத்தின் செயலறிவை விளக்கும் அறிவியலாகவும் விளங்குகிறது. மனித மனத்தின் இயல்பினைக் கொண்டே, அவர்களின் வாழ்க்கைச் செயல்கள் அமைகின்றன. தனி மனித உணர்வானது, பல்வேறு கூறுகளில் பகுத்தாராயப்பட வேண்டிய ஒன்றாக விளங்குகிறது.

ஒவ்வொரு மனிதரின் செயல்பாடுகளையும் உற்றுநோக்கி அதனைக் கொண்டே அவர்களின் மன இயல்புகள் கணிக்கப்படுகின்றன. அதனை அடிப்படையாகக்கொண்டே இலக்கியங்கள் படைக்கப் படுகின்றன. ஆகையால், நடத்தை முறை வாழ்க்கையை, கருதுகோளாகக் கொண்ட உளவியற்சிந்தனை, இலக்கிய உருவாக்கத்துக்கு உறுதுணையாக அமைகிறது.

மனித மனவோட்டத்தின் பல்வேறு செயல்பாடுகளை, சுற்றுப்புறச் சூழலுடன் பொருத்திக் காண்பது உளவியல் ஆய்வில், ஒரு படிநிலை எனலாம். அவ்வகையில் இலக்கியங்கள் மனித மனத்தின் செயல்பாடுகளை கொள்கை உணர்வினை அடிப்படையாகக் கொண்ட கருத்தாக்கம், எண்ணங்களை பின்னோக்கிச் செலுத்தி வாழ்வியல் நிகழ்வுகளை உற்றுநோக்கும் நினைவோட்டம் மெய்ப்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட உணர்வுநிலை என்னும் கூறுகளில் விளக்குகின்றன. இவை, ஆண்களின் மனஇயல்புகளையும், பெண்களின் மனஇயல்புகளையும் பல்வேறு நிலைக்களன்களில் பதிவு செய்துள்ளன. பெண்களின் உணர்வு நிலையில் ஏற்படும் பிரச்சனைகளைக் கருதுகோளாகக் கொண்டு இவ்ஆய்வு தொடர்கிறது.

1. பெண்களின் உணர்வுநிலைகளை ஆண்மையச் சமூக மரபினை ஒட்டி வடிவமைக்கப்பட்டவை.
2. சமூகத் தடைக்கட்டுகளை நீக்கி, அதிலிருந்து மீட்சி பெற விரும்புதல் என்னும் இருவேறு பொருண்மைகளில் பொருத்திப் பார்க்கலாம்.

அவ்வகையில் கணையாழி இதழ்ச் சிறுகதைகளில் இடம்பெற்றுள்ள பெண்களன் உளவியற் பிரச்சனைகளைப் பதிவு செய்தலும், அவற்றிற்கு தீர்வு காணுதலும் இந்த இயலின் மையப்புள்ளியாக அமைகின்றது.

**கைம்மை நிலை :**

தமிழ்ச் சமூகத்தில் கணவனை இழந்த பெண்ணைக் கைம்பெண் என்று குறிப்பிடுவர். அப்பெண் தனிமைப்படுத்தப்பட்டு இச்சமூகத்தால், புறக்கணிக்கப்படுகிறாள். எந்தவித அலங்காரமும் இன்றிப் பொது இடங்களில் எல்லோரையும் போல நடமாட முடியாத நிலைக்குத் தள்ளப்படுகிறாள். வெள்ளை உடை உடுத்தி மொட்டையடிக்கப்பட்ட தலையுடன் வீட்டினுள்ளே முடக்கப்படுகிறாள். இத்தகைய நிலையினைக் கைம்மை நோன்பு என்று சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற வழக்கமும் உண்டு. சமூகச் சான்றோர்கள் சிலரின் முயற்சியால் இந்நிலை இன்று மாற்றம் கண்டுள்ளது.

ஆரம்பகாலத்தில் பெண்ணினத்தின் மீது திணிக்கப்பட்ட இக்கைம்மை நிலையி மிகவும் வருந்தத் தக்கதும் கண்டிக்கத்தக்கதுமாக அமைகிறது. இதனை “கிருஷ்ணாங்கினி” எழுதிய “தலை அலங்காரம்” என்னும் சிறுகதை மிகவும் அழகாகப் பதிவு செய்துள்ளது.

In order to improve green movements worldwide and raise public attention to environmental problems, most organizations prefer environmental advertisements through media or newspapers as green techniques for introducing their products to environmentally responsible consumers. Green advertisement is one of the ways to influence consumers' purchasing behavior that will strongly encourage consumers to buy products that are ecofriendly to our environment. Besides, direct their attention to the positive consequences of their purchasing behavior, for themselves as well as the environment (Delafrooz, Taleghani, & Nouri, 2014). Davis (1994) describes there are three elements in green advertisement. Firstly, the company will start a statement that is related to the environment. Secondly, the company will demonstrate its concern and dedication to improve the environment by its changed procedure from the green advertisement.

**Businesses and Green Marketing**

There are significant alterations for activation in the business world in relation to the importance towards the environment and the society. Corporate ethical code of the 21st century is being green. Without a doubt, the main objective of companies is profitability but it is highly difficult for companies with the particular objective of making profit to achieve sustainability. Companies should be mindful of their duties towards the environment and the community similarly as towards customers, workers and shareholders.

Climate change, environmental problems and social problems will confront the leaders of future generation for engaging effective and inclusive determinations.

**Marketing Mix in Green Marketing**

The marketing mix is derived from conventional marketing (Kontic, Biljeskovic, & Brunninge, 2010). Marketing mix basically are the different ways invented by a company to bring a good or service to the market. In green marketing, environmental concern is an element that marketing mix must give on fully accountability. Marketing mix ordinarily known as 4P's comprises of components such as product, price, place and promotion. In the extended marketing mix as in case of service sector, three other components such as people, physical evidence and process are combined to make up 7P's. According to green marketing principle every components in the marketing mix will have a green perspective from establishing to introducing a product to the market (Arseculeratne & Yazdanifard, 2014). When a product is manufacture under a process of ecofriendly and harmless to the environment, the product may be named as green product. During production process, environmental pollution is an issue that business has to reduce. Natural resources ought to be preserved during physical removal of raw materials from a product. Significant area must be form by waste management in this connection. Ecofriendly design product should be manufactured and packaging process should lessen contamination and pollution. Product enhancements certainly involve a significant amount of sunk costs but they are worth the resolution since development in the product would bring about a turnaround in sales. The manner of reversed logistics whereby customers return to the business used wrapping, packaging and even the recycled product itself would considerably help to conserve the environment (Arseculeratne & Yazdanifard, 2014). Going green is absolutely pricey as they comprise various costs such as teaching nation, gadget, establishment of modern technology, absorbing extrinsic costs, converting waste into recycled products. Undoubtedly these will cause the products to be more expensive. Therefore green price is termed as premium price. These will have additional stress on promotions due to premium price.

**Green Consumer**

Consumerism can be defined as a progress which originally started as a practice which was presented to safeguard consumers against operations of unethical business. Over time this has widespread and grow into wider in nature. When today's agenda with regards to consumer advocacy is taken into study it can be recognized that conservation of the environment is the most important element (Dono et al., 2010). There is an impact growth in the concern revealed towards environmental conservation leading to "green consumerism"(Eriksson, 2002).The green consumer is typically known as one who support eco-friendly attitudes and/or who purchases green products over the standard alternatives (Boztepe, 2012). Almost all consumers are conceivably green consumers. For instance, when a consumer has option to choose from two similar products, the consumer will choose to buy environmentally friendly product (Awan & Raza, n.d.).

**Consumers' Environmental Concerns**

Consumers' environmental concerns are connected to the benefit towards the biophysical environment and its issues connected to the consumer and the surroundings. Initially, gender plays an essential role in consumerism and environmental consciousness (Kaufmann, Panni, Or phanidou, 2012). It has been recognized by prior research that women were more concerned about the environment than men. Besides, it has been told that consumers show environmental concerns depending on product features, precision of green product claims, information provided on the products and its advantages (Suki, 2013).For consumer packaged goods purchases, women are usually the primary target audience as they still do the bulk of today's household shopping. For instances, Seventh Generation, a viable personal care and household cleaning products manufacturer, targets the middle along with new mothers, whom they find to be specifically concerned in creating the world a better place for their newborns. Other the other hand, packaging plays a crucial role in the product's sustainability. Consumers are conscious of environmental packing choices progressively and are shaping their behaviour as a consequence.

## Benefits of Green Marketing

Nowadays consumers gradually acknowledge the need to take care of the environment and become more culturally responsible. Therefore, accountability of companies to consumers' inclinations for environmentally harmless or neutral products is essential (Saini, 2013). Green Marketing has a lot of important benefits for those communities whose accept these new concepts. First important benefits are revenue increased. Consumers prefer every new and positive concept, so that innovator plays an essential role in this segment. A successful product that fulfils consumer satisfaction will definitely have an increase in sales and revenue. Second important benefits are cost reduced. In green marketing, the cost of raw materials is low thus it will increase the productions and save money. On top of that, green marketing can build brand value. A great green practices company will get a good brand value in the heart of the consumers. Another important benefit of green marketing is getting tax breaks and loans from government because those innovative companies which help the nation who are living in a rural or un-employment will bear uncertain risks. Besides, they save environment and health of nation so they receive subsidies from government. Lastly, the most crucial advantage of green marketing is world salvation.

## Conclusion

As environmental issues continue to affect human activities, society is now regards them with much concern. Most firms have started using sustainable development framework which is known as green marketing and most of the organizations have acknowledged green products which are environmentally friendly. Marketing managers can use green marketing to earn profits. In addition, green marketing is able to preserve the environment while satisfying customers' needs. Therefore, green marketing is a tool now used by many companies to increase their competitive advantage as people is presently very concerned about environmental issues.

லிட்டெரி ஃபைண்டிங்ஸ்
பல்துறை ஆய்வுக்கான பன்னாட்டு ஆய்விதழ்
LITERARY FINDINGS
A Peer Reviewed International Journal of Multidisciplinary Research - ISSN :2278-2311
VOL: 12 JULY - 2023 ISSUE: 3

# சுவாமிநாதம் உணர்த்தும் களவொழுக்கக் கோட்பாடுகள்

## SWAMINATHA'S PHILOSOPHY OF FIELDWORK

*Dr.R.PRIYA

***Abstract***

In the Tolkappiya period, the literature was based on two levels namely Akam and Puram. Agam has many meanings such as mind, house, interior, sensual pleasure, sky, world, thought, interiority, marutham, soul. After Tolkappiyam period, in Thirukkural, virtue, meaning, and pleasure are based on literature based on three levels, virtue and meaning due to vernacular influence. Literature has developed in four stages namely pleasure and home. In inner life, it is understood with the two major implications of theft and chastity. This tradition is expounded as part of Swaminath's Marapilakanam with forty-three sutras. This book is an adapted grammar composed by Samikaviraya.

***Key words: Literature, Interiority, Soul, Pleasure.***

***முனைவர் ரா.பிரபா**

இந்திய மொழிகள் மற்றும் ஒப்பிலக்கியப் பள்ளி

தமிழ்ப் பல்கலைக்கழகம் தஞ்சாவூர்

**முன்னுரை**

தொல்காப்பியம் காலத்தில் இலக்கிய அடிப்படையாக அகம், புறம் என்ற இரண்டு நிலையில் தான் அமைந்தன. அகம் என்ற சொல்லுக்கு மனம், வீடு, உள்ளிடம், காம இன்பம், ஆகாயம், உலகம், எண்ணம், அகப்பொருள், மருதம், ஆன்மா போன்ற பல பொருள்கள் உள்ளன. தொல்காப்பியம் காலத்திற்குப் பிற்காலத்தில் திருக்குறளில் அறம், பொருள், இன்பம் என்ற மூன்று நிலையில் இலக்கிய அடிப்படையில் அமைந்து வடமொழித் தாக்கத்தால் அறம், பொருள். இன்பம், வீடு என நான்கு நிலையாக இலக்கிய வளர்ந்தது.

**பொருள் வரையறை :**

இதனை தொல்காப்பியர்,

**"இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு (தொல் 1038)**

அறம்,பொருள், இன்பம் என்ற மூன்றினையும் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். ஆனால் சிறுவயதில் இன்பமும் நடுவயதில் பொருள் ஈட்டலும், முதிய வயதில் அறஉணர்வும் அதிகமாகும் என்று இன்பத்தை முதலில் வைத்தார். ஆனால் அறவழியில் பொருள் ஈட்டவேண்டும்.

அறவழியில் இன்பம் துய்க்க வேண்டும். என்ற நிலையில்தான் வள்ளுவர் அறம், பொருள், இன்பம் என்று அமைத்தார். ஆனால் துக்கருத்தை திருகுறலுக்கு பின்வந்த இலக்கண நூல்களும் பின்பற்றவில்லை. என்பது உண்மை. ஆதலால் தான் 19-ம் நுற்றாண்டில் தோன்றிய சுவாமிநாதத்தில் கூட 'வீடு' பேற்றை பற்றிக் கூறப்படவில்லை. 'அகப்பொருள்' பற்றி மட்டுமே நாவலக்கூடிய இலக்கண நூல்களும் உள்ளது.

**கைக்கோண் மரபு :**

அகவாழ்கையில் களவு, கற்பு என்ற இருபெரும் உட்பொருளைக் கொண்டு விளங்குகின்றது. இம்மரபு சுவாமிநாதம் என்னும் மரபிலக்கணம் நூலில் ஒரு பகுதியாக நாற்பத்திமூன்று சூத்திரங்களைக் கொண்டு விளங்கும். இந்நூல் ஒரு தழுவல் இலக்கணமாகவே சாமிக்கவிராயரால் இயற்றப்பட்டுள்ளது.

பொதுவாக ஒரு இலக்கணநூல் தனக்கு முன்னெழுந்த பல இலக்கண நூல்களையும் எங்கெங்கே தழுவிக்கொண்டுள்ளது. என்று மட்டும் தொகுத்துக் கூறுவதால் நூலில்ஆதாரங்களைப் புரிந்து கொள்ளலாமே தவிர நூலாசிரியரின் எண்ணத்தையும், மதிப்பீட்டையும் கோட்பாட்டையும் அறிந்துக்கொள்ளமுடியாது. இலக்கண ஆராய்ச்சியில் வளர்ச்சியும், போக்கும் சரியாக வரையறுக்க முடியாமல் போகும். இந்நூலானது நம்பியகப் பொருள், தொல்காப்பியம் ஆகியவற்றைப் தழுவி எழுதப்பட்டாலும் இந்நூலுக்குரிய புதுமை களையும், அக்கால மொழியமைப்பினையும் கையாண்டுள்ளது.

**களவொழுக்கம்:**

'களவு' என்பது தமது இச்சைகயினால் கொள்வது. தலைவனும் தலைவியும் திருமணத்திற்கு முன் புணர்தல் முதலாகிய உரிப் பொருள்களைக் கொண்டு நிகழுமம் அவ்வுயல்களில் நிலைமாறாமல் வரைபுடம்படுதல் முடிவடைவதால் அது அறமாகும்.

இக்களவானது கைக்கிளை முதலாக பெருதினை இறுதியாக நிகழும், அப்படி நிகழும்போது ஒருதலை வேட்கையாகிய கைக்களையும், ஒப்பில்லா காதலாகிய பெருந்திணையும் ஒழிந்து அன்பால் ஒத்த ஐந்திணைக்கும் உரியது களவாகும்.

இதனை தொல்காப்பியர்,

**" இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**

**அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**

**மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்**

**துறைமை நல்யாழ்த துணைமையோர் இயல்பே" (தொல்.கள. 14)**

இச்சூத்திரமானது நடுவண் ஐந்திணையில் அன்போடு நிகழும் காமக் கூட்டத்தின் பாற்படும்.

**எண்வகை மணம்:**

மறையோன் ஏந்தும் மன்றல் எட்டினும் களவு, கற்பு ஆகியவற்றில் நிகழக் கூடியதாகக் சொல்லப்பட்டுள்ளது. இவ்வெண்வகை மணக்துள்ளும் எழுவகை மணமானது. கைக்கிளை,பெருந்திணை என்பற்வற்றில் அடங்கும் என்று ஆசிரியர் கூறுகிறார்.

திணை

கைக்கிளை — பெருந்திணை

ஒருதலைக் காமம் (3) — பொருந்தரிக் காமம் (4)

| | |
|---|---|
| 1.ஆசுரம் - நல்ல வில் வித்தையில் சிறந்தவனுக்கு கொடுத்தல்<br>2. இராக்கதம் - தலைவன் தலைவிக்கு விருப்பமில்லாமல் செய்வது<br>3. பைசாசம் - மகிழ்ச்சியுடையோரிடம் கூடுதல் | 1. பிரம்மம் - அணிகலன்கள் அணிந்து பிரம்மச்சாரிக்கு தானம் கொடுத்தல்<br>2. பிராசிபத்தியம் - இருவீட்டாரும் மக்கட்பேறு வேண்டிக் கொடுத்தல்<br>3. ஆரிடம் - பெண்ணோடு ஒன்றானும், இரண்டானும் பசுவும், காளையும் கொடுத்தல்<br>4. தெய்வம் - வேள்வி செய்யும் ஆசிரியனுக்கு வேள்வித்தீ முன்னர் கொடுத்தல் |

இவ்வேழுனுள் அடங்காத ‘காந்தருவம்’ இருமணமும், இருகூட்டமும் சேர்ந்து செய்யப்படும் திருமணமும் ஆகும். ஆகவே அன்பின் ஐந்திணையில் காந்தருவம் மணம் என்பது முழுமையாக நிகழக்கூடியது.

கைக்களை என்பது காட்சி, ஐயம், துணிவு, குறிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் நிகழும், ஆனால் பெருந்திணைக்கு இக்குறிப்புக்கள் இடம் பெறவில்லை. தொல்காப்பியத்தில் இடம்பெற்றுள்ள ஐவகைக் திணையுள் அடங்கும் என்றும் கூற, சுவாமிநாதம் அதனை பிரித்துக் காட்டியுள்ளது.

**களவிற்குரியத் தொகைகள்**

நடுவில் வைக்கப்பட்ட ஐந்திணைக் கண்ணும் புணர்தல், பிரிதல், இரத்தல், இரங்கல் ஊடல் ஆகிய உரிப்பொருள் களவு, கற்பு எனும் இரு கைக்கோளின் கண் நிகழுமாயின் அவற்றில் ‘களவின்’ தொகைகளாக இந்நூலில் 17 வகையாகக் கூற்றுக்கள் இடம் பெற்றுள்ளன. இதனை தொல்காப்பியர்.

**காமம் புணர்ச்சியும் இடந்தலைப் பாடும்**

**பாங்கொடு தழாஅலுந் தோழியிற் புணர்வுமென்று**

**ஆங்கநால் வகையினும் அடைந்த சார்வாடு**

**முறையென மொழிதன் மறையோர் ஆறே (செய்யுளியல் - 178)**

இச்சூத்திரம் நான்குவகையான புணர்ச்சி நிலையினையும், அதனோடு சார்புடையனவற்றையும் உணர்த்துகிறது.

ஆனால் இந்நூலில் அதனை அறுதியிட்டு விரிநிலை புணர்ச்சியும் இடம்பெற்றுள்ளது. அதனோடு உள் பாகுபாடும் எடுத்தாளப்பட்டுள்ளது.

1. **இயற்கைப் புணர்ச்சி** : இருமணமும் ஒத்தருணமல் தாமே கூடும் கூட்டமாகும். இதனுள் தெய்வப் புணர்ச்சி, தலைமகளாற் புணரும் புணர்ச்சி இருவகைப்படும்.

1. புணர்ச்சி ஏற்படும் போது தலைவனும், தலைவியும் கலந்து மகிழ்தல், 2.அவளது நல்ல பண்புகளைத் தலைவன் பாராட்டுதல், 3.தலைவனது சொற்களைக் கேட்டு ஆணை ஏற்றுக் கொள்ளல் ஆகியவையோடு, தலைமகள் புணர்ச்சியாக வேட்கை உணர்தல், மறுத்தல், உடன்படுதல், கூட்டம் என்பவையும் நிகழும்.

இதில் உட்பிரிவாக இரந்து வேண்டல் முதலாக புகழ்தல் ஈறாக பதினைந்து புணர்ச்சிகளையும் இந்நூலில் எடுத்துரைத்துள்ளார்.

**வன்புறை :** தலைவன் தன் தலைவியின் அறிவின்மை நீங்கச் சொன்ன வன்புறைச் சொற்களாக ஐயம் தீர்த்தல் பிரிவு அறிவுறுத்தல் என்ற பெரும் பிரிவோடு அறுவகையான சிறுபிரிவையும் உடையது.

**தெளிவு :** தலைமகனாற் தன் பிரிவை எண்ணி குழப்பமடையத் தலைவியை தேற்றுதல் சொல்லால் தெளிவுபட வைத்தல் ஆகும்.

**பிரிவுழி மகிழ்ச்சி** : இது இருநிலையில் நடைபெறும். 1.தலைவி, தலைவனைப் பிரிந்து செல்லும் தலைமகன் தன் நெஞ்சிற்குள் புணர்தலும், 2.தனது மனநிலையைப் புரிந்து கொள்ளும் பாகனோடு சொல்லுதல் ஆகும்.

**பிரிவுழி கலங்கல்** : தலைவனும், தலைவியும் புணர்தல் விடத்து பிரிந்துழி காணுங்கால் மருண்டு சொல்லுதல், தெருண்டு உரைத்தல் ஆகிய பெரும் பிரிவோடு அதன் சார்புடைய ஐந்து பிரிவையும் கொண்டுள்ளது.

**இடந்தலைப்பாடு** : இயற்கைப் புணர்ச்சிக் கண்ட தலைவன் பின்னொரு முறையும் தலைவர் காண அவள் முன் இடர்படுதல் ஆகும். தெய்வம் தெளிதல், கூடுதல், விடுத்தல் என்ற மூன்று பெரும்பிரிவோடு, ஐவகையான உட்துறைகளையும் கொண்டு விளங்குகிறது.

**பாங்கற் கூட்டம்** : இது பாங்கற்கு உரித்தான புணர்ச்சியாகும். தனது பாங்கனிடம் தலைமகனானவன் நீயெமக்குத் துணையாக வேண்டுமென்று அவன் குறிவழிச் சென்று தலைமகன் நின்ற நிலையை உணர்த்துவதற்கு சென்று கூடுதல் ஆகும்.

இது ஏழு பெரும் பிரிவுகளோடு இருபத்தினான்கு சிறு பிரிவு துறையையும் கொண்டு விளங்கும். இங்கு பாங்கற் கூட்டத்தோடு சேர்ந்து பாங்கிமதி உடன்பாட்டின் துறைகளை நுவல்கின்றது.




**பாங்கிமதி உடன்பாடு :**

தோழி வடிவு வேறுபாடு கண்டும் முன்னுறவுணர்தல், தலைவன் தன்னிடம் குறையுற்று நிற்றல், தலைவியும் தோழியும் இருக்கும்போது தலைவன் வருவதால் உணர்தல் என்ற மூவகையோடு பாங்கி, கூட்டம் உணர்ந்து ஒத்துக்கொள்வதான பாங்கிமதி உடன்பாடு ஆகும்.

இவை பாங்கின் ஐயம் களைவதற்கு தலைவியின் பிறையைத் தொழுமாறு வேண்டுதல் முதல் உண்மையை உணர்ந்துக் கொள்ளுதல் ஈறாக இருபது துறைகளோடு பாங்கிமதியுடன்பாடு மூன்றும், முன்னுறவுணர்தல் ஏழும் சேர்ந்து முப்பதும் மதியுடன்பாட்டின் வகையாகும்.

**பாங்கியிற் கூட்டம்** :

தலைமகன், தலைமகன் கூட்டம் இரண்டும் சேர்ந்து தோழியின் பின் சென்று இவ்வுறவானது நீண்டுசேர வேண்டும் என்று இரந்து நின்றல். இவை இரத்தல் முதல் வேட்டல் ஈறாக பன்னிரெண்டு

பெரும்பிரிவுகளையும், தலைமகன் தன் மனக்கருத்தை முன்வைத்தல் முதற்கொண்டு விருந்துகொள்ள விரும்புதல் வரை அறுபத்தியோரு சிறு துறைகளைக் கொண்டுள்ளது.

**பகற்குறியும், பகற்குறி இடையீடும் :**

குறியிடம் சொல்லுதல் முதலாக விருந்தாக அழைக்கப்படுதல் பன்னிரெண்டும் பாற்குறியாம். இதன் வகையாக தலைவியின் இரங்குதல் முதலான தலைமகன் தன் நெஞ்சோடு பேசுதல் ஆகிய பதினான்கும் பகற்குறியின் வகையாகும்.

பகற்குறி இடையீடு என்பது விலங்குதல், செல்லுதல், கலங்குதல் என மூன்று பெரும் பிரிவோடு ஏழுவகையான சிறுபிரிவினையும், பாற்குறி இடையீடு என்பர்.

**இரவுக்குறி** : வேடுதல், மறுத்தல், ஏற்றுக்கொள்ளுதல், காட்டுதல், கூடுதல், கூடுதலைப் பாராட்டுதல், வருந்துதல், நீங்குதல் ஆகியவற்றோடு இருபத்தியேழு வகையான இரவுக்குறியின் விரிவையும் பெற்றுள்ளது.

**இரவுக்குறி இடையீடு** : இடையீடு என்பது அல்லல், குறியும் வருவதற்குரிய துன்பம் என இரண்டு வகையினை உடையது. பத்தொன்பது உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது.

**வரைதல் வேட்கை** : அச்சம், வெறுப்பு, ஆற்றாமை என மூன்று பெரும் பிரிவினை உடையது. இதனோடு திருமணம் செய்து கொள்ள விருப்பம் என்ற பத்தொன்பது சிறு பிரிவு உடையது.

**வரைவு கடாதல்** : திருமணம் செய்து கொள்ளக் கேட்டுக் கொள்ளும் துறையைச் சேர்ந்தவையாகும். நான்கு வகை பெரும் பிரிவுகளும், இருபது கூற்றுக்களும் வரைவு கடாதலின் பிரிவாகும்.

**ஒருவழிதணத்தல்** : இது ஏழுவகையான பிரிவுகளோடு பதினோரு வகையான கூற்றும் நிகழ்கிறது. திருமணம் செய்து கொள்ள வேண்டும் வேண்டும் என்ற தோழியின் கருத்தை ஒத்துக்கொண்ட தலைவன் தன் ஊர்க்கு ஒருவழிப்போய் வருகிறேன் என்று கூறிப்போதலாகும்.

**வரைவிடை வைத்தும் பொருள்வயிற் பிரிதல்** :

திருமணத்தை உறுதி செய்து கொண்டு பொருள் ஈட்டுவதற்காக பிரிதல் பிரிவு அறிவுறுத்தல் முதலாக, தலைவன் வந்ததால் மகிழ்ச்சியடைதல் ஈறாக என்ற ஒன்பதும் இத்துறையின் பெரும் பிரிவாகும். இதனுடைய உட்பிரிவாக, தலைவன் பொருள் ஈட்டுவதற்குப் போகிற செய்தியைத் தலைவிக்கு கூறுக என தோழியிடம் உரைத்தல் முதலாக, அதனை ஏற்றுக் கொண்ட தலைவி அக்காலத்தில் பொறுமைத் தன்மையைக் கூறல் ஈறாக இருபத்தொரு கூற்றுகளாகும்.

இந்நூலில் களவிற்குரிய தொகைகளாக 293 துறைகள் கூறப்பட்டுள்ளது. ஆனால் பின்வரும் அட்டவணைப்படி,

| வ.எண் | கிளவிகள் | பெரும் பிரிவு | சிறு பிரிவு | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | இயற்கைப் புணர்ச்சி<br>1. தெய்வப்புணர்ச்சி<br>2. தலைமகன் புணர்ச்சி | 3<br>4 | 15 | 22 |
| 2. | வன்புறை | 2 | 6 | 8 |
| 3. | தெளிவு | 1 | - | 1 |
| 4. | பிரிவுழி மகிழ்ச்சி | 2 | - | 2 |
| 5. | பிரிவுழிக் கலங்கல் | 2 | 5 | 7 |
| 6. | இடந்தலைப்பாடு | 3 | 5 | 8 |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. | பாங்கற் கூட்டம் | 7 | 24 | 31 |
| 8. | பாங்கிமதி யுடன்பாடு | 3 | 7 ூ 20 | 30 |
| 9. | பாங்கியற் கூட்டம் | 12 | 61 | 73 |
| 10. | பகற்குறி | 12 | 14 | 26 |
| 11. | பகற்குறி இடையீடு | 3 | 7 | 10 |
| 12. | இரவுக்குறி | 8 | 27 | 35 |
| 13. | இரவுக்குறி இடையீடு | 2 | 19 | 21 |
| 14. | வரைதல் வேட்கை | 3 | 19 | 22 |
| 15. | வரைவு கடாதல் | 4 | 20 | 24 |
| 16. | ஒருவழித்தணத்தல் | 7 | 11 | 18 |
| 17. | வரைவு இடைவைத்துப் பொருள் வயிற்பிரிவு | 9 | 21 | 30 |
| | | 87 | 281 | 368 |

368 துறைகளைக் கொண்டுள்ளது. இவற்றில் பாங்கி மதியுடன்பாட்டில் தோழியின் முன்னுணர்வு, உடன்பாடு என்று பிரித்துக் கூறப்பட்டுள்ளது.

**முடிவுரை :**

அன்பின் ஐந்திணைக்கு புறத்தவாகிய வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை ஆகிய புறத்திணையும் அன்பர்கள் பல கூடி நிகழ்த்தும் கூற்றுக்களின் அன்பொடு புணர்ந்தனவாகும்.

அறம், பொருள், இன்பம் என்றாலும், இன்பம் பொருள், அறன் என்றாலும் பலவகை உயிர்களுக்கு வரும் இன்பம் இரண்டு. 1.போகம், 2.வீடுபேறு இவற்றில் வீடுபேறு துறவறத்தில் வருவது ஆதலால் அது அரிது. போகம் மனையறத்தார்க்கு வரும் ஆதலால் அவர் உணரும் இன்பம், அவ்வின்பத்தால் வரக்கூடிய பொருள் அப்பொருளளால் வரக்கூடிய அறன் ஆகியவை காரணம் கருதி அமைக்கப்பட்டுள்ளது என்பது சான்றோர்களின் உரையாகும்.

இந்நூல் முன்னிலக்கணங்களைத் தழுவி எழுதப்பட்டாலும் அதற்கேற்ற முறையில் விரிந்துச் செய்திகளைக் கூறி சிறந்தோங்கி நிற்கின்றது. இதில் களவொழுக்கம் கோட்பாடுகளாக 368 துறைகள் சான்றாக அமைகின்றது.

**துணை நூல்கள் :**


1. கழகப் பதிப்பு, (1875) களவியல், சைவச் சித்தாந்த நூற்பதிப்பு கழகம், இராயப்பேட்டை, சென்னை.
2. செ.வை.சண்முகம், (1975) சுவாமிநாதம், அண்ணாமலைப் பதிப்பகம். அண்ணாநகர்.
3. ச.வே.சுப்பிரமணியம், (2010) சங்க இலக்கியம் (எட்டுத்தொகை), மணிவாசகர் பதிப்பகம், திருச்சி
4. பக்தவச்சல பாரதி, (2012) தமிழர் மானிடவியல், அடையாறு பதிப்பகம், புத்தாநத்தம்.

லிட்டெரி ஃபைண்டிங்ஸ்
பல்துறை ஆய்வுக்கான பன்னாட்டு ஆய்விதழ்
LITERARY FINDINGS
A Peer Reviewed International Journal of Multidisciplinary Research - ISSN :2278-2311

VOL: 12 | JULY - 2023 | ISSUE: 3

# STRUCTURE AND GROWTH OF COIMBATORE CITY

STRUCTURE AND GROWTH OF COIMBATORE CITY

*Mr.A.SAPTHAGIRIVASAN & Dr.A.MANIMEKALAI

*Mr.A.Sapthagirivasan
Ph.D.Reserach Scholar (PART TIME), Government Arts College
Coimbatore
&
*Guide: Dr.A.Manimekalai
Associate professor
Government Arts College
Coimbatore

***Abstract***

Coimbatore also known as Kovai is a major city in the Indian state of Tamil Nadu. It is located on the banks of the Noyyal River and surrounded by the Western Ghats. Coimbatore is the second largest city (by area and population) in the state (after Chennai) and the 16th largest urban agglomeration in India. It is administered by the Coimbatore Municipal Corporation and is the administrative capital of Coimbatore district.

***Key words: Largest, Administrative, Capital, Corporation.***

## INTRODUCTION

Coimbatore also known as Kovai is a major city in the Indian state of Tamil Nadu. It is located on the banks of the Noyyal River and surrounded by the Western Ghats. Coimbatore is the second largest city (by area and population) in the state (after Chennai) and the 16th largest urban agglomeration in India. It is administered by the Coimbatore Municipal Corporation and is the administrative capital of Coimbatore district. It is one of the fastest growing tier-II cities in India and a major industrial hub in South India. It is often referred to as the "Manchester of South India" due to its cotton production and textile industries. Coimbatore is also referred to as the "Pump City" and it supplies nearly half of India's requirements of motors and pumps. The city is one of the largest exporters of jewellery, wet grinders, poultry and auto components; the "Coimbatore Wet Grinder" and the "Kovai Cora Cotton" are recognized as Geographical Indication.

**STRUCTURE**

Coimbatore is situated in 411 metres (1349 ft) above sea level on the banks of the Noyyal River, in southwestern Tamil Nadu. It covers an area of 642.12 km2(247.92 sq mi). It is surrounded by the Western Ghats mountain range to the West and the North, with reserve forests of the Nilgiri Biosphere Reserve on the northern side. The Noyyal River forms the southern boundary of the city, which has an extensive tank system fed by the river and rainwater? The city is divided into two distinctive geographic regions: the dry eastern side which includes majority of the urban area of the city and the western region which borders the Nilgiris, Anaimalai and Munnar ranges. Palghat Gap, a mountain pass which connects the neighbouring state of Kerala to Tamil Nadu, lies to the west of the city. Because of its location in the biodiversity hotspot of the Western Ghats, it is rich in fauna and flora.

The northern part of the city has a rich tropical evergreen forest with commercially significant trees such as teak, sandalwood, rosewood and bamboo. The soil is predominantly black, which is suitable for cotton cultivation, but some red loamy soil is also found.

Coimbatore has a pleasant, salubrious climate due to its proximity to thickly forested mountain ranges and the cool breeze blowing through the palghat gap which makes the consistently hot temperatures pleasant. Under the Koppen climate classification, the city has a tropical wet and dry climate, with the wet season lasting from October to December due to the northeast monsoon.

**ADMINISTRATION**

Coimbatore is a Municipal corporation administered by the Coimbatore Municipal Corporation and is the administrative headquarters of Coimbatore district] Coimbatore was established as the capital of Coimbatore district in 1804 and in 1866 it was accorded municipality status.5 In 1981, Coimbatore was • elevated as a municipal corporation. The city is divided into five administrative zones — East, West, North, South and Central, each further subdivided into 20 wards.EEach ward is represented by a councilor who is elected by direct election and the Mayor of Coimbatore is elected by Councilors'. The executive wing of the corporation is headed by a Corporation Commissioner and maintains basic services like water supply, sewage and roads. The district itself is administered by the District collector and the district court in Coimbatore is the highest court of appeal in the district.

**ECONOMY**

Coimbatore houses more than 25,000 small, medium and large industries with the primary industries being engineering and textiles. Coimbatore is called the "Manchester of South India" due to its extensive textile industry, fed by the surrounding cotton fields. TIDEL Park Coimbatore in ELCOT SEZ was the first special economic zone (SEZ) set up in 2006. In 2010, Coimbatore ranked 15th in the list of most competitive (by business environment) Indian cities.

Coimbatore region experienced a textile boom in the 1920s and 1930s. Though, Robert Stanes had established Coimbatore's first textile mills as early as the late 19th century, it was during this period that Coimbatore emerged as a prominent industrial centre. Coimbatore is home to more than 17% of the fibre textile mills in India.

Coimbatore is also referred to as the Pump City" as it supplies nearly 50% of India's requirements of motors and pumps. The city is one of the largest • exporters of jewellery renowned for diamond cutting, cast and machine made jewellery.9 There are about 3,000 jewellery manufacturers employing over 40,000 goldsmiths.

## EDUCATION

Coimbatore is a major educational hub. As of 2010, the district is home to seven universities, 78 engineering colleges, 3 medical colleges, 2 dental colleges, 35 polytechnics and 150 arts and science colleges and schools. The city houses three government run universities Tamil Nadu Agricultural University, Bharathiar University, Anna University Coimbatore and four private universities.'2 The city houses Government research institutes including the Central Institute for Cotton Research, Sugarcane Breeding Research Institute, Institute of Forest Genetics and Tree Breeding (IFGTB), Indian Council of Forestry Research and Education and Tamil Nadu Institute of Urban Studies. There are also plans to establish a world class university in the region and to covert the Government Arts College into a unitary type university.

## CONCLUSION

Coimbatore was ranked the best emerging city in India by India Today in the 2014 annual Indian city survey. The city was ranked 4th among Indian cities in investment climate by Confederation of Indian Industry and 17th among the top global outsourcing cities.

லிட்டெரி ஃபைண்டிங்ஸ்
பல்துறை ஆய்வுக்கான பன்னாட்டு ஆய்விதழ்
LITERARY FINDINGS
A Peer Reviewed International Journal of Multidisciplinary Research - ISSN :2278-2311

| VOL: 12 | JULY - 2023 | ISSUE: 3 |
|---|---|---|

# விளாதிமிர் பிராப் அமைப்பியல் முறையில் மொண்டிக் கதை

*முனைவர் க. இரமேஷ்
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
சமூக அறிவியல் மற்றும் மனிதநேய
பள்ளி, தமிழ்நாட்டு மத்தியப்
பல்கலைக்கழகம், நீலக்குடி
வளாகம், திருவாரூர் – 610005,
தமிழ்நாடு, இந்தியா.

## MONDIC NARRATIVE IN VLADIMIR BRAB ORGANIZATIONAL STYLE

*Dr. G. Ramesh

***Abstract***

Folklore study is one of the most important aspects of Tamil studies. Folklore studies were at one time carried out by explorers very cautiously. Folk literature helps to know the lifestyle and culture of the people of the country. These literatures have been subjected to systematic review and various studies have taken place. In this way, the Mondic story collected in Namakkal region has been examined in relation to Brab's structural theory.

***Key words: Tamil Studies, Folklore, Story, Region, Theory.***

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழியல் ஆய்வு வகைமைகளில் நாட்டுப்புறவியல் ஆய்வு மிக இன்றியமையாத ஒன்றாகும். நாட்டுப்புற ஆய்வுகள் ஒரு காலகட்டத்தில் மிக காத்திரமாக ஆய்வாளர்களால் மேற்கொள்ளப் பட்டது. நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் முறைகளையும் பண்பாட்டினையும் அறிய நாட்டுப்புற இலக்கியங்கள் உதவுகின்றன. இவ்விலக்கியங்கள் அமைப்பியல் ஆய்வுக்குட்படுத்தப்பட்டு பல்வேறு ஆய்வுகள் நிகழ்ந்துள்ளன. அவ்வகையில் நாமக்கல் வட்டாரத்தில் சேகரிக்கப்பட்ட மொண்டிக் கதையைப் பிராப் அவர்களின் அமைப்பியல் கோட்பாட்டோடு பொருத்தி ஆராயப்பட்டுள்ளது.

**முன்னுரை:**

மானுட வாழ்வியல் கதை சொல்வதும் கேட்பதும் தொன்றுதொட்டு வருகின்ற ஒரு வழக்கமாகும். இம்மரபு ஆதிகால மனிதன் நாடோடி வாழ்ககை வாழ்ந்த காலகட்டத்திலிருந்தே தொடங்கியது எனலாம். இதில் உலகத் தோற்றம் பல்வேறு மொழிகளில் பல்வேறு வகையான கதைகள் உலகம் முழுவதும் இன்றளவும் திரும்பத் திரும்ப கூறப்படுகின்றன. அவ்வகையில் இந்தியா முழுவதும் கதை சொல்லும் மரபு அனைத்து மொழிகளிலும் உள்ளதது. தமிழ்நாடு கதைகளின் கருவூலம் எனலாம். தமிழில் எண்ணற்ற நாட்டுப்புறக் கதைகளின் தொகுப்பும் ஆய்வேடுகளும் வந்துள்ளன. அந்த வகையில் நாமக்கல் வட்டாரத்தில் உள்ள அக்கியம்பட்டி, காலப்பநாயக்கன்பட்டி அருகிலுள்ள ஆத்துக்குட்டிப் பாளையம் ஆகிய கிராமங்களில் சேகரித்த நாட்டுப்புறக் கதைகளை பிராப்பின் 31 வினைகளோடு பொருத்தி ஆராயப்படுகிறது.

கிராமங்களில் கதை சொல்லும் மரபு வாழையடி வாழையாக வந்துள்ளது. “உலகக் கதைகளை ஆராயும் போது மனித குலத்தின் வளர்ச்சியும் மனித மனங்களின் எழுச்சியும் புலனாகின்றன. அடிப்படை உண்மைகளைக் கொண்ட கதைகள் உலகெங்கும் சீரஞ்சிவியாக வாழ்கின்றன. கதைகள் வெறும் பொழுதுபோக்கு இலக்கியங்கள் மட்டுமல்ல அறக்கோட்பாடுகளை விளக்கும் கதைகள் புவி போற்றும் காவியத்தன்மை பெற்றுவிடுகின்றன. சிறுவர் முதல் பெரியோர் வரை கேட்டு மகிழ்ந்து நினைத்து அசை போடத்தக்கன”. (டாக்டர்.சு.சக்திவேல் 2012) இதுவே நாட்டுப்புறக் கதைகளின் தன்மையாக விளங்குகின்றன.

நாட்டுப்புறக் கதைகளை அமைப்பியல் நோக்கில் ஆராய்கின்ற போக்கு இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலேயே ஆரம்பித்துவிட்டது. பிராப் வினை நிகழ்வு என்பதனை அடிப்படைப் பகுப்புமுறையாகக் கொண்டு விளக்கினார். “ஒரு கதையமைப்பில் வினை நிகழ்வு என்பது கதை மாந்தரின் குறிப்பிட்டுச் சொல்லும்படியான செயலை (மட்டுமே) குறிப்பதாகும். எல்லாச் செயல்களும் நிகழ்வுகள் ஆகிவிட முடியாது; கதையமைப்பில் குறிப்பிட்ட விளைவே ஏற்படுத்துவனவாகவும் அல்லுத பங்களிப்புச் செய்வனவாகவும் இருக்க வேண்டும். அவ்வடிப்படையில் சிறப்புடைத் தன்மையுடையனவாக இருக்கின்ற வினை நிகழ்வுகளை இனங்கண்டு, அம்முறையில் வருணிப்பு முறை வரிசையை (Narrative sequence) அவர் பகுத்து வகைபடுத்துகின்றார்.” (தி.சு.நடராஜன் 2018) வினை என்பது ஒரு கதையின் இயக்கத்திற்கு இன்றியமையாத கூறாகும்.

தமிழகத்தில் பல்வேறு நாட்டுப்புற வழக்காறுகள் லெவிஸ்ட்ரா பிராப் அமைப்பியல் கோட்பாடு நோக்கில் ஆராயப்பட்டுள்ளன. பிராப்பின் அமைப்பியல் முறையில் நாட்டுப்புறக் கதைகள் பல்வேறு ஆய்வாளர்களால் ஆராயப்பட்டுள்ளது. பிராப் அமைப்பியல் முறையில் ஆய்வு செய்த நூறு தேவதைக்கதைகளும் 31 வினைகளுக்குள் அடங்கிவிடும் என்று குறிப்பிடுகின்றார். “வெளியேற்றம் (கதைத்தலைவன் வெளியேறுவதாகவும் இருக்கலாம்) தடை, தடையை மீறல் வில்லன் வேவு பார்த்தல், வில்லன் செய்தியறிதல், வில்லனின் சூழ்ச்சிக்கு உடன்படுதல், வில்லனின் கொடுஞ்செயல் அல்லது குறை (lack), இணைக்கும் நிகழ்ச்சி, மாற்று நடவடிக்கைத் தொடக்கம், தலைவன் புறப்படல், கொடையாளியின் முதற்செயல், தலைவனின் எதிர்வினை, மந்திரக் கருவி

பெறுதல், தலைவனுக்கு அடையாளமிடல், தலைவன் வெற்றி, குறை நீக்கம், திரும்புதல், பின் தொடர்தல், மீட்பு, அடையாளம் தெரியாது வருதல், பொய்யாக உரிமை கொண்டாடல், கடும் பணி, தீர்வு, கண்டு கொள்ளல், பொய்மை வெளிப்பாடு, உருமாற்றம், தண்டனை, திருமணம்." (தே.லூர்து 2000) பிராப்பின் வினைச்செயல்கள் கதைகளின் கட்டமைப்புக் கூறுகளை ஆராய்வதற்கு இன்றியமையாத ஒரு ஆய்வு முறையாகும்.

**மொண்டிக் கதை:**

- ❖ அண்ணன் தம்பி மூன்றுபேர் இவர்களில் இரண்டாவதாகப் பிறந்தவன் மொண்டி. அவனைத தவிர மற்ற இருவருக்கும் திருமணமாகிவிட்டது. அவர்களின் மனைவிமார்கள் சிறிது காலம் மொண்டிக்கு சோறு போடுகின்றனர் மொண்டியின் சகோதரர்களின் மனைவிமார்கள் திடீரென அவனுக்கு சோறு போட மறுக்கின்றனர் - கொடுஞ்செயல்
- ❖ சகோதரர்களின் மனைவிமார்கள் நிலத்தை சமமாகப் பிரித்து விளையும நிலங்களை அவர்கள் எடுத்துக்கொண்டு கற்களும், முற்களும் நிறைந்த நிலத்தை மொண்டிக்கு பிரித்துக் கொடுக்கின்றனர் - சூழ்ச்சி
- ❖ சகோதரர்களைப் பிரிந்து தனக்குரிய பாகத்தில் குடியேறுகிறான் - வெளியேற்றம்
- ❖ நிலத்தை பயிர் செய்ய இயலாமல் தனக்குரிய காட்டை சுற்றி சுற்றி வருகிறான்- குறை
- ❖ கோழி கூவும் நேரத்தில் புளியமரத்தடியில் நிற்கும் பொழுது ஆங்கு வந்த பேயின் நீண்ட சடையை அறுத்துவிடுகிறான்- கொடுஞ்செயல்
- ❖ போய் தனது சடை இல்லாவிட்டாள் தனது இனத்தில் சேர்த்துக்கொள்ளமாட்டார்கள் என்று அவனிடம் கெஞ்சுகிறது - குறை
- ❖ சடை வேண்டுமென்றால் தான் கூறும் பணிகளை எல்லாம் செய்யுமாறு கூறுகிறான் - சூழ்ச்சி
- ❖ அவன் சொல்லும் பணிகளை எல்லாம் பேய் செய்கிறது - கொடையாளி
- ❖ நிலத்தை சமன் செய்தல் – கொடையாளியின் முதல் செயல்
- ❖ கிணறு வெட்டுதல் – இரண்டாம் செயல்
- ❖ பேய் மற்ற பேய்களை அழைத்து வந்து நீர் இரைக்கின்றது. இதற்கு மேல் முடியவில்லை என்று அவனிடம் கூறுகிறது கம்பு வெதச்சி அறுத்து கொடுத்தால் முடியை தருகிறேன் என்று கூறுகிறான் - கொடுஞ்செயல்
- ❖ கம்பு விதைக்க அண்ணன் பொண்டாட்டிகிட்ட கம்பு கேட்கிறான் அதற்கு அண்ணி நல்ல கம்பை அவர்கள் விதைத்துக்கொண்டு வறுத்த கம்பை அவனிடம் கொடுக்கின்றாள் - சூழ்ச்சி
- ❖ வறுத்த கம்பு நன்கு முளைத்து வந்துவிடுகிறது. நல்ல கம்பு முளைக்கவில்லை. விளைந்த கம்பை யாருக்கு தெரியாமல் அறுக்குமாறு சகோதரர்களிடம் அவர்களின் மனைவிமார்கள் கூறுகின்றனர் - சூழ்ச்சி
- ❖ நிலத்தில் விளைந்த கம்பை அறுக்க அவர்கள் முயற்சிக்கும் போது பேய் அவர்களை அடித்து உதைக்கின்றது- கொடையாளி

- ❖ பேய்கள் எல்லாம், கம்பை அறுத்து அடித்துப் புடைத்து அவளுடைய வீட்டிற்குக் கொண்டுவந்து சேர்கின்றுது - கொடையாளியின் மூன்றாம் செயல்
- ❖ பேய் மொண்டியிடம் தாங்கள் சொன்ன அனைத்து வேலையையும் செய்துவிட்டேன் தயவு செய்து எனது முடியை கொடுக்குமாறு கேட்கிறது - நியாயமான உரிமை கோரல்
- ❖ எடஞ்சல் எதுவும் செய்யமாட்டேன் என்று கூறி சாத்தியம் வாங்கிக்கொண்டு முடியை கொண்டுக்கிறான் அதனை வாங்கிக்கொண்டு பேய் செல்கிறது - குறைநீக்கம்
- ❖ மறுநாள் தனது மனைவிமார்களின் பேச்சைக் கேட்டுக்கொண்டு அவனின் சகோதரர்கள் அவனுடைய இரண்டு மாடுகளைக் கொல்கின்றனர்- கொடுஞ்செயல்
- ❖ காலையில் மாடு இறந்துகிடப்பதைப் பார்த்த மொண்டி பறையானை அழைத்து கறிகளை கொடுத்துவிட்டுதோலை மட்டும் வாங்கிக்கொள்கிறான் - கொடை
- ❖ தோலை காய வைத்து எடுத்துக்கொண்டு சேலம் பக்கம் செல்கிறான் - புறப்பாடு
- ❖ போகும் போது இருட்டிவிடுகிறது ஏறிக்கரையில் உள்ள ஆலமரத்தில் ஏறி உட்கார்ந்து கொள்கிறான். அந்த சமயத்தில் கொள்ளையர்கள் மரத்தடியில் பங்கு பிறித்துக் கொண்டிருந்தனர் அப்போது அவன் கையில் இருந்த தோல் நழுவி விடுந்துவிடுகிறது. அவர்கள் பேய் என்று நினைத்து ஓடி விடுகின்றனர் துணியில் மூட்டையாக கட்டி அவர்கள் பங்கு பிரித்த பொருட்களை எடுத்துக்கொள்கிறான் - கொடையாளி
- ❖ வீட்டுக்கு வந்துவிடுகிறான் - திரும்புதல்
- ❖ முத்து அளக்க அண்ணன் மகளிடம் வீட்டிலிருந்து படி வாங்கிக்கொண்டு வர சொல்கிறான். அண்ணியானவல் அதில் புளியை ஒட்டி அனுப்புகிறாள் - சூழ்ச்சி
- ❖ படியில் ஒரு முத்து ஒட்டிக்கொண்டு போய்விட்டது அதைப் பார்த்த அண்ணி தன் கணவனிடம் இது எப்படி வந்தது என்று உங்க தம்பி கிட்ட கேளுங்க என்றுசொல்லி அனுப்புகிறாள் - வேவு பார்த்தல்
- ❖ பாப்பாரத் தெருவில் தோலை விற்று முத்து வாங்கிவந்ததாக மொண்டி கூறுகிறான் - சூழ்ச்சி
- ❖ சகோதரர்களின் மனைவிமார்கள் அப்பொழுது நம்ம மாட்டையும் அடிச்சி போட்டுவிட்டு போய் தோல விற்றுவிட்டு முத்து வாங்கிவரச் சொல்கிறார்கள் இவர்களும் சென்று தோல்விற்க அங்கு அடிவாங்கிக்கொண்டு வருகிறார்கள் - தண்டனை
- ❖ தங்கள் மனைவிமார்களின் பேச்சைக் கேட்டுக்கொண்டு மொண்டியின்
- ❖ சகோதரர்கள் அவன் வீட்டுக்கு தீவைத்தனர் - கொடுஞ்செயல்
- ❖ மொண்டி சாம்பலை மூட்டையாகக் கட்டிக்கொண்டு அதே போல மரத்தில் ஏறி சாம்பலை விட்டுவிட்டு முத்து மூட்டையை எடுத்துக்கொண்டு வந்துவிடுகிறான் - சூழ்ச்சி
- ❖ முன்பு போலவே முத்து அளக்க படி கேட்கிறான். முன்பு மாதிரியே அண்ணியும் புளியை ஒட்டி அனுப்புகிறாள் - சூழ்ச்சி
- ❖ உங்க சகோதரர் எப்படி இவ்வளவு முத்தை சம்பாரித்தார் என்று கேட்டுவருமாறு அவனுடைய சகோதரர்களை அவர்களின் மனைவி மார்கள் அனுப்புகின்றனர் - வேவு பார்த்தல்
- ❖ சாம்பளை அள்ளிக்கொண்டு போய் முத்து வண்டியில் வைத்துவிட்டு முத்து கொண்டு வந்ததாக கூறுகிறான் - சூழ்ச்சி

- ❖ அவன் சகோதரர்களும் தங்கள் வீடுகளை எரித்துச் சாம்பளை வாரிக்கொண்டு போகிறார்கள் முத்து வண்டிக்காரனிடம் அடி வாங்குகின்றனர் – தண்டனை
- ❖ மொண்டியை கொன்றுவிடுமாறு அவனுடைய சகோதரர்களிடம் அவர்களின் மனைவிமார்கள் கூறுகின்றனர் - கொடுஞ்செயல்
- ❖ அவனைக் கொல்ல சாக்கில் கட்டி மலைக்கு கொண்டு செல்லுகின்றனர் – தலைவனை கடத்தல்
- ❖ செல்லும் வழியில் தாகம் எடுக்கிறது எனவே மூட்டையை வைத்துவிட்டு தண்ணீர் குடிக்கச் செல்கின்றனர். மொண்டி மூட்டைக்குள் கத்துகிறான் - போராட்டம்
- ❖ ஆடுமேய்ப்பவன் என்ன என்று கேட்கிறான். அதற்கு நான் ஒரு மொண்டி எனக்கு ஒரு அழகிய அத்தை மகள் இருக்கிறாள் அவளை கட்டிக்கச் சொல்லி என்னை சாக்கில் கட்டிதூக்கிக்கொண்டு போகிறார்கள் என்கிறான் - சூழ்ச்சி
- ❖ ஆட்டுக்காரன் நான் உங்களுடைய அத்த பெண்ணை கட்டிக்கொள்கிறேன் என்று சொல்லி சாக்கு முட்டைக்குள் சென்றுவிடுகிறான் மொண்டி ஆட்டை எல்லாம் ஒட்டிக்கொண்டு வந்துவிடுகிறான் - கொடையாளி
- ❖ வீட்டுக்கு வந்த கணவர்களிடம் தங்கள் மனைவிமார்கள் மொண்டியை தூக்கி போட்டாச்ச என்று கேட்கின்றனர் அதற்கு அவர்கள் போட்டாச்சி என்று கூறுகின்றனர். அங்ன பாருங்க ஆட்ட ஓட்டிக்கொண்டுவந்து மேச்சிகிட்டுடி இருக்கான் என்று கூறுகின்றனர்- அங்கீகாரமில்லா வருகை
- ❖ உங்க சகோதரரிடம் என்னனு போய் கேளுங்கே என்று சகோதரர்களை அவர்களின் மனைவிமார்கள் அனுப்புகின்றனர்- வேவு பார்த்தல்
- ❖ மொண்டியிடம் கேட்டுகின்றனர். அதற்கு என்ன தூக்கிகப்போடும் போது நம்ம அப்பா அம்மா வாங்கி என்ன வேணும் என்று கேட்டாங்க ஆடு வேணும்னு சொன்ன குடுத்தாங்க ஓட்டிக்கொண்டு வந்துவிட்டேன் என்கிறான் - சூழ்ச்சி
- ❖ அவனுடைய சகோதரர்களின் மனைவிமார்கள் தங்களின் கணவர்களை நாகமலை உச்சிக்கு அழைத்துச் சென்று மூட்டையில் அவர்களைக் கட்டி ‘தொலஞ்சியோ தொலஞ்சி’ என்று எறிகின்றனர். வரும்போது ஆடு, மாடுகளை ஓட்டிக்கொண்டு வாங்க என்று சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்துவிடுகின்றனர் – கொடுஞ்செயல்
- ❖ வீட்டுக்கு ஆடு வரல மாடும் வரல மொண்டியும் சொன்று காலில் விழுந்து மன்னிப்பு கேட்கிறார்கள் - குறையை உணர்ச்செய்தல்
- ❖ இரண்டு பேருமை முடியையும் பிடித்து அடி அடி என்று அடிக்கிறான் - தண்டனை
- ❖ அவர்களை மன்னித்து இருவரையும் கட்டிக்கொள்கிறான் – திருமணம்

**முடிவுரை**

நாமக்கல் வட்டார நாட்டுப்புறக் கதையான மொண்டிக்கதையைப் பிராப்பின் 31 வினைகளோடு பொருத்திப் பார்க்கும் போது சூழ்ச்சி, கொடுஞ்செயல் ஆகிய வினைகளே அதிகமாக காணப்படுகின்றன. மேலும் மொண்டிகதையில் காணலாகும் வினைகள் கதாப்பாத்திரங்களின்

செயல்களைப் பொருத்து மாறாமல் கதைகளின் நிலையான மாறிகளாக அவை காணப்படுகின்றன. அதோடு மட்டுமல்லாமல் அவை கதைகளின் அடிப்படை உறுப்புகளாக அமைந்துள்ளன.

**அடிக்குறிப்புகள்**


1. டாக்டர்.சு.சக்திவேல் (2012) நாட்டுப்புற இயல் ஆய்வு (பதினைந்தாம் பதிப்பு) மணிவாசகர் பதிப்பகம், 31., சிங்கர் தெரு, பாரிமுனை, சென்னை-600 108.
2. தி.சு.நடராஜன் (2018) திறனாய்வுக் கலை கொள்கைகளும் அணுகுமுறைகளும், (பன்னிரெண்டாம் பதிப்பு) நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098.
3. தே.லூர்து (2001) நாட்டார் வழக்காற்றியல் கோட்பாடுகள் (முதற்பதிப்பு), நாட்டார் வக்காற்றியல் ஆய்வு மையம், தூய சவேரியார் (தன்னாட்சி) கல்லூரி, பாளையங்கோட்டை.
4. ராமசாமி (2001) மொண்டிக்கதை, விவசாயக்கூலி, அக்கியம்பட்டி காலனி, நாமக்கல் மாவட்டம்

லிட்டெரி ஃபைண்டிங்ஸ்
பல்துறை ஆய்வுக்கான பன்னாட்டு ஆய்விதழ்

LITERARY FINDINGS

A Peer Reviewed International Journal of Multidisciplinary Research - ISSN :2278-2311

VOL: 12 JULY - 2023 ISSUE: 3

# திருக்குறள் வழி ஆளுமை மேம்பாடு

## THIRUKKURAL WAY OF PERSONALITY DEVELOPMENT

*Dr. B. Srividhyabarathi

*முனைவர் பா.ஸ்ரீவித்யாபாரதி
உதவிப் பேராசிரியர்
இராமசாமி தமிழ்க் கல்லூரி,
காரைக்குடி.

***Abstract***

There is no universally accepted principle about personality today. Personality can be defined as the set of thoughts, feelings, and behaviors that make someone unique. Personality is formed from within and shapes one's entire life span. It is said that the Tamil word is derived from the English word 'personality' to denote a concept. The word 'persona' in Latin means 'cover', 'mask'. So personality is based on the concept of a mask that one wears. It is not an exaggeration to say that Tirukkural is a repository of developmental elements of human life. This essay Elucidates the aspects that Paved the way to Personality Development Emphasized in famous Thirukkural.

***Key words: Behaviour, Personality, Mask, Development, Life.***

**முன்னுரை**

ஆளுமை குறித்து அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட உறுதியான வரையறை இன்று வரை இல்லை. ஒருவரை தனித்துவமானவராக ஆக்கும் எண்ணங்கள், உணர்வுகள், நடத்தைகள் என்பனவற்றிலான ஒன்றை ஆளுமை என வரையறை செய்யலாம். ஆளுமை ஒருவரின் உள்ளிருந்து உருவாகி அவருடைய வாழ்க்கைக் காலம் முழுவதையும் சீராக அமைக்கின்றது ஆளுமை என்னும் தமிழ்ச்சொல் “பர்சனாலிட்டி” என்னும் ஆங்கிலச் சொல்லைக் குறிக்கும், கருத்துருவைக் குறிக்க ஏற்பட்டதாகக் கூறுவர். இலத்தீன் மொழியில் “பர்சனா” என்ற சொல்லுக்கு மறைப்பு, முகமூடி என்பது பொருள். எனவே ஆளுமை என்பது ஒருவர் அணிந்திருக்கும் முகமூடி என்னும் கருத்துருவை அடிப்படையாகக் கொண்டது. மனித வாழ்வின்

மேம்பாட்டுக் கூறுகளின் களஞ்சியம் திருக்குறள் என்றால் அது மிகையாகாது. அத்தகைய சிறப்பு வாய்ந்த திருக்குறளின் வழி ஆளுமை மேம்பாட்டுச் செய்திகளை இக்கட்டுரையில் காணலாம்.

**ஆளுமை குறித்த உளவியல் வல்லுநர்களின் கருத்து**

ஆளுமை குறித்தும் பல்வேறு அறிஞர்கள் பல வகையான கருத்துக்களை வழங்கி உள்ளனர்.

வாரன் என்னும் அறிஞர் ஒருவனுடைய நுண்ணறிவு, சுபாவம், திறமை மற்றும் எண்ணங்கள் ஆகியவற்றின் நிலையே ஆளுமை ஆகும் என்று விளக்கம் தருகின்றார்.

ஆல்பிரட் என்னும் அறிஞரின் கருத்து சற்று வித்தியாசமானது, ஒரு தனி மனிதனின் தனித்தன்மையான நடத்தையினையும், சிந்தனையினையும் முடிவு செய்கின்ற அவனுடைய உள, உடல் அமைப்பே ஆளுமை எனப்படுகின்றது என்று அவர் விளக்கம் தருகிறார்.

ஒரு தனிமனிதனுக்குரிய உள செயல்பாடுகளும், உளநிலைகளும் கொண்ட மொத்த அமைப்பே ஆளுமை என்று லிண்டன் விளக்கம் தருகிறார்.

**ஆளுமைப் பண்புகள்**

ஓர் ஆள் சிறந்த ஆளுமையாக வரத் தேவையான பண்புகளாக பின்வரும் பண்புகளைக் குறிப்பிடலாம்.

- துணிவு
- நேர்மை
- இனிமையாகப் பேசுதல்
- உண்மை
- கனவு காணுதல்
- இலக்கை அடைய முனைதல்
- காலம் அறிந்து செயல்படல்
- கவலைகளைக் கடத்தல்
- கோப உணர்வு மேலாண்மை
- தலைமைப் பண்பு
- கல்வி

**திருக்குறளில் ஆளுமை**

திருக்குறளில் மனிதனது ஆளுமைப் பண்பை மேம்படுத்துவதற்கான செய்திகள் குவிந்து கிடக்கின்றன. ஒவ்வொரு மனிதரிடத்தும் இறை அம்சம் பொருந்தியுள்ளது. அவன் தன்னை விலங்குகள் போன்றோ, குற்றம் புரிந்தவன் என்றோ எண்ணி தாழ்த்திக் கொள்ள வேண்டியதில்லை. நம்பிக்கையோடு வாழ வேண்டும். இதனை

**வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்**
**தெய்வத்துள் வைக்கப் படும்** (குறள் 50)

என்று கூறினார் திருவள்ளுவர். எனவே வாழ்வாங்கு வாழ மனிதன் தன் ஆளுமைப் பண்பை மேம்படுத்திக் கொள்வது அவசியமாகும். அப்பொழுதுதான் அவன் தன்னிடம் உள்ள உயர்ந்த இறைப்பண்பை உணர்ந்து உயர்நிலை அடைய முடியும்.

**துணிவு**

நேர்மையுடன் நல்ல காரியங்களுக்காகப் போராடுவதைத்தான் துணிவு என்கிறோம். நம்மை விட ஆற்றல் மிக்கவர்களிடம் தோற்றுப் போவோம் என்று தெரிந்து கொண்ட பிறகும் கடைசிவரை விடாமுயற்சியுடன் வெல்வோம் என்று நம்பிக்கை உணர்வுடன் போராடும் அஞ்சாமை தான் துணிவு ஆகும். தெரு விளக்கில் படித்து தனது திறமையால் படிப்படியாக முன்னேறி சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியாக உயர்ந்த ஜஸ்டிஸ் முத்துசாமி ஐயர் எதற்கும் அஞ்சாத துணிவு கொண்டவர். ஒரு சமயம் உயர் நீதிமன்ற நீதிபதியாக இருந்த ஆங்கிலேயரின் வீட்டுத் தோட்டத்தில் நுழைந்ததற்காக ஒருவரை கடுமையாகத் தாக்கிவிட்டார் அந்த ஆங்கிலேய நீதிபதி. அந்த வழக்கு ஜஸ்டிஸ் முத்துசாமி ஐயரிடம் விசாரணைக்கு வந்தது. முத்துசாமி ஐயர் அந்த ஆங்கிலேய நீதிபதியை நீதிமன்றத்திற்கு வரவழைத்து அவர் செய்தது

குற்றம் என தீர்ப்பளித்து மூன்று ரூபாய் அபராதமும் விதித்தார். இதுதான் துணிவு. எந்த ஒரு காரியத்திலும் வெற்றிபெற துணிவு மிக அவசியமாகும். இந்த உயர்ந்த ஆளுமைப் பண்பை வள்ளுவர்

**எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்**

**எண்ணுவம் என்பது இழுக்கு** (குறள் 467)

என்று குறிப்பிடுகின்றார்.

**நேர்மை**

நேர்மை என்பது ஒருவர் உண்மைக்கு ஆதரவாக நேர்வழியில் நடந்து கொள்ளும் மனித இயல்பாகும். நேர்மை எவரிடம் காணப்படுகின்றதோ அவருக்கு மனிதரிடையே என்றும் ஒரு மதிப்பும், மரியாதையும் இருக்கும். நேர்மையான குணஇயல்பைக் கொண்ட மனிதர்கள் காலம் கடந்தும் போற்றப்படுவர். இத்தகைய மிகச் சிறந்த ஆளுமைப் பண்பை வள்ளுவன் நடுவுநிலைமை என்னும் அதிகாரத்தில் சுட்டுகின்றார். முன்னே தான் சமமாக இருந்து பின்பு பொருளைச் சீர்தூக்கும் துலாக்கோல் போல் அமைந்து ஒரு பக்கமாக சாயாமல் நடுவுநிலைமை போற்றுவது சான்றோர்க்கு அழகாகும் என்று வள்ளுவர் இப்பண்பு குறித்துக் குறிப்பிடுவதை,

**சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்**

**கோடாமை சான்றோர்க்கு அணி (குறள் 118)**

என்னும் குறளால் அறியலாம்.

**இனிமையாகப் பேசுதல்**

ஒருவர் வாயிலிருந்து வரும் சொல் அன்பு கலந்ததாகவும், வஞ்சனையற்றதாகவும், வாய்மை யுடையதாகவும் இருப்பின் அதுவே இன்சொல் எனப்படும். இனிமையான சொல் அழகான இதயங்களைத் திறக்கும் திறவுகோல் ஆகும். வார்த்தைகள் மனிதன் கண்டறிந்த, மனிதனுக்கு வாய்த்த அரிய வரம் என்றால் அது மிகையாகாது. ஏனெனில் மனிதப் பேச்சுக்கள் அற்றுப்போனால் மனிதனும் மரம் போல எந்த நகர்வும் இல்லாமல் இருந்திருப்பான். எத்தகைய நபரும் எடுத்தவுடன் இனிய சொற்களைப் பேசிவிட முடியாது. நல்லவர்களைப் பார்த்துத் தான் அதைக் கற்றுக் கொள்ள முடியும். சமுதாய நல்வாழ்விற்கான தேவையை உணர்ந்தவர்களும், மக்களிடம் அன்பு கொண்டவர்களுமே அத்தகைய நல்லோர் ஆவர். அவர்கள் சொல்லும் சொற்கள் அன்பை வெளிப்படுத்தும், கனிவைக் காட்டும். இவை வெறும் நடிப்பாக இல்லாமல் உண்மையாக இருக்கும். அவர்கள் மெய்யுணர்வு உடையவர்களாகவும் இருப்பர். இதனை திருவள்ளுவர் உண்மையை உணர்ந்தவர்களின் வாய்ச்சொல் எந்த அளவுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்குமோ அதுபோல நல்ல இனிமையான வார்த்தைகள் மனத்தில் இன்பத்தையும் நெஞ்சில் ஈரத்தையும் கசிந்துருகச் செய்துவிடும் என்று குறிப்பிடுகின்றார். இதனை

**இன்சொலால் ஈரம் அளைஇப் படிறுஇலவாம்**

**செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்** (குறள் 91)

என்ற குறளால் அறியலாம்.

**உண்மை**

உண்மை என்பது சொல் வழுவாமையைக் குறிக்கும். அதாவது உள்ளத்தில் உள்ளது மாறாமல் அதனை வாய்வழியாகப் பேசுவது உண்மை எனப்படும். உண்மை எங்கு இருக்கின்றதோ அங்கு எல்லா நற்குணங்களும் தாமாகவே வந்து சேரும் என்பார்கள். நினைப்பில் தூய்மையும், சொல்லில் உண்மையும் மிகவும் அவசியமானவை. உண்மை ஒரு மனிதனுக்குரிய மதிப்பையும், மரியாதையையும் கூட்டும், இது ஒரு சீரிய ஆளுமைப் பண்பாகும். அதனால்தான் வள்ளுவர் உள்ளத்தால் பொய்யாது நடந்து வருவானாயின் அவன் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் இருப்பவன் ஆவான். சிறந்த உயர்வையும் பெறுவான் என்று குறிப்பிடுகிறார். இதனை

**உள்ளத்தாற் பொய்யாது ஒழுகின் உலகத்தார்**

**உள்ளத்துள் எல்லாம் உளம் (குறள் 294)**

என்ற குறளால் அறியலாம்.

மேலும் பொய்யாமை என்னும் அறத்தையே பொய்யாகாது தொடர்ந்து செய்து வந்தால் பிற அறச்செயல்கள் ஏதும் செய்யாத போதிலும் கூட அது நன்மையைத் தரும் என்று அவர் குறிப்பிடுவதை,

**பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற**

**செய்யாமை செய்யாமை நன்று** (குறள் 297)

என்ற குறளால் அறியலாம்.

**கனவு காணுதல்**

கனவு என்பது நீ தூக்கத்தில் காண்பது அல்ல. உன்னைத் தூங்க விடாமல் செய்வதே இலட்சியக் கனவு என்கிறார் அப்துல் கலாம். மனதில் விரியும் இலட்சியக் கனவுகள் தான் நம் வாழ்க்கையை வண்ணமுற தீட்டும் தூரிகை ஆகும். கனவுகள் தான் வாழ்க்கை எனும் வசந்த மாளிகையை அடைய துணை புரியும் வரைபடம் ஆகும். கனவு மனிதனுக்கு வாய்த்த அற்புத வரம். தனது குறிக்கோள்களை நோக்கி அவனை உந்துகிற ஆற்றல் மிகுந்த விசை கனவு. புறத்தில் அடைய முடியாத சிக்கல்களுக்கு அகத்தில் ஏற்படும் ஆழ்மனத் தீர்வே கனவாக வெளிப்படுகின்றது. ஒரு கருத்தை எடுத்துக்கொள். அந்த ஒரு கருத்தையே வாழ்க்கையின் மையமாக்கு. அதையே கனவு காண். அந்த ஒரு கருத்தை ஒட்டியே வாழ்ந்து வா. மூளை, தசைகள், நரம்புகள் உன் உடலின் ஒவ்வொரு பகுதியிலும் அந்த ஒரு கருத்தே நிறைந்திருக்கட்டும். அந்த நிலையில் மற்ற எல்லா கருத்துக்களையும் மறந்துவிடு. அதுவே வெற்றிக்கு வழி என்று விவேகானந்தர் குறிப்பிடுகின்றார். இதனை வள்ளுவப் பெருந்தகை எண்ணுவதெல்லாம் உயர்வைப் பற்றியே எண்ண வேண்டும். அவ்வுயர்வு கைகூடாவிட்டாலும் அவ்வாறு எண்ணுவதை விட கூடாது என்று குறிப்பிடுகின்றார்.

இக்கருத்தினை

**உள்ளுவது எல்லாம் உயர்வுள்ளல் மற்றது**

**தள்ளினும் தள்ளாமை நீர்த்து (குறள் 596)**

என்ற குறளால் அறியலாம்.

இலக்கை அடைய முனைதல்

மனிதத் தேவைகளில் ஏழு வகையான விஷயங்களுக்கு இலக்குகள் தேவை என்கிறார்கள். அவை

1. **மனம் (நினைவாற்றல், ஈடுபாடு, கற்றல், படைப்பு)**
2. **உடல்நிலை (ஆரோக்கியம், எடை குறைப்பு )**
3. **குடும்பம் (குடும்பத்தினர் இடையே நல்லுறவு)**
4. **சமூகம் (நண்பர்கள் இடையே நல்லுறவு)**
5. **ஆன்மிகம் (தேடல், மன அமைதி, பொது சேவை)**
6. **வேலை (பிடித்த வேலை, அதிக ஊதியம் தரும் வேலை)**
7. **சொத்து (நிம்மதியான வாழ்க்கைக்குத் தேவையான அளவு)**

ஒரு காரியம் நடக்க வேண்டும் என்று ஆசைப்படுவது மட்டும் போதாது. அதை எப்படி முடிக்க வேண்டும் என்பதற்கு ஒரு இலக்கு வேண்டும். இவ்வாறு இலக்கை முடிப்பதற்கு வள்ளுவர் காலம் கைகூடும் வரையில் கொக்கு போல் பொறுமையாகக் காத்திருக்க வேண்டும். காலம் வாய்ப்பாகக் கிடைத்ததும் அது குறி தவறாமல் குத்துவது போல் செய்து முடிக்க வேண்டும் என்று குறிப்பிடுகிறார். இதனை

**கொக்கொக்க கூம்பும் பருவத்து மற்றதன்**

**குத்தொக்க சீர்த்த இடத்து** (குறள் : 490)

என்னும் குறளால் அறியலாம்.

**காலம் அறிந்து செயல்படுதல்**

ஒவ்வொருவருடைய வாழ்விலும் முக்கிய பங்கு வகிப்பது காலம் ஆகும். எதை இழப்பினும் முயன்றால் அதனைத் திரும்பப் பெறலாம். ஆனால் காலம் அப்படியல்ல. அதனால் தான் காலத்தின்

அருமையை உணர்ந்தவர்கள் சாதனையாளர்கள் ஆகின்றனர். நேரத்தின் மதிப்பு குறித்துப் பின்வருமாறு கூறுவார்கள்.

பத்து வருடங்களின் மதிப்பை சமீபத்தில் விவாகரத்து செய்த தம்பதிகளைக் கேளுங்கள்.

நான்கு வருடங்களின் மதிப்பை ஒரு பட்டதாரியிடம் கேளுங்கள்.

ஒரு வருடத்தின் மதிப்பை இறுதித் தேர்வில் தோல்வியுற்ற மாணவனிடம் கேளுங்கள்.

ஒன்பது மாதங்களின் மதிப்பை அப்போதுதான் குழந்தை பெற்ற இளம் தாயிடம் கேளுங்கள்.

ஒரு மாதத்தின் மதிப்பைக் குறிப்பிட்ட காலத்திற்கு முன்னதாகவே குழந்தை பெற்ற ஒரு தாயிடம் கேளுங்கள்.

ஒரு வாரத்தின் மதிப்பை ஒரு வார பத்திரிகையின் ஆசிரியரிடம் கேளுங்கள்.

ஒரு மணி நேரத்தின் மதிப்பை சந்திக்கக் காத்திருக்கும் காதலர்களிடம் கேளுங்கள்.

ஒரு நிமிடத்தின் மதிப்பைப் பேருந்தையோ, விமானத்தையோ, இரயிலையோ தவறவிட்ட பயணியிடம் கேளுங்கள்.

ஒரு வினாடியின் மதிப்பை விபத்திலிருந்து மயிரிழையில் உயிர்தப்பிய நபரிடம் கேளுங்கள். ஆயிரத்தில் ஒரு வினாடியின் மதிப்பை ஒலிம்பிக் ஓட்டப்பந்தயத்தில் வெள்ளிப் பதக்கம் வென்ற வீரரிடம் கேளுங்கள்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த காலத்தை சரியாகப் பயன்படுத்துவதும் மிக உயர்ந்த ஆளுமைப் பண்பாகும். இத்தகைய நேர மேலாண்மை குறித்து திருவள்ளுவர் காலந்தாழ்த்தி செய்யத் தக்கவற்றைக் காலம் தாழ்ந்தே செய்ய வேண்டும். காலம் தாழ்த்தாமல் விரைந்து செய்ய வேண்டிய செயல்களை செய்ய காலம் தாழ்த்தக்கூடாது என்று குறிப்பிடுகின்றார். சிறப்பு வாய்ந்த இக்கருத்தை

**தூங்குக தூங்கிச் செயற்பால தூங்கற்க**

**தூங்காது செய்யும் வினை** (குறள் 672)

என்ற குறளால் அறியலாம்.

**கவலைகளைக் கடத்தல்**

கவலை அல்லது துயரம் என்பது இழப்பு, உதவியற்ற நிலை, பயனற்ற நிலை போன்ற உணர்ச்சிகளை வெளிக்காட்டும் ஒரு மன உணர்வாகும். போல் எக்மான் வகுத்துள்ள ஆறு அடிப்படை உணர்ச்சிகளான மகிழ்ச்சி, கவலை, கோபம், ஆச்சரியம், பயம் மற்றும் அருவருப்பு ஆகியவற்றில் கவலையும் அடங்கும். இந்நிலையில் மனிதர்கள் பொதுவாக அமைதியாகவும், ஆதரவற்ற நிலையிலும், ஏனையோரிடமிருந்து விலகியும் இருக்க முற்படுவர். அழுகை மூலமாகவும் இத்தகைய மன உணர்வு வெளிக்காட்டப்படும். அதிகப்படியான கவலைகளால் அமைதியின்மை, தூங்குவதில் சிரமம், சோர்வு, நடுக்கம், மன அழுத்தம், இதயநோய் போன்றவை ஏற்படும். மேலும் சில சமயங்களில் தற்கொலை உணர்வையும் தூண்டும். 90 விழுக்காடு மக்கள் நடந்து முடிந்த நிகழ்வுகளுக்காகவும், ஏழு விழுக்காடு மக்கள் நடக்கப்போகும் நிகழ்வுகளுக்காகவும், மூன்று விழுக்காடு மக்கள் நடந்து கொண்டிருக்கும் நிகழ்வுகளுக்காகவும் கவலை கொள்வதாக ஒரு புள்ளியியல் ஆய்வு குறிப்பிடுகின்றது. எனவே கவலைகளைக் கடத்தல் என்பது இன்றியமையாத ஆளுமைப் பண்பாகும். இதனைக் குறித்து வள்ளுவர் இடையூறுகள் வந்த போது அதற்காக வருந்தாத மனத்தெளிவு உள்வர்கள், துன்பத்துக்குத் துன்பம் உண்டாக்கி அதனைப் போக்கிவிடுவர் என்று குறிப்பிடுகிறார். இதனை

**இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு**

**இடும்பை படாஅ தவர்** (குறள்:623)

என்ற குறளால் அறியலாம்.

மேலும் அவர் கவலையிலிருந்து விடுபட அழகான மாற்று ஏற்பாடும் தருகிறார். துன்பங்கள் வரும்போது மனம் தளராமல் நகைத்து ஒதுக்க வேண்டும். துன்பங்களைக் கடப்பதற்கு அதனை விடச் சிறந்த வழி எதுவும் இல்லை என்று வள்ளுவர் குறிப்பிடுவதை

**இடுக்கண் வருங்கால் நகுக அதனை**

**அடுத்தூர்வது அ∴தொப்பது இல்** (குறள்: 621)

என்ற குறளால் அறியலாம்.

**கோப உணர்வு மேலாண்மை**

கோபம் என்னும் உணர்வு நம் அறிவிலும், உடலிலும், நடத்தையிலும் மாற்றத்தை ஏற்படுத்தக் கூடியது. ஒரு மனிதன் தன்னை அச்சுறுத்தும் வேறு ஒரு வெளி சக்தியை எதிர்க்க எடுக்கும் முடிவே மூளையின் தேர்வான கோபமாகும். கோபத்தின் வெளிப்பாடுகளை முகபாவனைகள், உடல் மொழி, மூர்க்கத்தனமான நடவடிக்கைகள் ஆகியவற்றால் கண்டறியலாம். கோபம் என்பது சிறிய எரிச்சல் அளவில் தொடங்கி கடுமையான வெறி கொண்டது வரை இருக்கலாம். வில்லியம் டிபூர் என்னும் கோப மேலாண்மை எழுத்தாளர் கோபத்தை உயர் அழுத்த சமையற்கலனுடன் (பிரஷர் குக்கர்) ஒப்பிடுகிறார். நமது கோபத்தின் மீது நாம் அழுத்தம் கொடுக்கலாம். ஆனால் அது வெடிக்கும் வரையே என்று குறிப்பிடுகிறார். உளவியலாளர்கள் மூன்று வகையான கோபங்களைக் கண்டறிந்துள்ளனர். அவை

1. பதற்றத்துடன் கூடிய திடீர் கோபம்

   இது சுய பாதுகாப்பின் போது வெளிப்படும்

2. அமைதியான உள்நோக்கத்துடன் கூடிய கோபம்

   ஒருவர் தன்னை நியாயமில்லாத வகையில் நடத்தும் போது வெளிப்படும்

3. இயற்கையான மனநிலையோடு ஒன்றிப்போகும் கோபம்

   எப்போதும் எரிச்சல் அல்லது கடுப்பாக இருப்பது.

அதிகப்படியான கோபத்தால் நரம்புகள் விரைவில் செயல் இழந்து விடும். கோபப்படுகின்றவர்கள் சுற்றத்தார்களை, ஏன் தன் குடும்பத்தையே இழந்து தன்னந்தனியாக இருக்க நேரிடும். கோபம் மாரடைப்பு முதலான இருதய நோய்களை உண்டாக்கி உயிரைப் பறித்து விடும் என்று மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். எனவே தான் ஒரு மனிதன் கோபத்தில் இருக்கும்போது வன்முறையைத் தவிர்க்க அவ்விடத்தை விட்டு நீங்க வேண்டும் என்றெல்லாம் உளவியலாளர்கள் குறிப்பிடுகின்றனர். கோப மேலாண்மை என்பது மிகச் சிறந்த ஆளுமைப் பண்பாகும். இத்தகைய கோப மேலாண்மை குறித்து வள்ளுவர் கோபத்தால் தான் தீமை வருகின்றது. அதனால் எவரிடத்திலும் கோபம் கொள்வதை விட்டு விட வேண்டும் என்று குறிப்பிடுகின்றார். இதனை

**மறத்தல் வெகுளியை யார்மாட்டுந் தீய**

**பிறத்தல் அதனான் வரும்** (குறள்: 303)

என்ற குறளால் அறியலாம்.

மேலும் அவர் ஒருவன் தன்னைத்தான் காத்துக் கொள்வதனால் சினம் வராமல் காத்துக் கொள்ள வேண்டும். காக்காவிட்டால் சினம் தன்னையே அழித்துவிடும் என்று குறிப்பிடுவதை

**தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்**

**தன்னையே கொல்லுஞ் சினம்** (குறள் 305)

என்ற குறளால் அறியலாம்.

**தலைமைப் பண்பு**

தலைமைப் பண்பு என்பது அவ்வளவு எளிதானது அல்ல. பல நிலைகளையும் பல சூழல்களையும் கையாளும் திறமையினால் பெற்றிருப்பது தான் தலைமைப் பண்பு ஆகும். தனக்குக் கீழ் செயல்படுபவர்களின் தனித்திறனை அறிந்து அவர்களுக்குரிய பணிகளை ஒதுக்கீடு செய்வது தலைமைக்குரிய தனித்திறனாகும். இத்தகைய மிகச் சிறந்த ஆளுமைப் பண்பை வள்ளுவர்

**இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து**

**அதனை அவன்கண் விடல்** (குறள் : 517)

என்று குறிப்பிடுகிறார்.

மேலும் சோர்வு இல்லாது அஞ்சாது சொல்வதற்கு வல்லவனாகச் சொல்லின் செல்வனாக ஒருவன் திகழ்வானேயானால் அவனை யாராலும் வெல்ல இயலாது என்று அறுதியிட்டுக் கூறுகின்றது குறள். இதனை

**சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை**

**இகல்வெல்லல் யார்க்கும் அரிது** (குறள்: 647)

என்னும் குறளால் அறியலாம்.

தான் மேற்கொண்டிருக்கின்ற செயல் திட்டத்தின் மீது மனதை ஒருமுகப்படுத்தி அர்ப்பணிப்பு உணர்வோடு செயல்படுகின்ற தன்மை ஒரு தலைவனுக்கு தேவையானதாக இருக்கின்றது என்பதை

**எண்ணிய எண்ணியாங்கு எய்துவர் எண்ணியார்**

**திண்ணியர் ஆகப் பெறின்** (குறள் : 666)

என்ற குறள் வலியுறுத்துகின்றது. இத்திருக்குறளில் எண்ணியார் என்ற சொல் ஒருவரின் மன உறுதியைக் குறிக்கின்றது. ஒரு செயலைச் செய்ய நினைப்பவர் மன உறுதியை ஆளுமைப் பண்பாகக் கொண்டவராக இருக்கும் பொழுதுதான் எண்ணிய எல்லா இலக்குகளையும் திட்டமிட்டபடி தவறாது செய்து முடிக்க முடியும் என்று கூறுகின்றது.

மேலும் தான் ஏற்ற பணியை மனம் கலங்காமல், காலம் தாழ்த்தாமல், சோர்வில்லாமல், முயற்சியோடு செய்வது தான் தலைமைப் பண்பு என்பதை வள்ளுவர்

**கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது**

**தூக்கம் கடிந்து கொள்** (குறள் 668)

இங்ஙனம் குறிப்பிடுகின்றார்.

மாபெரும் செயலைச் செய்வதற்கு மனவலிமை தான் அடிப்படைக் காரணமாக அமைகின்றது. எனவே ஊக்கம் என்பது அடிப்படையான தலைமைப் பண்பாகும். ஊக்கம் இல்லாதவர்கள் இவ்வுலகில் உயர்ந்த நிலையை அடைந்து விட்டோம் என்னும் பெருமையை ஒருபோதும் அடைய மாட்டார்கள் என்று வள்ளுவர் குறிப்பிடுவதை

**உள்ளம் இல்லாதவர் எய்தார் உலகந்து**

**வள்ளியம் என்னும் செருக்கு** (குறள் 598)

என்ற குறளால் அறியலாம்.

ஒரு தலைமை என்னதான் பல துறைகளில் தேர்ச்சி பெற்று, கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கினாலும் உலகத்தோடு பொருத்தி வாழக் கற்றிருக்க வேண்டும். அத்தகைய ஆளுமைப் பண்பில் சிறந்து விளங்கினால் தான் சமூகம் அவனைப் பாராட்டும். இதனை

**உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்**

**கல்லார் அறிவிலா தார்**

என்ற குறளால் அறியலாம். (குறள் 140)

**கல்வி**

இன்றைய உலகில் இன்றியமையாத ஒன்றாகத் திகழ்வது கல்வியாகும். மனிதனாகப் பிறப்பது அரிது. அரிதான அப்பிறப்பினைப் பெற்றுவிட்டால் கல்விச் செல்வத்தையும் பெற்றுக் கொள்வது மேலும் சிறப்பு. ஏனெனில் கல்வியின் மூலம் தான் ஒருவரது வாழ்வில் எல்லா சிறப்புகளையும் பெற முடியும். கல்விதான் ஒருவனை அறிவாளியாக்குகின்றது. கல்வி கற்பதன் மூலம் எல்லா வளங்களும் கிடைக்கும். கல்வியால் வாழ்க்கையில் ஏற்படும் இடர்களை எல்லாம் வெல்ல முடியும். மன பயத்தினை போக்கும் வல்லமை கல்விக்கு உண்டு. கல்வி ஒன்றே நிலையானது. கல்வி வாழ்வில் எப்பொழுதும் தொடரக்கூடிய ஒரு

செல்வமாகும். இளமையில் கல்வி கற்கும் பொழுது கல்வியானது நம்மை மிக உயர்ந்த நிலைக்கு அழைத்துச் செல்லும், உயர்ந்த பதவிகளையும் பெற்றுத் தரும். கல்வியின் மூலம் பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த முடியும். இதன் மூலம் மிகச் சிறந்த ஆளுமையாக உருவாகுவதற்கு கல்வி இன்றியமையாதது என்பதை அறியலாம். இத்தகைய கல்வியின் சிறப்பு திருவள்ளுவரால் பல குறள்களில் பேசப்படுகின்றது.

ஒரு பிறவியில் ஒருவன் கற்ற கல்வியானது ஒருவனுக்கு தொடர்ந்து வரும் ஏழு பிறப்புகளிலும் அவனைப் பாதுகாக்கும் சிறப்புடையது என்று வள்ளுவர் கல்வியின் சிறப்பை முன்மொழிவதை,

**ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு**

**எழுமையும் ஏமாப்பு உடைத்து** **(குறள் 398)**

என்ற குறளால் அறியலாம்.

மேலும் தாம் இன்பம் அடைவதாகிய கல்வியினாலே உலகத்தாரும் இன்பம் அடைவதைக் கண்டு கற்றறிந்தவர் மென்மேலும் தாம் கற்பதையே விரும்புகிறார்கள் என்றும் வள்ளுவர் குறிப்பிடுகின்றார். இதனை

**தாம்இன் புறுவது உலகுஇன் புறக்கண்டு**

**காமுறுவர் கற்றறிந் தார்** (குறள் 399)

என்ற குறளால் அறியலாம்.

கற்றவனுக்கு எந்த நாடும் நாடாகும். எந்த ஊரும் ஊராகும். இதுவே உண்மையாக இருந்தும் ஒருவன் சாகும் வரைக்கும் கல்லாமல் இருப்பது எதனால்? என்று கற்றவர் பெறும் சிறப்பைக் கூறி ஆதங்கமும் அடைகின்றனர் வள்ளுவர். இதனை

**யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்**

**சாந்துணையும் கல்லாத வாறு** (குறள் 397)

என்ற குறளால் அறியலாம். இங்ஙனம் மிகச்சிறந்த ஆளுமையாக ஒருவர் உருவாகுவதற்கு கல்வி இன்றியமையாதது என்று வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

**முடிவுரை**

மனிதன் ஆளுமைப் பண்போடு மிகச் சிறந்த வாழ்வை வாழ்வதற்கு திருக்குறள் சிறந்த திறவுகோல் என்றால் அது மிகையாகாது. திருக்குறள் என்பது எண்ணற்ற ஆளுமைத் தேன் துளிகளை தன்னுள் அடக்கிய இனிமையான தேன்கூடு என்பது இக்கட்டுரையின் வழி அறியலாகும் செய்தியாகும். துணிவு, நேர்மை, இனியவை கூறல், உண்மை, இலட்சியக் கனவு காணல், இலக்கை அடைய முனைதல், நேர மேலாண்மை, கவலைகளைக் கடத்தல், கோப உணர்வு மேலாண்மை, தலைமைப் பண்பு, கல்வி என்று சிறந்த ஆளுமையாக ஒரு மனிதன் உருவாகத் தேவையான அத்தனை புதையல்களும் திருக்குறளில் அடங்கியுள்ளன. அப்புதையல்களை விழிவாசல் வழி சிந்தனை அறையில் சேர்த்தால் மிகச் சிறந்த ஆளுமையாக ஒவ்வொரு மனிதரும் உருவாகலாம் என்பதை இக்கட்டுரையின் மூலம் அறியலாம்.

**பார்வை நூல்**


1. எஸ். சுந்தர சீனிவாசன் - ஆளுமை மேம்பாடு
2. பரிமேலழகர் உரை - திருக்குறள்
3. https://www.myupchar.com
4. https://www.seithipunal.com

லிட்டெரி ஃபைண்டிங்ஸ்
பல்துறை ஆய்வுக்கான பன்னாட்டு ஆய்விதழ்
LITERARY FINDINGS
A Peer Reviewed International Journal of Multidisciplinary Research - ISSN :2278-2311
VOL: 12 JULY - 2023 ISSUE: 3

# சமூகப்பார்வையில் திருநங்கைகள்

## TRANSGENDER PEOPLE IN SOCIETY

*S. Akila & Dr. B. Sakthikumaravel

*செ.அகிலா
*முனைவர் ப.சக்திகுமாரவேல்
உலக சமுதாய சேவா சங்கம் விஷன் ஸ்கை ஆராய்ச்சி மையம்,
அறிவுத் திருக்கோயில்,
அருட்பெருஞ்ஜோதி நகர்,
ஆழியாறு, பொள்ளாச்சி – 642 101.

***Abstract***

In a society that has been mockingly called by names like Ali, Aravani, and Nine for ages, the life of transgenders is characterized by not being able to live as a man or a woman, not being respected in the society with mental burden, losing their self-respect, stress, sexual harassment and many kinds of problems. If society has the vision to see them as fellow human beings, their lives can be enriched. It is not their fault that they were born as a third gender. These are lives to be lived. The third gender is ready to work. They also have skills. This study has been carried out to make them aware of these and to ignore their inferiority complex and lead to the development of their morale through Vedatri Mahari's training.

***Key words: Society, Burden, Work, Stress, Inferiority, Skills.***

**முன்னுரை**

காலங்காலமாக அலி, அரவாணி, ஒன்பது போன்ற சொற்களால் கேலியுடன் அழைக்கப்பட்டு வந்த சமுதாயத்தில், ஆணாகவோ அல்லது பெண்ணாகவோ வாழமுடியாமல், மனச்சுமையுடன் சமுதாயத்தில் மதிக்கப்படாமல், தங்களது சுய மரியாதையை இழந்து, மன அழுத்தத்திற்கும், மன உளச்சலுக்கும், பல விதமான சிக்கலுக்கும் உரியதாக திருநங்கைகளின் வாழ்க்கை அமைந்துள்ளது. இவர்களை சகமனிதர்களாகப் பார்க்கும் பார்வை சமூகத்திடம் இருந்தால் அவர்களது வாழ்க்கையை வளமாகக்க முடியும்.

மனிதர்களின் உயிர் அணுக்களில் குரோமோசோம்களின் பாதிப்பால் இப்பிறவி எடுத்துள்ளனர். ஆண் வடிவில் பெண் உணர்வு கொண்டது சாபமாக அல்லது பாவமாக இருப்பது யாருக்கும் புரியாத புதிராகவே உள்ளது.

சிவபெருமான் அர்த்தநாரிஸ்வரராக இருப்பதும், கிருஷ்ணர் மோகினி அவதாரம் எடுத்ததும், அரவான் புராணங்களில் உருவாக்கப்பட்டதும் மூன்றாம் பாலினத்தவர் என்ற ஒரு வகையினர் பிறப்பெடுத்துள்ளதை வெளிகாட்டியுள்ளது. ஆணாகவும் இல்லாமல் பெண்ணாகவும் இல்லாமல் இப்படியொரு பிறவி ஏடுத்திருப்பவர்களை சமூகம் கடுமையாக இழிவுபடுத்துகிறது என்புத கசப்பான உண்மை.

மூன்றாம் பாலினத்தவர் என்று கருதப்படும் திருநங்கைகள் கல்வி கற்பதற்கும் தொழில் ஆற்றுவதற்கும் மக்களுள் மக்களாக கலந்து கொள்வதற்கும் இச்சமூகம் அனுமதி அளிப்பதில்லை. அவர்களைக் கண்டால் தங்களது உடல் மொழி மூலமாக இழிவுபடுத்த தொடங்குகின்றனர். கேலிக்கும் கிண்டலுக்கும் ஆளாகின்றார்கள். பெற்றோராலும் புறக்கணிக்கப்பட்ட நிலையில் எந்தவித பாதுகாப்பும் இன்றி தனியாளாக அனாதை என்ற சொல்லுக்கும் மேலாக வாழ வேண்டிய சூழலில் உள்ளார்கள்.

இவர்கள் உயிர் வாழ்வதற்காகவும் வயிற்றுப் பிழைப்பிற்காகவும் பேருந்துகளிலும் புகை வண்டிகளிலும் சாலை ஓரங்களிலும் யாசகம் கேட்டு நிற்பது நடப்பியல் உண்மை. இதனால் அதிகப்படியான தாழ்வு மனப்பான்மை இவர்களுக்குள் ஆழமாக பதிந்துள்ளது. தன்னம்பிக்கை சிறிதும் இல்லாமல் வாழ்கின்றார்கள்.

மூன்றாம் பாலினத்தவராக பிறந்தது இவர்களது பிழை அல்ல. இவர்களும் வாழ வேண்டிய உயிர்கள் தான். மூன்றாம் பாலினத்தவர் உழைப்பதற்கு தயாராக இருக்கின்றார்கள். அவர்களுக்குள்ளும் திறமைகள் இருக்கின்றன. இவற்றை அவர்களுக்கு உணர்த்தி அவர்களுக்குள்ள தாழ்வு மனப்பான்மையையும் புறக்கணிக்கச் செய்து நிமிர்ந்து நடை போடுவதற்கான விழிப்புணர்வை வேதாத்திரி மகரிஷியின் பயிற்சி மூலமாக அவர்களின் மனவள மேம்பாட்டிற்கு வழிவகுப்பதே இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வேதாத்திரி மகரிஷி வழங்கிய மனவளக்கலை யோகப்பயிற்சிகளை திருநங்கைகளுக்கு கற்றுத் தருவதன் மூலம் அவர்களின் மனமும், உடலும் மேம்படும் என்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

**திருநங்கையாக மாற்றத்திற்குண்டான காரணங்கள்**

மனிதனில் பால் நிலையை தீர்மானிக்கும் படிநிலை கருவில் நிகழ்கிறது. இது நிறமூர்த்தங்களாலும், ஹார்மோன்களாலும் தீர்மானிக்கப்பட்டு உடல் கூற்றியல் சார்பாக வெளிப்படுத்தப்படுகின்றது.

பால் நிலையை தீர்மானித்தலானது, உள்ளக மற்றும் வெளியக இலிங்க உறுப்புகள் உருவாக்கம், மார்பு, உடல்நிலை மற்றும் முடி உருவாக்கம் ஆகிய பிரதான காரணியாகிறது. மனித கலங்கலில் 46 நிறமூர்த்தங்கள், 23 ஜோடியாக காணப்படுகின்றது.

இதில் ஒரு ஜோடி நிறமூர்த்தம் (குரோமசோம்) பால் நிர்ணயத்திற்கு பொறுப்பான இலிங்க நிறமூர்த்தங்கள் ஆகும். ஆணில் ஓலு எனவும் பெண்ணில் ஓஓ எனவும் பொதுவாக இவ்விங்க நிறமூர்த்தங்கள் அமைந்திருக்கும்.

ஒரு மடியப் பிரிவினால் உருவாக்கப்படும் சூல்கள் X(Chromosome) நிறமூர்த்தத்தினையே கொண்டிருக்கும். விந்தணுக்கள் X அல்லது Y(Chromosome) நிறமூர்த்தத்தினை கொண்டிருக்கும். இவை இரண்டும் இணைந்து இரு மடிய களம் உருவாகும் பொழுது XX பெண்ணாகவும் XY ஆணாகவும் உருவாகின்றது.

இதில் நிறமூர்த்தத்தில் (Chromosome) ஏற்படும் குளறுபடி காரணமாகவோ அல்லது ஹார்மோன்கள் காரணமாகவோ சுரப்பிகளில் பிரச்சனையால் இருபாலினர் உருவாக காரணமாகின்றது. உயிர் அணுக்களில் இருக்கும் 22 இணை குரோமோசோம்களுடன் ஒரு Y மற்றும் பெண்பால் தன்மை ஏற்படுத்தக்கூடிய X இணையும்போது (46 XY) ஆண் உருவாக்குகிறார்.

ஒரு X மற்றும் பெண்பால் தன்மையை ஏற்படுத்தக்கூடிய மற்றொரு X இணையும்போது (46 XX) பெண் உருவாகிறார். இதிலிருந்து மாறுபட்டு சில சமயம் பெண் கருமுட்டை கூடுதலாக ஒரு X குரோமோசோம் அல்லது ஆணிலிருந்து வரும் ல் குரோமோசோம் கூடுதலாக ஒரு X அல்லது Y குரோமோசோம் கருமுட்டையுடன் வந்து இணைவதால் பிறக்கின்ற குழந்தை ஆணாகவோ பெண்ணாகவோ அல்லது இரண்டும் இல்லாமலும், இரண்டுமாகவும் பிறப்பது இரு பாலின பிறப்பான மூன்றாம் பாலின பிறப்பாகிவிடுகின்றது.

**திருநங்கைகளின் மன உணர்வு**

ஆணாகப் பிறந்து வளர்கின்ற பருவத்தில் மெல்ல மெல்ல உடலில், உணர்வில் மாற்றங்கள் ஏற்படும் போது திருநங்கைகளின் செயல்களில் மாற்றங்கள் ஏற்படுகின்றது.

- பெண்களுக்கான உடைகளை அணிவது.
- பெண்களைப் போன்று நடை உடை பாவனை செய்வது.
- பெண்கள் செய்யும் வேலைகளை விருப்பமுடன் செய்வது.
- பெண்களுக்கான அணிகலன்களை மறைத்துவைத்து பயன்படுத்துவது.

இவை போன்ற செயல்களைச் செய்யும் போது பெற்றோர்கள், உறவினர்கள், நண்பர்கள் ஆகியோரின் கேலிகளுக்கு ஆளாகி வீட்டை விட்டு வெளியேறும் சூழலுக்கு உள்ளாகிறார்கள்.

பெற்றோரே புறக்கணிக்கும் சூழல் தான் அவர்களை மன உளச்சலுக்கு ஆளாக்கி இருக்கிறது. இச்சூழ்நிலைகளால்,

- தனிமை
- பயம்
- குழப்பம்
- அவமானம் போன்ற உணர்வுகளுக்கு ஆட்கொள்ளப்படுகின்றனர்.

இவ்வாறு ஏற்பட்ட சூழ்நிலைகளினால் சமுதாயத்தில் பல்வேறு சிக்கல்களுக்கு உள்ளாகின்றனர். திருநங்கைகள் தங்களைப் போன்றவர்களைத் தேடிச் செல்லும் நிலையில் தம்போன்ற தங்கள் இனத்தவருடன் இணைந்து கொள்கிறார்கள். இதனால்

- யாசகம் (பிச்சை) கேட்டல்
- பாலியல் தொழிலில் ஈடுபடுதல்
- போதை பொருள்கள் பயன்படுத்துதல்

ஆகிய பல்வேறு செயல்களில் ஈடுபட தள்ளப்படுகிறார்கள். மேலும் தங்களது நடை, உடை, பாவனைகளை மாற்றி அமைத்துக்கொள்கின்றார்கள்.

ஆண் உருவில் பெண்மைத்தன்மை ஆளுமை செய்யும் போது இவர்கள் பெண்ணாகவே செயல்படுகிறார்கள். இதன் காரணமாக பெண்ணாக வாழ முடிவுசெய்து இவர்கள் அறுவை சிகிச்சை மூலம் பிறப்புறுப்பை நீக்குதல், செயற்கையான மார்பகங்களை அமைத்துக்கொள்ளுதல், தோலில் மற்றும் அழகிற்கான சிகிச்சைகளை மேற்க்கொள்ளுதல், ஹார்மோன் சிகிச்சை போன்ற இயற்கைக்கு எதிரான மாற்றங்களை செய்துக்கொள்கிறார்கள் இதனால் சில சமயங்களில் சிலருக்கு உயிர் போகும் ஆபத்தான சூழ்நிலையையும் எதிர்கொள்கிறாரகள்.

திருநங்கைகள் அறுவை சிக்ச்சைகளை மேற்க்கொள்ளுவதால்

- நீண்ட தூரம் நடக்க இயலாது
- நெடுந்தூரம் பயணங்கள் செல்ல இயலாது
- சீறுநீரை அடக்கிவைத்துக்கொள்ள இயலாது

போன்ற உடல் ரீதியான பாதிப்புகள் ஏற்படுகின்றது. இது அவர்களுக்குத் தெரிந்ததுதான் என்றாலும் சமுதாயதிதில் பெண்ணாக வலம்வர வேண்டுமென்று திருநங்கைகள் அறுவை சிகிச்சைகள் செய்துக்கொள்வது சமூகத்தை சிந்திக்க வைப்பதாக இருக்கின்றது.

**திருநங்கைகள் எதிர்கொள்ளும் சிக்கல்கள் / இன்னல்கள்**

சமுதாயத்தில் ஆணும் இல்லாமல் பெண்ணும் இல்லாமல் பிறந்து, மூன்றாம் பாலினமாக வாழும் திருநங்கையர் பல்வேறு சமூக இன்னல்களுக்கு ஆளாகின்றனர். குடும்பம் மற்றும் சமூகத்தால் நிகழ்ந்த பல்வேறு வன்முறையின் காரணமாக வீட்டை விட்டு வெளியேறி திருநங்கையர்களோடு இணைந்து 'திருநங்கை சமூகம்' என்ற தனிச்சமூக அமைப்பை ஏற்படுத்திக்கொண்டு வாழ்கின்றனர்.

திருநங்கையரின் வாழ்வில் எதிர்கொள்ளும் இன்னல்கள் எண்ணிலடங்காதவை. அவை

- சமூக சிக்கல்கள்
- குடும்ப சிக்கல்கள்
- கல்வி கற்பதில் ஏற்படும் சிக்கல்கள்
- காதல் சிக்கல் / திருமண சிக்கல்
- வாழ்வாதார சிக்கல்கள்
- வேலைவாய்ப்பில் ஏற்படும் சிக்கல்கள்
- பொருளியல் சிக்கல்கள்
- அடிப்படை உரிமை பெறுவதில் சிக்கல்கள்

**சமூக சிக்கல்கள்**

திருநங்கையர் தங்கள் பெற்றோர்களாலும் உறவுகளாலும் புறக்கணிக்கப்பட்ட பின்னர் தங்களது மன உணர்வுகளை ஆசைகளை நிறைவேற்றிக் கொள்ள வேண்டி திருநங்கையர் என்ற சமூக அமைப்பில் இணைந்து கொண்டு வாழ்கின்றனர்.

திருநங்கையர்களிடம் ஜாதி அமைப்புக் கிடையாது. இவர்கள் எந்த ஜாதி மதத்தைச் சார்ந்தவராக இருந்தாலும் திருநங்கை என்ற ஜாதி அமைப்பிற்குள் இணைந்து திருநங்கையாக வாழும் சமூகத்தின் தலைவியை 'மாத்தா' என்றழைக்கின்றனர். மாத்தாவை தங்களது தெய்வமாக போற்றி வணங்கி வருகின்றனர். திருநங்கைகளிடம் ஏழு வகையான சமூக முறைகள் நிலவுகின்றன. இதுவும் அவர்கள் செய்யும் தொழில் அடிப்படையில் தான் ஏற்பட்டு இருக்கின்றது.

- பூனா கருவாலி
- லாலா கருவாலி
- ஹைதராபாத் வாலி
- லங்கர் வாலி
- மந்திர் வாலி
- பஞ்சாப் வாலி
- சக்கலக் வாலி

என்னும் ஏழு சமூக அமைப்புகள் காணப்படுகின்றன. நாளுக்கு நாள் ஆண் தன்மையில் இருந்து மாறி திருநங்கையாகும் நபர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. இதன் மூலம் திருநங்கையர் சமூகம் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றது.

**திருநங்கையரின் குடும்ப சிக்கல்கள்**

திருநங்கையின் பிறப்பு என்பது பெற்றோர்களின் தவறல்ல. குரோமோசோம் மாறுபாட்டினால் ஏற்படுகின்ற சிக்கல் ஆகும். திருநங்கைகளிடம் பெண்ணுக்கான மாற்றங்களைக் காணும் போது பெற்றோர்களே திருநங்கைகளின் பிறப்பினை அவமானமாகக் கருதி இவர்களை வெறுத்து ஒதுக்கும் நிலை ஏற்படுகிறது. தங்களது குடும்ப மதிப்பு பாதிக்கப்படுவதாகக் கருதுகின்றனர்.

உடன் பிறந்தவர்கள் வார்த்தைகளாலும், வன்முறையாலும் துன்புறுத்துகின்றனர். உறவினர்கள் இவர்களை ஏளனமாகவும் கேள்விக்குறியவர்களாகவும் பார்க்கின்றனர். நண்பர்கள் இவர்களைக் கேலி செய்து அவமானப்படுத்தி ஒதுக்கிவைக்கின்றனர். பெற்றோர்களால், உடன்பிறப்புகளால், உறவினர்களால் மற்றும் நண்பர்களால் புறக்கணிக்கப்பட்ட இவர்கள் மனவேதனையுடன் குடும்பத்தைவிட்டு வெளியேறுகின்றனர்.

**பெற்றோர்களின் புறக்கணிப்பு**

சிறுவயதில் ஆண் குழந்தைக்கு பெண் உடையினையும், பெண் குழந்தைக்கு ஆண் உடையினையும் அணிந்து அழகு பார்த்த பெற்றோர்கள், அந்த குழந்தை 12 வயதினை அடையும்போது பால் மாறுபாட்டினால் உடலளவில் ஆணாக இருந்தாலும் பெண்மைத்தன்மை மேலோங்குவதால் பெண்ணாக வாழ முற்படுகின்றனர். பெண்ணாக இருந்தால் ஆண்மைத்தன்மை மேலோங்கி தன்னை ஆணாக பாவித்து வாழ முற்படுகிறார்கள்.

திருநங்கைகள் இப்படித் தன்னை மாற்றிக் கொண்டு ஆண், பெண் என்று அடையாளத்தொடு வாழ்வதை பெற்றோரும் மற்றோரும் விரும்புவதில்லை. அது மட்டுமில்லாமல் அவர்களை எதிர்கின்றார்கள்.

மனித இனவிருத்தி, சமூக மதிப்பு, இயற்கை நீதி போன்ற காரணங்களால் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் மன உணர்வுக்கு மதிப்பு அளிப்பதற்கு பதிலாக அவர்களை வெறுத்து, துன்புறுத்தி, வீட்டைவிட்டு வெளியேறிவிடும் அவலநிலைக்கு தள்ளிவிடுகின்றனர்.

**தற்கொலைக்கு தூண்டும் உணர்வு**

ஆணாகப் பிறந்து பெண்பால் உணர்வு கொண்டு பெண்ணுடை அணிதல், கண்மை தீட்டுதல், உதட்டுக்குச் சாயமிடுதல், பெண்கள் செய்யும் வேலைகளை செய்தல் இதனை ஏற்றுக்கொள்ள மனமின்றி பெற்றோர்கள் பெண் உணர்வு கொண்ட மகன் மீது இழிவான வார்த்தைகளால் உடலளவிலும் மனதளவிலும் காயத்தை ஏற்படுத்தி, தற்கொலை செய்துக்கொள்ளும் மனநிலையிக்கு தள்ளிவிடுகின்றார்கள்.

**மன உளைச்சல்**

திருநங்கையர்கள் பெண்ணாக வாழமுடியவில்லை என்ற மன அழுத்தத்திற்கு ஆளாகின்றார்கள். உடன் பிறந்தவர்கள் இவர்களைக் கேவலமாகப் பேசி மனதளவில் வன்மத்தை வளர்க்கிறார்கள்.

பெற்றோர், உடன்பிறந்தவர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்களின் புறக்கணிப்பிற்கு ஆளான திருநங்கையர் மன உளைச்சலுக்கு ஆளாகி தற்கொலை செய்து கொள்ளவும் துணிகின்றார்கள்.

**உரிமைகள் நிராகரிப்பு**

திருநங்கையர் பெற்றோர்களால், அவர்கள் தந்தையின் சொத்துக்களைப் பெறுவதில்லை. காரணம், உடன்பிறந்தவர்களால் வீட்டை விட்டு விரட்டி அடிக்கப்படுவதால் அவர்கள் சொத்துக் கேட்கும்போது அவர்களுக்கு அவர்களுககுரிய சொத்தினைத் தர மறுப்பதால் வன்முறைகளை கையாளுகின்றனர். திருநங்கையர் தாய் தந்தையர் இறந்துவிட்டால் கொள்ளியிட அனுமதிப்பதில்லை. அவர்களுக்குத் தம் பெற்றோர் வீட்டில் எந்த தொடர்பும் இல்லை என்பதும் எந்த உரிமையும் இல்லை என்பதும் அவர்களின் மனதைப் பாதிக்கும் காரணிகள்.

**கல்வி கற்பதில் ஏற்படும் சிக்கல்கள்**

கல்வி என்பது அறிவு, நல்லொழுக்கம், கற்றலையும், கற்பித்தலையும் குறிக்கும். இது திறன்கள், தொழில்கள், உயர்தொழில்கள் போன்ற வளர்ச்சியடைவதற்கு அடிப்படையானது. ஒருவரின் உடல், உள்ளம் சார்ந்த வளர்ச்சிக்கு கல்வி அறிவு அவசியமானதாகும்.

ஆண் தன்மையிலிருந்து பெண் தன்மையோடு வாழ முற்படும் திருநங்கையரை குடும்பம், சக மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களால் கேலிக்கும், அவமானத்திற்கும் ஆளாக்கப்படுகின்றனர். இதனால் கல்வியைத் தொடர முடியாமல், கல்வி நிலையத்தை விட்டு வெளியேறும் சூழ்நிலை உருவாகின்றது. பால்மாற்று அறுவை சிகிச்சை செய்துகொண்ட திருநங்கையர் உயர்கல்வி பெறுகின்றனர். அப்படியே அவர்கள் கல்லூரி வாழ்க்கையில் அடி எடுத்து வைத்தாலும் திருநங்கையர்கள் நடைபிணமாக வாழ வேண்டிய சூழ்நிலைதான் இருக்கின்றது.

திருநங்கைகள் பள்ளி பருவத்தில் தனக்குள் இருக்கும் பெண் தன்மையை உணர்வதால் சக மாணவர்கள் குடும்பத்தில் இருக்கும் தாய் தந்தையர் மற்றும் உறவினர் தனக்குள் இருக்கும் பெண்மண உணர்வினை புரிந்து கொள்ளாததால் பள்ளி படிப்பை தொடர முடியாமல் இடையில் நிறுத்தி விடுகின்றனர்.

**பள்ளிச் சேர்க்கையில் சிக்கல்**

பள்ளியில் சேரும்போது அதற்கான விண்ணப்பத்தில் ஆண், பெண் என்ற இரு பாலினத்தில் எந்த பாலினத்தைச் சேர்ந்தவர் என்பது கேட்கப்பட்டிருக்கும். மூன்றாம் பாலினத்தவர் என்றோ மாற்று பாலினத்தவர் என்றோ கேட்கப்படுவதில்லை.

கல்வி இட ஒதுக்கீடு, சமூகம் மற்றும் பொருளாதார அளவில் பின்தங்கி இருக்கும் மாணவர்களுக்கு அவர்களின் சாதிவிகித விகிதாச்சார அடிப்படையில் பள்ளி மற்றும் கல்லூரி சேர்க்கையில் இட ஒதுக்கீடு இருப்பதால் ஏனைய சமூகத்தை சேர்ந்த மாணவர்கள் கல்வி பயின்று முன்னேறி வருகின்றனர். இம்மாதரியான இட ஒதுக்கீடு திருநங்கையருக்கு இல்லை என்பதால் அவர்களுக்கான வளர்ச்சிநிலை தடைபடுகிறது.

**காதல் சிக்கல் / திருமண சிக்கல்**

தன் ஆணுறுப்பு அகற்றி பெண்ணாக மாறினாலும் கர்ப்பப்பை இல்லாத காரணத்தினால் இவர்களால் குழந்தையை பெற்றுக் கொள்ள முடியாது. பெண்ணின் மென்மையான குரல் வளத்தினை பெறமுடியாத நிலை போன்ற காரணங்களினால் காதல் வாழ்க்கையில் திருநங்கையர் ஏமாற்றமும், தோல்வியையும் தழுவி தற்கொலை செய்து கொள்கின்றனர்.

திருநங்கையரின் வாழ்வில் ஏற்படும் காதல் பேரும்பாலும் மனஉளச்சலுக்கு ஆளாகி திருமணத்திற்குக் கொண்டுசெல்வதில்லை. திருநங்கையைக் காதலித்து திருமணம் செய்து கொள்ளும் ஆடவரின் குடும்பத்தினர் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். இவர்களின் திருமணத்தை ஏற்றுக் கொள்வதில்லை. வாரிசு இல்லாமல் போகும் என்ற காரணம் முன் நிற்கின்றது. இதனால் இவர்களது திருமண வாழ்க்கையும் தோல்வியில் முடிந்து விடுகின்றது.

திருமணம் என்ற நிகழ்வுக்கு ஆண், பெண்ணிடையே நடைபெறுகின்ற சமூகச் சடங்கு முறை எதுவும் நடைபெறுவதில்லை. இதனால் திருநங்கைகள் திருமணம் செய்து கொள்வதையும் இந்த சமூகம் ஏற்றுக் கொள்வதில்லை என்பது அறிய முடிகின்றது.

**தாய்மை பேறு அடைவதில் சிக்கல்**

திருநங்கைகளுக்கு கர்ப்பப்பை கிடையாது. இவர்கள் தங்களது ஆணுறுப்பை நீக்கிவிட்டு திருமணம் செய்துகொண்டாலும் குழந்தை பெற்றுக்கொள்ள முடியாது. திருமணத்தின் முக்கிய அங்கமே தாய்மைப் பேறுதான். இதனை திருநங்கைகளால் நிறைவு செய்ய முடியாது என்ற காரணத்தினால் ஆடவர்கள் திருநங்கைகளை திருமணம் செய்துகொள்ள முன்வருவதில்லை. திருநங்கையர் சட்டத்தின் வழியே திருமண பதிவு செய்யவோ நிவாரண பெறவும் முடியாது.

திருமணம் என்பது ஒருவர்க்கொருவர் தோழமையுடன் வாழ்வது என்ற உணர்வினை இச்சமூகம் எடுத்துரைத்து அவர்களது வாழ்க்கைக்கு வழிகாட்டல் அவசியம் என்பதை இவ்வாய்வு புலப்படுத்துகிறது.

**வாழ்வாதார சிக்கல்கள்**

திருநங்கையரின் வாழ்வியல் சிக்கல்கள் பல. திருநங்கையர் அவலமான வாழ்வையே மேற்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின்றனர். இருப்பிடம், கழிப்பறை, பேருந்து பயணம், அரசியல் பங்கேற்பு, ஓட்டுரிமை போன்றவற்றில் பல்வேறு சிக்கல்களை எதிர்கொள்கின்றனர். எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் ஆண்களுக்குத் தனி கழிப்பறை வசதியும் பெண்களுக்குத் தனி கழிப்பறை வசதியும் இருப்பது போன்று மூன்றாம் பாலினத்தவர்க்கும் கழிப்பறை வசதி வேண்டும் என்று இச்சமூகம் சிந்திப்பதில்லை என்பதே ஆதங்கம்.

**வசிப்பிட சிக்கல்**

திருநங்கையர் தங்கள் குடும்பத்தை விட்டு வெளியேறி தனி சமூகமாக திருநங்கை என்னும் சமூக அமைப்பாக இயங்கி வருகின்றனர். திருநங்கையர் நடைமுறை பழக்க வழக்கங்களில் சக மனிதர்களைப் போல் இல்லாமல் மாறுபட்டு காணப்படுவதால் வாடகைக்கு வீடு கொடுப்பதற்கு யாரும் முன்வருவதில்லை.

அப்படியே வாடகைக்கு வீடு கொடுத்தாலும் வாடகை அதிகமாக வசூலிக்கப்படுகின்ற நிலை. சமூகம் அவர்கள் மீது வைத்திருக்கும் கீழான மதிப்பை எடுத்துக்காட்டுகிறது.

**கழிப்பறை சிக்கல்**

திருநங்கையர் தங்களை பெண்ணாக பாவித்துக்கொண்டாலும் இவர்கள் உடலால் ஆணாக இருப்பதால் பொதுக் கழிப்பறையை பயன்படுத்துவதில் சிக்கல்கள் ஏற்படுகின்றன. பொது இடங்களில் ஆண், பெண் கழிப்பறை இருப்பது போன்று திருநங்கைகளுக்கும் தனி கழிப்பறை ஏற்படுத்திக் கொடுத்தால் அவர்கள் படும் அவமானங்களில் இருந்தும் கேலி கிண்டலிலிருந்து மீண்டு உரிமையுடன் வாழ முடியும்.

**பயணங்களில் சிக்கல்**

திருநங்கைகள் பேருந்து, புகைவண்டி பயணங்களின் போது பெண்களுக்கு என்று தனியாக ஒதுக்கப்பட்ட இடங்களில் பெண்களோடு அமர்ந்து பயணம் செய்யும்போது சகபயணிகளால் கேலிக்கு உள்ளாகி அவமானப்படுத்தப்படுகின்றனர். பெண்களோடு அமர்ந்து பயணம் செய்யும் போது பொதுமக்களால் துன்புறுத்தப்படுகின்றனர்.

**வேலைவாய்ப்பில் ஏற்படும் சிக்கல்கள்**

திருநங்கைக்கு வேலை வாய்ப்புக் கொடுப்பதற்கு சமூகம் முன்வருவதில்லை. இதன் காரணமாக திருநங்கைகள் வாழ்வாரத்திற்காக பாலியல் தொழில் செய்வதற்கு விருப்பமின்றியே செல்கின்றனர். இந்தத் தொழிலினால் ஏற்படக்கூடிய சிக்கல்களை எதிர்கொள்ள வேண்டியநிலை ஏற்படுகின்றது. திருநங்கைகள் செய்யும் தொழில்களின் அடிப்படையில் அவர்களிடையே சாதிமுறை வகுக்கப்படுகின்றது.

**பொருளியல் சிக்கல்கள்**

திருநங்கையர் வாழ்கின்ற இடத்திற்கு ஏற்ப சூழ்நிலைக்கு ஏற்ப பாலியல், சமையல், நடனம், பாடல், யாசகம் கேட்டல் போன்ற தொழிலை மேற்கொண்டு வருகின்றனர். எனினும் பாலியல் தொழிலுக்கு முக்கியத்துவம் தரும்படியான சூழலில் தான் அவர்கள் வாழ்கிறார்கள்.

**அழகு நிலையம்**

திருநங்கையர் சிலர் அழகு நிலையம் வைத்திருக்கின்றனர். முறையாக அழகுக் கலை பயிற்சியைப் படித்து சான்று பெற்று இத்தொழிலினை மேற்கொண்டு வருகின்றனர். ஆயினும் திருநங்கையரைத் தவறான கண்ணோட்டத்துடனே இந்த சமூகம் பார்க்கின்றது என்பதுதான் உண்மை நிலை. அவர்கள் தொழில் செய்து பொருள் ஈட்டி கவுரவமாக வாழ நினைத்தாலும் இச்சமூகம் அவர்களை வாழவிடுவதில்லை.

**குடிசைத் தொழில்**

திருநங்கை வாழ்வில் முன்னேற்றத்திற்காக 'கடவுளின் குழந்தைகள்' என்ற பெயரில் சங்கம் அமைத்து பல திருநங்கைகள் ஒன்று சேர்ந்து குடிசைத் தொழில் புரிகின்றனர்.

**அடிப்படை உரிமை பெறுவதில் ஏற்படுகின்ற சிக்கல்கள்**

உலக மனித உரிமைகளின் பிரகடனம் 1948 இல் உருவாக்கப்பட்டது. உலகில் பிறந்த அனைவருக்கும் உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும் வேண்டும் என்பது மனித உரிமைச் சட்டத்தின் மாபெரும் கொள்கையாக உள்ளது. ஆனால் திருநங்கையர் மனிதராகவே மதிக்கப்படவில்லை என்பதுதான் உண்மை. நடைமுறையில் திருநங்கையரின் கல்வி, சொத்துரிமை, வாக்களித்தல், மணவாழ்வு, குழந்தை வளர்ப்பு, அரசியல் பங்கேற்பு போன்ற உரிமைகள் மறுக்கப்பட்டு வருகின்றன.

திருநங்கைகளுக்கு பிறப்பு அடிப்படையில் பெண்களைப் போல் கர்ப்பப்பை கிடையாது. இதனால் இவர்களுக்கு வாரிசினை உருவாக்குகின்ற ஆற்றல் இல்லாமல் போய்விடுகிறது. இதன் காரணமாக திருநங்கையரை பெண்களாக அங்கீகரிப்பதற்கும் சட்டம் இடம் தரவில்லை.

**திருநங்கையரின் ஜாதி முறைகள்**

திருநங்கையர்களுக்கிடையே ஏழு வகையான ஜாதி முறைகள் நிலவுகின்றன. ஒவ்வொரு ஜாதியினரும் ஒவ்வொரு வகையான தொழில் புரிகின்றனர்.

**பூனா கருவாலி**

இந்த ஜாதியினர் குழந்தை பிறந்த வீடுகளுக்கு சென்று குழந்தையை ஆசீர்வதித்து, பூஜை செய்து காசு பெறுவர்.

**லாலா கருவாலி**

புதிய கடை திறப்பு விழாக்களில் கலந்து கொண்டு பூஜை செய்து பணம் பெறுவதைத் தொழிலாகக் கொண்டுள்ளனர்.

**ஹைதராபாத் வாலி**

இவர்கள் பாலியல் தொழிலையும், கடை கேட்டலையும் (யாசகம்) தங்கள் தொழிலாக கொண்டுள்ளனர். புதுக்கடை திறப்பு விழாவிற்குச் சென்று பூஜை செய்து பணம் பெறுவதைத் தொழிலாகக் கொண்டுள்ளனர்.

**லங்கர் வாலி**

கும்மி அடித்து, வீடு வீடாகச் சென்று பணம் பெறுவதை தொழிலாகக் கொண்டுள்ளனர்.

**மந்திர் வாலி**

மந்திர் என்ற ஹிந்தி மொழிச் சொல் தமிழில் கோயில் என்பதை குறிக்கும். இந்த ஜாதியை சேர்ந்தவர்கள் கோயிலில் பூஜை செய்து, கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு கைகளில் கயிறுகட்டி விடுவதை தனக்குரிய தொழிலாகக்கொண்டு அதன் மூலம் காசு பெறுவார்கள்.

**பஞ்சாப் வாலி**

இந்த ஜாதியினர் வசதியான நிலையில் வாழ்பவர்கள்.

திருநங்கையர்கள் தங்களுக்குரிய மகளை தத்தெடுக்கும் போது நடுவாக நின்று சடங்கினை செய்து பணம் பெறுவர். மேலும் இவர்கள் வட்டி தொழிலையும் மேற்கொண்டு வருகின்றனர்.

**சக்கல கருவாலி**

இவ்வகை ஜாதியினர் சமையல் செய்வதை தனக்குரிய தொழிலாக கொண்டுள்ளனர். திருமண நிகழ்வு மற்றும் உணவு விடுதிகளில் சமையல் செய்து வருகின்றனர். திருநங்கையரும் மேற்கொண்டவாறு தொழில் அடிப்படையில் ஜாதிகள் அமைந்திருந்த போதிலும் இவர்களிடம் ஜாதி என்பது கிடையாது.

திருநங்கையர் ஜாதி என்ற சொல்லைத்தான் பயன்படுத்துகின்றனர். ஆய்வாளர், சங்கம் என்றும் சமூகம் என்றும் இச்சொல் மொழியை பயன்படுத்தியுள்ளார்.

**கூத்தாண்டவர் திருவிழா**

திருநங்கை என அழைக்கப்படும் அரவாணிகளின் வாழ்க்கையில் மிக முக்கியமான தருணம் அல்லது நிகழ்வாக அமைகின்ற ஒரு விழாவே கூத்தாண்டவர் திருவிழா ஆகும். திருநங்கைகளின் உணர்வோடு இணைந்த ஒரு சமுதாயச் சடங்காக இவ்விழா நடத்தப்படுகின்றது. இந்த திருவிழா ஒவ்வோர் ஆண்டும் சித்திரை மாதம் பௌர்ணமி தினத்தன்று கொண்டாடப்படுகின்றது.

ஐயாயிரம் ஆண்டுகள் தொடர்ச்சியான இந்த பண்பாட்டில் உடல்சார்ந்த, பாலினம்சார்ந்த, பண்பாட்டு ஆன்மீக மரபுகள் உருவாக்கப்பட்டுள்ளன. பாலினச்சிறுபான்மையினருக்கு மையத்துவம் அளிக்கும் உயிர் சடங்குகள், ஆன்மீக நெறிகள், தெய்வங்கள், திருவிழாக்கள் இங்குதான் உள்ளன.

**கூத்தாண்டவர் கோயில்கள்**

இந்தியாவிலுள்ள திருநங்கைகள் மத்தியில் புகழ் பெற்ற புண்ணியத்தலமாக விளங்கக் கூடியது கூத்தாண்டவர் கோயில். தமிழகத்தில், விழுப்புரம் மாவட்டம், மடப்புரம் சந்திப்பிலிருந்து 30.கி.மீ தூரத்தில் உள்ள கூவாகம் கிராமத்தில் திருநங்கைகளுக்கான தனி தெய்வமாகிய கூத்தாண்டவர் கோயில் அமைந்துள்ளது.

இந்தக் கோயில் தவிர விழுப்புரம் மாவட்டம், கண்டாச்சிபுரம் வட்டம் அருணாபுரம் ஸ்ரீ கூத்தாண்டவர் கோயில் மற்றும் பாண்டிச்சேரியிலுள்ள பிள்ளையார் குப்பம், மடுகரை, சிதம்பரம் அருகில் கொத்தட்டை, தேவனாம்பட்டினம் மற்றும் வானூர் வட்டம் தைலாபுரம் பகுதிகளிலும் கூத்தாண்டவர் கோயில்கள் இருக்கின்றன. இருப்பினும் விழுப்புரம் கூவாகம் கிராமத்திலுள்ள கூத்தாண்டவர் கோயில்தான் மிகவும் புகழ்பெற்றது.

சித்திரை மாதம் பௌர்ணமிக்கு மூன்று நாட்களுக்கு முன்பே இந்தியாவின் பல பகுதிகளிலிருந்து திருநங்கைகள் விழுப்புரம் வந்து விடுகின்றனர். இந்நிகழ்வு இந்தியாவின் பல பாகங்களில் இருந்து வரும் திருநங்கைளை ஒன்றிணைக்கும் விழாவாக அமைகிறது. திருநங்கைகள் சந்திக்கவும், அவர்களது உணர்வுகளைப் பகிர்ந்து கொள்ளவும், அவர்கள் கலைகளை வெளிப்படுத்தும் நிகழ்வாகவும் இது அமைகிறது.

மகாபாரத போரில் அரவான் (கூத்தாண்டவர்) களப்பலி கொடுப்பதை நினைவுபடுத்தும் வகையில், இக்கோவில் சித்திரை பெருவிழாவின் 16ம் நாளில் அழுகளம் நிகழ்ச்சி நடப்பதால் கூவாகம் சுற்று வட்ட கிராம மக்கள் 18 நாட்களுக்கு சுப நிகழ்ச்சிகள் செய்வதைத் தவிர்த்துவிடுவர்.

**திருநங்கை தினம்**

திருநங்கையர்களின் சமூக பாதுகாப்பு கருதியும் அவர்களின் சிறப்பை வலியுறுத்தும் வகையில் ஏப்ரல் 15, 2008 ஆம் ஆண்டு தமிழக அரசு திருநங்கைகளுக்கு தனி நல வாரியம் அமைத்தது. இந்த நலவாரியம்

அமைக்கப்பட்ட அந்த நாளை 'திருநங்கையர் தினமாக' ஒவ்வொரு வருடமும் கொண்டாட தமிழக அரசு மார்ச் 1, 2011 அன்று அரசாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அப்போது முதலமைச்சராக இருந்த டாக்டர். கலைஞர். மு. கருணாநிதி அவர்கள் 'திருநங்கையர்' என்று இவர்களுக்குப் பெயர் சூட்டினார்.

திருநங்கைகளை 2015 ஆம் ஆண்டில் தமிழக அரசு மிகவும் பிற்படுத்தப்பட்டவர்கள் பட்டியலில் சேர்த்து உள்ளது. இவர்களது முன்னேற்றம் இந்தியாவில் இவர்களுக்கான சமுதாய மதிப்பு கல்வி பெருகுவதிலும் வேலை வாய்ப்பு வழங்குவதிலும் தான் இருக்கிறது என்று கருதி அரசு வேலை வாய்ப்பு வழங்கி வருகிறது.

கனடா நாட்டில் திருநங்கைகள் சட்டப்படி முழு உரிமை பெற்றுள்ளவராக ஏற்றுக்கொள்ளப்பட்டவர்களாக வாழ்கின்றார்கள்.

**திருநங்கை முன்னுதாரண காலண்டர்**

"இசை, பக்தி, தொழில்முனைவோர், கல்வி, அழகுக் கலை இப்படி ஒவ்வொரு பிரிவிலும் சாதனை புரிந்த திருநங்கைகளைக் கொண்ட காலண்டர்கள் வெளியிடப்படுகிறது. கடந்த 2013-ல் தொடங்கப்பட்ட 'பார்ன் டு வின்' அறக்கட்டளையின் மூலம் பல்வேறு துறைகளில் சாதனை படைத்துவரும் திருநங்கைகளை முன்னுதாரணமாகப் பொது வெளியில் அடையாளப்படுத்த 2014-ல் முதன் முறையாக நாட்காட்டியை வெளியிட்டது இந்த அமைப்பு. அதற்கு அடுத்த ஆண்டான 2015-ல்தான் அமெரிக்காவில் இப்படியொரு காலண்டர் மாற்றுப் பாலினத்தவர் சார்பாக வெளியிடப்பட்டது.

**தொகுப்புரை**

ஆண் தன்மை மேலோங்கி உள்ள திருநங்கைகள் ஆணாகவும் பெண் தன்மை மேலோங்கி உள்ள திருநங்கையர் பெண்ணாகவும் மாற்றம் கொள்ள வேண்டும் என்று விரும்பிய நிலையில் அறுவை சிகிச்சை போன்ற முயற்சிகளில் ஈடுபடுகின்றார்கள். அதனால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் சூழல்கள் சிலருக்கு உருவாகின்றன.

திருமணம் போன்ற பந்தத்தில் இவர்களுக்கு இணைவதற்கு சமூகம் தடை செய்கின்றது என்பது அவர்களை கண்ட நேர்காணல்களின் மூலம் அறியப்படுகிறது. திருநங்கைகளின் திருமண உறவை ஏற்றுக் கொள்வதற்கு உறவினர்கள் எதிர்க்கும் சூழல்தான். திருமண உறவை தோழமை உறவாக ஏற்றுக் கொள்ளும் ஆரோக்கியமான சூழ்நிலை உருவாக்குவதற்கு தன்னார்வக்குழுக்கள் முன் வர வேண்டும். திருநங்கையர் சமூகத்தில் பல்வேறு துறைகளில் சிறுபான்மை எண்ணிக்கையில் முன்னேற்றம் அடைந்திருப்பது பெருமைக்குரிய கருத்து என்றாலும் இன்னும் பெரும்பான்மையோர் அவர்களது மன சிக்கல்களில் இருந்து தங்களை மீட்டுக் கொண்டு தங்களது பங்களிப்பை இந்த சமூகத்திற்கு அளிக்க முன்வர வேண்டும்.

சமுதாயத்தின் திருநங்கைகள் சந்திக்கும் பிரச்சனைகள் ஏராளம். உற்றார், உறவினர்கள், பெற்றோர்கள் உடன்பிறந்தோர் இவர்களை கடைசி மூச்சு இருக்கும் வரை சந்திப்பதும் இல்லை. திருநங்கை பிறப்பு என்பது பெற்றோர்களின் தவறல்ல. குரோமோசோம் மாறுபாட்டினால் ஏற்படுகின்ற சிக்கல் ஆகும். குடும்புச் சூழலை விட்டு விலகி திருநங்கைகள் என்னும் குழுமத்தில் கலந்து விடுவதால் திருநங்கைகள் தங்களின் உரிமைகளை பெற தற்போது பெரிதளவில் முயன்று வருகின்றனர். இதுவே இவர்கள் சமூக நிலையாக இருக்கின்றது.

**மேற்கோள்கள்**


1. எஸ். சரஸ்வதி (2017), "இலக்கண இலக்கியத்தில் திருநங்கைகள்" பயன்பாட்டு ஆராய்ச்சிக்கான சர்வதேச இதழ், தொகுதி, 3(7): பக்.456-462.
2. கி. அய்யப்பன் (2019), "தமிழ் செவ்விய நூல்களில் திருநர்" பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ், அக்டோபர் 2019.
3. எம்.மைக்கேல்ராஜ் (2015), "இந்தியாவில் திருநங்கை சமூகத்தின் வரலாற்று பரிணாமம்," சமூக அறிவியலின் ஆசிய ஆய்வு, தொகுதி. 4 பக். 17-19.

லிட்டெரி ஃபைண்டிங்ஸ்
பல்துறை ஆய்வுக்கான பன்னாட்டு ஆய்விதழ்
LITERARY FINDINGS
A Peer Reviewed International Journal of Multidisciplinary Research - ISSN :2278-2311

VOL: 12 JULY - 2023 ISSUE: 3

# புறநானூறு கூறும் கொடைச்சிறப்பும் மன்னர்களும்

## PURANANOORU KOORUM KODAICHIRAPUM MANNARKALUM

*T. Amarraj

*Abstract*

The *Purananooru* Book, which is considered to be the most important book of the Sangam period, shows the life of the people of that time. Also, some poets have mentioned the characteristic of their generosity while examining many places as proof that the kings of the Sangam period (Kadaiyelu Vallalakal) considered their generosity to be very important.

***Key words: Sangam Period, Kings, Gifts, Generosity.***

***தி.அமர்ராஜ்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

சங்ககால நூல்களுள் மிக முக்கியமானதாக கருதப்படுகின்ற புறநானூறு நூலானது அக்கால மக்களின் வாழ்க்கையை எடுத்துக் காட்டுகிறது. மேலும் சங்க கால மன்னர்கள் தங்களது சிறப்புகளாக பெரிதும் கொண்டிருந்த கொடைத்தன்மையானது மிக முக்கியமானதாக கருதிவந்துள்ளனர் என்பதற்கு சான்றாக பல இடங்களை ஆய்வு செய்கிறபொழுது அவர்களது கொடைத்தன்மையின் பண்பை சில புலவர்கள் ஏற்றியும் கூறியுள்ளனர். மேலும் கடையெழு வள்ளல்கள் அவர்களது ஈகைத் தன்மை பற்றி இங்கே ஆய்வு செய்யப்படுகிறது.

**பாண்டியர்**

> **“தண்டா ஈகைத் தகைமாண் குடுமி!” (புறம்-6)**

பாண்டிய மன்னன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதியின் கொடைத் தன்மையை புலவர் காரிகிழார் குறிப்பிடுகிறார். மேலும்

> **“...............வாழிய குடுமி! தங்கோச்**
> **செந்நீர் பசும்பொன் வயிரியர்க்கு ஈத்த” (புறம்-9)**

என்பதன் மூலம் முதுகுடுமிப் பெருவழுதியின் கொடைச்சிறப்பு பற்றி முக்கிய ஆதாரமாக நமக்குகிடைக்கிறது.

பாண்டியன் பெருவழுதி பாணர்களுக்கு பரிசாக யானையை தந்தமையை,

**'பாணர் தாமரை மலையவும் புலவர்**

**பூநுதல் யானையொடு புனைதேர் பண்ணவும்**

**அறனோ மற்றுஇது விறல்மாண் குடுமி!" (புறம்-12)**

குறிப்பிடப்படுகிறது.

**சேரர்**

சேரமான் செல்வக் கடுங்கோ வாழியாதனின் கொடைக் குணத்தை புலவர் கபிலர் பின்வறுமாறு குறிப்பிடுகிறார்.

**"பரிசிலர்க்கு அருங்கலம் நல்கவும் குரிசில்**

**வலிய ஆகும் நின் தாள்தோய் தடக்கை"**

என்று பரிசாக பெறுதர்க்கு அரிய பொருளையும் பரிசாக கொடுக்கப்பட்டுள்ளதை இங்கே அறிய முடிகிறது.

**சோழர்**

புறாவினது துன்பத்தை தீர்க்க தானே துளாக்கோளின் மீது ஏறி தன் தசையை தானமாகக் கொடுக்க வந்த சிபி மன்னனைப் பற்றி புநானூறு கூறுவதன் மூலம் கொடைத்தன்மையை பெரிதும் மதிப்பு கொண்டிருந்ததை நம்மால் அறிய முடிகிறது.

**"புறாவின் அல்லல் சொல்லிய கறையடி**

**யானை வான்மருப் பெறிந்த வெண்கடைக்**

**கோல் நிறை துலாஅம் புக்கோன் மருக" (புறம்-39)**

இப்பாடலின் மூலம் சோழன் குளமுறத்துத் துஞ்சிய கிள்ளிவளவனின் மரபினைப் பற்றிப்பாடுவது சிறப்பு சேர்த்திருக்கிறது.

**"தன்னகம் புக்க குறுநடைப் புறவின்**

**தபுதி யஞ்சிச் சீரைபுக்க**

**வரையா ஈகை உரவோன் மருக!" (புறம்-43)**

சிபி மன்னனின் செயலை இங்கே பதிவு செய்யப்படுகிறது.

சோழர் மரபினைச் சேர்ந்த நலங்கிள்ளிக்கும் நெடுங்கிள்ளிக்கும் இடையே ஏற்பட்டிருந்த போர் சூழ்நிலையைத் தவிர்க்க, கோவூர் கிழார் சோழன் சிபி மன்னனின் சிறப்பைப் பற்றியும், குறிப்பிட்டு இருவருக்கும் இடையே சமாதானத்தை ஏற்படுத்தினார். இதன் மூலம் முன்னோர் செய்த கொடைச்சிறப்பு மாறாமல் பின்பற்றப்பட்டு வந்துள்ளதை நமக்கு விளக்குகிறது.

**அதியமான்**

அதியமான் நெடுமானஞ்சயின் கொடைச் சிறப்பைப் பற்றிக் கூறும் விதமாக,

**"ஒருநாள் செல்லலம் இருநாள் செல்லலம்**

**புன்னாள் பயின்று பலரொடு செல்லினும்**

**துளைநாள் போன்ற விருப்பானன் மாதோ" (புறம்-101)**

இப்பாடலின் மூலம் அதியமான் அரசவைக்கு பரிசில் பெறவேண்டிவரும் புலவர்க்கு ஒருநாளும் முந்தைய நாள் கொடையை விட அதிகமாகவே தரப்பட்டுள்ளதை சிறப்பித்துக் கூறுவதாக அமைந்திருக்கிறது.

**பாரி**

வேள் பாரியின் கொடைப்பண்பைப் பற்றி பலவர் கபிலர் மழையைப் போல கைமாறு ஏதும் கருதாது கொடையை வழங்குபவன் என்று உயர்வுபடுத்தி சிறப்பித்துக் கூறுகிறார்.

**"பாரி பாரி என்று பல ஏத்தி**

**ஒருவர்ப் புகழ்வர் செந்நாப் புலவர்**

**பாரி ஒருவனும் அல்லன்**

**மாரியும் உண்டு ஈண்டு உலகுபுரப் பதுவே"** **(புறம்-107)**

பாரியின் வள்ளல் தன்மையைப் பாடுவதாக "பறம்பு பாடினர் அதுவே அறம்பூண்டுபாரியும் பரிசிலர் இரப்பின்" (புறம்-108) ல்பறம்பு மலையை பரிசாக பங்கிட்டு கொடுத்ததை இதன் மூலம் அறியமுடிகிறது.

**காரி**

மன்னன் மலையமான் திருமுடிக்காரியின் கொடைகொடுக்கும் அளவு பற்றி குறிப்பிடப்படுகிறது.

**"ஒருதிசை ஒருவனை உள்ளி நாற்றிசைப்**

**பலரும் வருவர் பரிசில் மாக்கள்**

**வரிசை அறிதலோ அரிதே பெரிதும்**

**ஈதல் எளிதே மாவண் தோன்றல்**

**அது நற்கு அறிந்தனை யாயின்**

**பொது நோக்கு ஒழிமதி புலவர் மாட்டே!"(புறம்-121)**

இப்பாடலில் தன்னை தேடி வருகின்ற புலவர்க்கு பரிசில் வழங்கும் முன், அவர் தம் தகுதியை நன்கறிந்து அதற்கு ஏற்ப பரிசு வழங்குக என்று கபிலர் அறிவுரை கூறும் விதமாக அமைந்திருப்பதன் மூலம் பரிசில் பெறவேண்டி வந்த இரவலர்க்கு பரிசு வழங்கியதை அறியமுடிகிறது.

"................**ஈத்த இழையணி நெடுந்தேர்**

**பயன்கெழு முள்ளூர் மீமிசைப்**

**பட்ட மாரி உறையினும் பலவே"** **(புறம்-123)**

இப்பாடலில் வருகின்ற இரவலர்க்குப் பரிசாக தேரையும் கொடுத்தான் திருமுடிக்காரி என்று இதன் மூலம் அவனது கொடைச்சிறப்பு வலியுறுத்தப்படுகிறது.

புலவர்கள் பாடி பரிசில் வாங்கச் செல்லும் முன் நாள் கிழமையும் சரியல்ல என்றும், தீமை தரும் என உணர்த்தும் சகுணங்களைப் பார்த்தும், அன்றைக்கு மலையமான் காரியின் அவைக்கு சென்றாலும் திறன் சொல்லால் பாடினாலும் அவன் பரிசில் தருவான் என்று கூறுவதன் மூலம் புலவர்கள் பரிசில் பெறுவதற்கு நாள் கிழமையைப் பார்த்தனர் என்பதும் தெரிகிறது.

**"நாளன்று போகிப் புள்ளிடைத் தட்பப்**

**புதன்று புக்குத் திறனன்று மொழியினும்**

**வறிது பெயர்குநர் இரங்கும் அருவிப்**

**பீடுகெழு மலையற் பாடி யோரே"** **(புறம்-124)**

இதன் மூலம் நன்கு அறியலாம்.

**ஆய் அண்டிரன்**

வள்ளல் ஆய்அண்டிரனின் கொடைச்சிறப்பினை பற்றி உரையூர் ஏணிச்சேரி முடமோசியார்

**"ஈகை அரிய இழையணி மகளிரொடு**

**சாயின்று என்ப ஆஅய் கோயில்" (புறம்-127)**

இதன் மூலம் கொடைக்கு கொடுத்தற்கு அரிய என "இழையணி" என்பது குறிக்கப்படுவது தாலி தான் என்று ம.பொ.சி அவர்கள் தம் நூலான "மங்கல அணி" என்னும் நூலில் குறிப்பிடுகிறார்.

மேலும் இதனை தாலி அல்ல என்றும் திரு.அ.தட்சிணாமூர்த்தி தம் நூலான தமிழர் நாகரீகமும் பண்பாடு நூலில் "இழை" என்பதற்கு "அணி" என்ற பொதுப்பொருள் உண்டு என்றும் கூறுகிறார்.

திரு.கே.கே. பிள்ளை அவர்களும் ம.பொ.சியின் கருத்தை ஆதரிப்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. எனினும் தன் மனைவி அணிந்துள்ள மங்கல அணியைத் தவிர எல்லாவற்றையும் வழங்கினார் என்று புலவர் பதிவு செய்கிறார்.

மேலும் ஆய்அண்டிரன் இரவலராக வந்தவருக்கு யானைகளையும் பரிசாக வழங்கியுள்ளது கவனிக்கத்தக்கது ஆகும்.

**"இரவலர்க்கு ஈத்த யானையின்"** **(புறம்-129)**

மூலமும் விளங்குகிறது.

"......................... **நின்னாட்டு**

**இளம்பிடி ஒரு சூல் பத்து ஈனுமோ?"** (புறம்-130)

என்றும், "களிறுமிக உடையஇக் கவினபெறு காடே?" என்று புலவர் முடமோசியார் அண்டிரனின் நாட்டில் கொடையாகக் கொடுக்க அளவில்லாத யானையை பெற்றுள்ளான் என்பதையும் கூறுகிறார்.

பரிசில் பெறவேண்டி யான் வரவில்லை ஆயினும் அதை ஏற்காது பரிசில் வழங்கியதையும் கூறுகிறார்.

**"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆம் எனும்**

**அறவிலை வணிகன் ஆஅய் அல்லன்"** (புறம்-134)

என்பதன் மூலம் சுயநலம் கருதாது கொடையறம் செய்பவன் அண்டிரன் என புகழப்படுகிறார்.

ஆய் அண்டிரன் கொடையைப் பற்றி ஔவையர் பின்வருமாறு பாடுகிறார்.

"........................................ **அன்னதோர்**

**தோற்றா ஈகையும் கொல்?"** (புறம்-140)

ஔவைக்கு யானையை பரிசாக தந்தபொழுது இவ்வாறு பாடுகிறார்.

**பேகன்**

பேகனின் கொடைக்குணத்தை பற்றி கபிலர் பரனர் அடிசில்கிழார் பெருங்குன்றூர்கிழார் போன்றோர் பாடுகின்றனர்.

**"எத்துணை ஆயினும் ஈதல் நன்று என**

**மறுமை நோக்கின்றோ அன்றே**

**பிறர் வறுமை நோக்கின்று அவன் கைவண்மையே"**(புறம்-141)

பதிவு செய்கின்றார் புலவர்.

**"கொடைமடம் படுதல் அல்லது**

**படைமடம் படாண் பிறர் படைமயக் குறினே** (புறம்-142)

மூலம் இரந்து நிற்பவர் எத்தகுதியைப் பெற்றிருந்தாலும் வரையறை இன்றி கொடுக்கும் வண்மனம் படைத்தவன் என கூறுகிறது.

கபிலர்,

**"கைவள் ஈகைக் கடுமான் பேக!"**

என்றும் பாடுகிறார்.

பேகனின் கொடைத் தன்மையால் அவனின் மனைவி நலிந்தவளாகி கூந்தலிலே நறும்புகையூட்டி தண்மலர் சூடிட வழி இல்லாமல் இருப்பதாக, கொடைக்குப் பின் நிலையை பதிவு செய்கிறார்.

**"ஒலிமென் கூந்தல் கமழ்புகை கொளீஇத்**

**தண்கமழ் கோதை புனைய"**

என்பதன் மூலம் பேகனின் கொடைக்கு பிந்தைய அவனது மனைவியின் நிலையை எடுத்துக்காட்டுகிறார்.

**நள்ளி**

நள்ளியின் கொடை பற்றி வன்பரனர் என்பார் பாடியுள்ளார்.

**"நள்ளி வாழியோ நள்ளி நள்ளென்**

**மாலைமருதம பண்ணிக் காணக்**

**கைவழி மருங்கிற செவ்வழி பண்ணி**

**வரவுஎமர் மறந்தனர் அது நீ**

**புறவுக்கடன் பூண்ட வண்மையானே"** (புறம்-149)

என்று பாணர்களுக்கு பரிசில் வேண்டி மன்னரிடத்தில் மீண்டும் செல்ல தேவையில்லை என்று எண்ணி மாலைநேரமும் காலைநேரத்திலும் பண்பாடுவதை மறந்தனர் என்று புலவர் ஏற்றிக் கூறியுள்ளார்.

**வல்வில் ஓரி**

ஓரியை பற்றியும் வன்பரனர் பாடியுள்ளார்.

**"ஓம்பா ஈகை விறல்வெய் யோனே"** **(புறம்-152)**

மற்றும் அளவில்லாத யானையை பரிசாக கொடுத்தனை

**"மழையணி குன்றத்துக் கிழவன் நாளும்**

**இழையணி யானை இரப்போர்க்கு ஈயும்" (புறம்-153)**

என்றும் ஓரியின் கொடைச்சிறப்பை கூறுகிறார்.

**எழினி**

கொடை வள்ளல் எழுவருள் ஒருவரான எழினியை பற்றிய குறிப்பும் மிக குறைந்த அளவே கிடைக்கிறது.

**"வளநீர் வாட்டாற்று எழினியாதன்**

**கிணை யேம் பெரும!**

**கொழுந் தடிய சூடு என்கோ?"**

என்று கேள்வியை எழுப்பியும் அதற்கு அவன் செய்த சிறப்பு பற்றி பின்வருமாறு புலவர் குறிப்பிடுகிறார்.

**"வள நனையின் மட்டு என்கோ?**

**குறுமுயலின் நினம் பெய்தந்த**

**நறு நெய் சோறு என்கோ?**

**திறந்து மறந்து கூட்டு முதல்**

**முகந்து கொள்ளும் உணவு என்கோ?"** **(புறம்-396)**

இப்பாடலில் அவன் தந்த கள்ளைச் சொல்வேனா?,முயற்கறியிலே ஆக்கித் தந்த நெய்ச்சோற்றை சொல்வேனா?, நெற்களஞ்சியத்தை திறந்து விட்டு வேண்டுமளவு எடுத்துக்கொள் எனக் கூறியதை சொல்லவா? என அவனது கொடைச் சிறப்பை வியந்து போற்றுகிறார்.

கடையெழு வள்ளல் எழுவரையும் குறிப்பிட்டு பாடும் பாடலாக பெருஞ்சித்திரனார்,

**"பறம்பின் கோமான் பாரியும்"**

பறம்பு மலையை ஆண்ட பாரி,

**"கொல்லி ஆண்ட வல்வில் ஓரியும்"**

கொல்லி மலையை ஆண்ட ஓரி,

**"காரி ஊர்ந்து பேரமர்க் கடந்த**

**மாரி ஈகை மறப்போர் மலையனும்"**

மலையமான் திருமுடிக்காரி

**"கொடும் பூண் எழினியும்"**

தகடுரை ஆண்ட எழினி,

**"பெருங்கடல் நாடன் பேகனும்"**

என பேகன்,

**"மோசி பாடிய ஆயும்"**

மோசியால் பாடப்பெற்ற ஆய்அண்டிரன்,

**"ஈயும் தகைசால் வண்மைக்**

**கோள்ளர் ஓட்டிய நள்ளியும்"**

என நள்ளியை பற்றியும் (புறம்- 158) ன் மூலம் வழுவான ஆதாரமாகக் கிடைக்கிறது.

புலவர்கள் மட்டுமல்லாது வறுமையில் வாடிய குடிமக்களுக்கும் மன்னர்கள் பரிசாக ஆநிரைகளையும் எருதுகளையும் வழங்கியுள்ளதை அறியலாம்.

**"மீன்பூத் தன்ன உருவப் பன்னிரை**

**ஊர்தியொடு நல்கியோனே"** **(புறம்- 399)**

என்று இதன் மூலம் அறிய முடிகிறது.

**முடிவுரை**

இவ்வாறாக புறநானூற்றுப் பாடல்களின் வாயிலாக சங்ககால மன்னர்களின் கொடைத் தன்மையும், கொடைத்தன்மை எத்தகைய தன்மை உடையதாக இருந்தன என்பதை மேற்கண்டவற்றின் மூலம் அறியலாம். மேலும் கொடை பண்பு மன்னர்களுக்கு பின்பும் அவர்களுடைய மரபினர் பின்பற்றுவதையும், அதனை பெருமையாக நினைக்கவும் செய்தனர் என்பதையும்,புறநானூற்று நூல் வாயிலாக நாம் தெளிந்து கொள்ளலாம்.

**பார்வை நூல்கள்**


1. புறநானூறு மூலமும் உரையும் - புலியூர்க் கேசிகன்
2. தமிழர் நாகரீகமும் பண்பாடும் - அ.தட்சிணாமூர்த்தி

லிட்டெரி ஃபைண்டிங்ஸ்
பல்துறை ஆய்வுக்கான பன்னாட்டு ஆய்விதழ்
LITERARY FINDINGS
A Peer Reviewed International Journal of Multidisciplinary Research - ISSN :2278-2311
VOL: 12 JULY - 2023 ISSUE: 3

# சங்கத்தொகை நூல்கள் கூறும் நெல் வகையினங்கள்

# VARIETIES OF PADDY MENTIONED IN THE SANGAM LITERATURE

*K.Ganagaraj & Dr.C.Thiyagarajan

***க.கனகராஜ்**
முனைவர் பட்ட ஆய்வாளர்
அறிவியல் தமிழ் மற்றும் தமிழ்
வளர்ச்சித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் – 10
&
***முனைவர் சி.தியாகராஜன்**
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்
வளர்ச்சித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் – 10

***Abstract***

Most of the people of Palantamizhar had agriculture as the lifeblood of their lives. The various agricultural methods and agricultural technical knowledge they adopted are different from the approaches and activities of today's enormous scientific development, but all the basic principles of agriculture followed by them are worthy of our consideration. This article is to summarize how the main types of rice are classified in agriculture, while there are rice crops and oilseeds such as sesame, sugarcane and cotton crops as cash crops.

***Key words: Agriculture, Lives, Knowledge, Sugarcane.***

பழந்தமிழருள் பெரும்பகுதியினர் வேளாண்மையையே தங்கள் வாழ்க்கையின் உயிர் நாடியாகக் கொண்டிருந்தனர். அவர்கள் மேற்கொண்ட பல்வேறு வேளாண்செயல் முறைகளும் வேளாண் தொழில்நுட்ப அறிவும் இன்றைய அளப்பரிய அறிவியல் வளர்ச்சியின் அணுகுமுறைகளாலும் செயல்பாடுகளாலும் வேறுபடுகின்றனவேயன்றி அவர்கள் பின்பற்றிய வேளாண் குறித்த அடிப்படைக் கோட்பாடுகள் யாவும் நம் சிந்தனைக்குரியவை. வேளாண்மையில் நெல் முதலாயப் பயறு வகைகளும் எள் முதலிய எண்ணெய் வித்துப்பயிர்களும் பணப்பயிராகிய கரும்பு நார்ப்பயிராகிய பருத்தி முதலாயப் பயிர்கள் இருக்கின்ற பொழுதிலும் இவற்றினுள் முக்கியமாக நெல் வகையினங்கள் எவ்வாறாக வகைப்படுத்தப்பட்டுள்ளன என்பதைத் தொகுத்தளிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தமிழ்த் தொகையிலக்கியத்தில் நெல் வகைகள்**

நெல்லின் தோற்ற காலம் ஏறத்தாழ 7000 ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் கணக்கிடப்பட்டுள்ளது. தென்கிழக்கு ஆசியாவில் கிழக்கு இந்தியா, இந்தோனேசியா, தென்சீனப்பகுதி ஆகியப் பகுதிகளில் நெல் முதலில் தோன்றியதாகக் கருதப்படுகின்றது. உலகில் உணவுக்காகப் பயிரிடும் தானிய வகைகளில் முதன்மையான இடத்தினைப் பெற்றுத்திகழும் புல் வகைகளுள் ஒன்றான நெல் முக்கிய உணவுப்பயிராகும். தொகை நூல்களில் நெல்வகைகள் பின்வருமாறு கூறப்பட்டுள்ளன.

**தொல்காப்பியம்**

தமிழ் உலகிற்குக் கிடைத்த நூல்களுள் காலத்தால் மிகவும் பழமையானது தொல்காப்பியமே. பயிர் வகைகளில் 'நெல்லும்' எண்ணெய் வித்துகளில் 'எள்ளும்' போத்து என்னும் பெயரில் 'கரும்பு' குறிப்பிடப்பட்டுள்ளன. என்பது ஆராய்கையில் தெரியவருகிறது.

**சங்கத் தொகை நூல்களில் நெல் இரகங்கள்**

சங்க காலம் என்பது கி.மு.200 முதல் கி.பி.500 வரையிலானது எனக் கருதப்பட்டு வருகிறது. இக்காலமே வேளாண்மையின் பொற்காலம் எனலாம். இக்காலத்தில்தான் வேளாண்மையில் ஒருவகையான விளக்கமும், தெளிவும் திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டு வேளாண்நுட்பங்கள் சிறப்புற வளர்ந்திருந்தன.

ஐவகை நிலங்களின் சிறப்புக்கும், இயல்புக்கும் தக்கவாறு அங்கு விளையும் நெல் இரகங்களையும் தரப்படுத்திக் கீழ்க்காணுமாறு வகைப்படுத்தி உள்ளனர்.

**அ) செந்நெல்**

நீர் வளமுள்ள கழனியில் 'செந்நெல்' விளைவிப்பர். விளைந்த செந்நெல் சிவந்து வளைந்து இருக்கும். நெல்லின் சிவந்த நெல் சிறந்த நெல்லாகவும் கருதுவர் என,

**"பழஞ்செந் நெல்லின் முகவை கொள்ளாள்**

**கழங்கு உறழ் முத்தமொடு நன்கலம் பெறு உம்" (அகநானூறு.126:11-12)**

என்ற இப்பாடல் வரிகள் குறிப்பிடுகிறது.

**ஆ) வெண்ணெல்**

குளத்துப்பாசனத்தின் வாயிலாகப் பயிரிடும் நெல் வெண்ணெல்லாகும் என்றுபுறநானூறு குறிப்பிடுகிறது.

**"குளக் கீழ் விளைந்த களக் கொள் வெண்ணெல்" (புறநானூறு.33:5)**

மேலும், வெண்வெணல்லில் விளைந்த நெற்கதிர்கள் வெண்மைமையாக இருக்கும் என்பதை,

**"வெண்வெணல் அரிநர் மடிவாய்த் தண்ணுமை**

**பல்மலர்ப் பொய்கைப் படுபுள் ஓப்பும்**

**காய்நெல் படப்பை வாணன் சிறுகுடி" (அகநானூறு.204:10-12)**

என்ற இவ்வரிகள் உணர்த்துகிறது. இவ்வகை நெல் சேர நாட்டின் துறைமுகப்பட்டினமாகிய தொண்டியில் விளைந்தது என்று பின்வரும் குறுந்தொகைப் பாடல்வரி சான்றாக குறிப்பிடுகிறது.

**"பல்ஆ பயந்த நெய்யின், தொண்டி,**

**முழுதுடன் விளைந்த வெண்ணெல் வெஞ்சோறு" (குறுந்தொகை.210:2-3)**

**இ) சாலி நெல்**

'சாலி' என்பது ஒரு வகை நெல். இது ஆற்றுப்பாசனத்தின் மூலம் விளையக் கூடியது. சாலி என்ற நெல்லின் பெயரில் 'சாலியூர்' என்ற ஊரும் இருந்ததை மதுரைக்காஞ்சி பாடல் (87-88) தெரிவிக்கின்றது. காவிரி பாயும் சோழ நாட்டில் சாலி நெல்லைப் பயிர் செய்து ஒரு வேலி நிலத்தில் ஆயிரம் கலம் நெல் விளைவிப்பதைக் குறிக்கோளாகக் கொண்டிருந்தனர் என்பதை,

**"தடந்தாள் நாரை இரிய ஆயிரைக்"** **(பதிற்.29:3)**

என்னும் வரி சுட்டுகிறது.

**ஈ) முடந்தை நெல்**

மருத நிலத்தில் வேளாண் செய்யும் நெல்லுக்கு 'முடந்தை நெல்' என்று பெயர். இந்நெல் வளைந்த கதிர்களையுடையதாய்க் காணப்படும் என்றும் இதன் தாள் மூங்கில் போல் நீண்டும் பருத்தும் இருக்கும் என்றும் பதிற்றுப்பத்து தெரிவிக்கிறது.இதனை,

**"முடந்தை நெல்லின் விளைவயல் பரந்த"** **(பதிற்.29:3)**

**"தடந்தாள் நாரை படிந்து இரை கவரும்"**

**முடந்தை நெல்லின் கழை அமல்கழனி**

**பிழையா விளையுள் நாடு அகப்படுத்து** **(பதி.32:12-14)**

இவ்வாயிலாக அறியலாம்.

**உ) ஐவன நெல்**

குறிஞ்சி நிலத்தில் விளையும் நெல்லிற்கு 'ஐவன நெல்' என்று பெயர். இந்த நெல்லை 'ஐவன வெண்ணெல்' என்றும் 'மலைநெல்' என்றும் வழங்குவர் இதனை,

**"ஐவன வெண்ணெல் குறூஉம் நாடனொடு"** **(நற்றிணை.373:4)**

**"அருவிப் பரப்பின் ஐவனம் வித்தித்**

**பருஇலைக் குளவியொடு பசுமரல் கட்கும்"** **(குறுந்தொகை.100:1-2)**

போன்ற வரிகள் தெரிவிக்கின்றன. மேலும், ஐவன நெல்லோடு தினையும் சேர்த்து விதைத்துள்ளனர் என்பதை,

**"…………………கானவர்**

**கரி புனம் மயக்கிய அகன் கண் கொல்லை,**

**ஐவனம் வித்தி, மையுறக் கவினி"** **(புறநானூறு.159:15-17)**

என்ற இவ்வரிகள் கூறுகின்றன.

**ஊ) குளநெல்**

'குளநெல்' குறிஞ்சியில் விளையும் நெல் வகைகளுள் ஒன்றாகும். பருவ மழையில் விதைத்துச் சுனைநீரைப் பாய்ச்சி விளைவிப்பர் என்பதனை,

**"நிலம் நீர் ஆர, குன்றம் குழைப்ப,**

**அகல் வாய்ப் பைஞ் சுனைப் பயிர் கால்வாய்ப்ப"** **(நற்றிணை.5:1-2)**

என்ற வரிகளின் வழி அறியலாம்.

**எ) மூங்கில் நெல்**

'மூங்கில் நெல்' லைப் பிற நெற்பயிர்கள் போல் விளைவிப்பதில்லை. மூங்கில் நெல் வெண்மை நிறமுடையதாக இருக்கும். இதனை, 'வெதிர் நெல்' என்று குறிப்பதை,

> **"பைதுஅறு நெடுங்கழை பாய்தலின், ஒய்யென**
>
> **வெதிர்படு வெண்ணெல் வெவ்அறைத் தாஅய்"  (அகநானூறு.267:10-11)**

இவ்வரிகள் தெரியப்படுத்துகின்றன.

மேலும், **'தோரை'** நெல்லைப் பற்றி மலைப்படுகடாமும் (120:1), மதுரைக்காஞ்சியும் (286:8) தெரிவிக்கின்றது. **'தோப்பி'** என்ற நெல் இரகத்தைப் பெரும்பணாற்றுப்படை (130:1) தெரிவிக்கின்றது.

**பதினெண்கீழ்க்கணக்கு**

சங்க இலக்கியங்களுக்கு அடுத்தக் காலக்கட்டங்களில் தோன்றிய நூல்களின் தொகுப்பாகிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் பயிர்களுள் குறிப்பாக நெல்லையும், கரும்பையும் பற்றிய குறிப்புகளே மிகுதியாகக் காணப்படுகின்றன. இதன்வழி நெல்லையும் கரும்பையும் தத்தம் வயல்களில் பயிரிடுவதை உழவர்கள் பெருமையாகக் கருதியுள்ளார்கள் என்பதை அறியமுடிகிறது.

பண்டையத் தமிழர் பெயரிட்டு அழைத்த அனைத்து நெல் வகைகளும் வழக்கத்தில் இல்லாவிட்டாலும் குறிப்பிட்ட சில நெல் வகைகள் மட்டும் இப்பொழுது உள்ள வாழ்க்கைச் சூழ்நிலைகளோடு பொருத்திப் பெயரிட்டு வழங்கப்படுவதை அறியலாம். இக்குறிப்பிட்ட சில நெல் இரகங்களும் பண்டையத் தமிழர்கள் கண்டறிந்த சில சிறந்த நெல் வகைகளைக் கலப்பின முறையில் உருவாக்கிப் புதிய இரக நெல்லாகப் பெயரிட்டு அழைப்பதை இப்போதுள்ள பெயர்களின் மூலம் அறிகிறோம்.

வேளாண் தொழில்நுட்பம் சிறந்து விளங்கும் இக்காலக்கட்டத்திலும் காவியத் தலைமக்கள் பெயரினாலும் (கண்ணகி Pusa.2-2), பெருந்தலைவர்கள் பெயரினாலும் (கரிகாலன் ADT.29) நெல் தோன்றிய நாட்டின் பெயராலும் (ஜப்பான்டிக்கா) நெல் உருவாக்கப்பட்ட ஊர்ப்பெயரினாலும் (காஞ்சி Co -33), (பேராவூரணி PVR-1, தலைநாயர் TNR -1, அம்பாசமுத்திரம் ASD.5, கோயமுத்தூர் co-25, திருச்சி - 1, ஆடுதுறை ADT-35); நெல்லின் வடிவங்களின் பெயரினாலும் (முன்பாக வெள்ளைச் சிறுமணி, சொர்ணாவாரி TKM.6) நெல் விளைவிக்கப்படும் காலங்களினாலும் (கார்த்திகைச் சம்பா ASD-5), இயல்புப்பெயரினாலும் (அன்னபூரணாPTB-35), நிறத்தின் பெயரினாலும் (தூயமல்லி ASD-5, வெள்ளைப்பொன்னி), மணப்பெயரினாலும் (மணமுள்ள சீரகச்சம்பா) மணிப்பெயரினாலும் (பொன்மணி CR-1009); நெல்வகை இரகங்களாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

உலகில் உள்ள பல நாடுகளில் ஆசியக் கண்டத்தில் தான் நெல் அதிகளவில் பயிரிடப்பட்டு முக்கிய உணவுப்பொருளாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்தியாவில் அரிசி உற்பத்தியில் இரண்டாவது இடத்திலிருந்து தமிழகம் முதலிடத்தைப் பெற்றுள்ளது. பழங்காலத்தில் பல பயிர்கள் பயிரிடப்பட்ட போதிலும் நெல் தான் அதிகமாகப் பயிரிடப்பட்டுள்ளது என்பதை இலக்கியங்கள் வாயிலாக அறிகிறோம். இந்நெல் வகைகளின் பெயர்ச்சிறப்புகள் பண்டைத் தமிழரின் அறிவியல் நுட்ப அறிவையும் நுண்மான் நுழைப்புழப் பின்புலத்தையும் எடுத்துக்காட்டுவதோடு பழங்காலத்தில் குறைவில்லாத பல நெல் இரகங்கள் இருந்துள்ளதையும் ஆராய்கையில் அறியமுடிகிறது.

**துணைநூல்கள்**


1. மரியக்குழந்தை.அ., வேல்சாமி.பெ.1977, வேளாண்மைகளும் செய்முறைகளும், நியூ செஞ்சரி புத்தகநிலையம், சென்னை.
2. செயராமன்.ந.வி, 1978, தமிழ் இலக்கியத்தில் வேளாண்மை அறிவியல், நியூ செஞ்சரி புத்தகநிலையம், சென்னை.
3. கந்தசாமி., 1987, தமிழர் வேளாண்மை மரபுகள், கலைச்சொல்வம் பதிப்பகம், கோவை.
4. கந்தசாமி., 1981, இலக்கியத்தில் வேளாண்மை, வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை.

லிட்டெரி ஃபைண்டிங்ஸ்
பல்துறை ஆய்வுக்கான பன்னாட்டு ஆய்விதழ்
LITERARY FINDINGS
A Peer Reviewed International Journal of Multidisciplinary Research - ISSN :2278-2311
VOL: 12 JULY - 2023 ISSUE: 3

# இணையம் வழி தமிழ்மொழியைக் கற்றல் கற்பித்தல்

## LEARNING AND TEACHING TAMIL THROUGH INTERNET

***M. Parvathi & Dr. C. Thiyagarajan***

***மு. பார்வதி**
முனைவர் பட்ட ஆய்வாளர்
அறிவியல் தமிழ் மற்றும் தமிழ்
வளர்ச்சித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் – 10
**&**
***முனைவர் சி.தியாகராஜன்**
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
அறிவியல்தமிழ் மற்றும் தமிழ்
வளர்ச்சித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் – 10

***Abstract***

There are many online resources (facilities) that help in learning and teaching Tamil language. Today's internet has created opportunities to study in Tamil from kindergarten education to doctoral studies. From basic studies like listening, speaking, reading and writing to research studies, the situation of studying on the internet is developing. There are increasing opportunities to learn and teach grammar and literature with new approaches through the medium of how the Internet can be used for learning and teaching Tamil language and how Internet related tools can be used for learning and teaching Tamil language. Due to the easy, speed, breadth, usefulness, attraction, enjoyment, etc. of multimedia, the online education system has become very suitable and unavoidable in today's times.

***Key words: Learing, Tamil Language, Education, Grammar, Attraction, Enjoyment.***

**இணையம் வழி தமிழ்மொழியைக் கற்றல் கற்பித்தல்**

தமிழ் மொழியைக் கற்றல் கற்பித்தலுக்கு உதவும் இணைய ஏந்துகள் (வசதிகள்) தற்போது பல பெருகி வருகின்றன. மழலையர் கல்வி தொடங்கி முனைவர் படிப்பு வரையில் தமிழில் படிப்பதற்குரிய வாய்ப்புகளை இன்றைய இணையம் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது. கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து முதலான அடிப்படைப் படிப்பு முதல் ஆராய்ச்சி படிப்பு வரையில் இணையத்தில் படிக்கக்கூடிய நிலைமை உருவாகிக்கொண்டு வருகின்றது. தமிழ் மொழியைக் கற்றல் கற்பித்தலுக்கு இணையத்தை எவ்வாறு

பயன்படுத்திக் கொள்ள முடியும் என்பதையும் இணையம் தொடர்பான ஏந்துகளைத் தமிழ்மொழியைக் கற்றல் கற்பித்தலுக்குக் எவ்வாறெல்லாம் பயன்படுத்த முடியும் என்பதனையும் இலக்கணத்தையும் இலக்கியத்தையும் ஊடகத்தின் வழியாக புதிய அணுகுமுறைகளோடு கற்பதற்கும் கற்பிப்பதற்கும் வாய்ப்புகள் பெருகி வருகின்றன.

இணையம் கற்றல் கற்பித்தலும் மிகப்பெரிய உருமாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. மரபுவழி சார்ந்த கற்றல் கற்பித்தல் அணுகுமுறைகள் குடியிருந்த வகுப்பறைகளில் தற்போது நவீனமான அணுகுமுறைகள் இடம்பிடித்துள்ளன. இணையம் வழியான கல்வி முறை ஆசிரியர்களின் கற்பித்தலிலும் மாணவர்களின் கற்றலிலும் புதிய வகைப் பரிணாமங்களை உண்டாக்கிக் கொடுத்திருக்கின்றன.

எளிமை, விரைவு, விரிவு, விளைபயன், ஈர்ப்பு, மனமகிழ்வு, முதலான தன்மைகளைக் பல்லூடகம் கொண்டிருப்பதால் இணையம் வழியான கல்வி முறை இன்றைய காலத்திற்கு மிகவும் ஏற்றதாகவும் தவிர்க்க இயலாத ஒன்றாகவும் ஆகிவிட்டது.

**தமிழ்க்கல்வி வலைதளங்கள்**:

தமிழ் மொழியினை கற்றல் கற்பித்தலுக்கு பயன்படும் பல இணையதளங்கள் உள்ளன. தமிழை முதல் மொழியாகக் கற்பதற்கும் இரண்டாம் மொழியாக கற்பதற்கு இணையதளங்கள் வந்துவிட்டது. அதுமட்டுமல்லாது, ஆங்கிலத்தின் வழியாக தமிழ் கற்றல், மலாய்மொழி வழியாகத் தமிழ் கற்றல் என உலக மொழிகள் பலவற்றின் வழியாகத் தமிழைப் படிப்பதற்குரிய சூழல்கள் உருவாகியுள்ளன. முறையாக செய்யப்பட்ட கலைத் திட்டங்கள், பாடங்கள் ஆகியவற்றை இணையத்திலேயே படிப்பதன் வழியாகத் தமிழ் மொழியை எளிதில் கற்று கொள்ள முடியும்.

தமிழ் இணையப் பல்கலைக்கழகம் தமிழ்மொழிக் கற்றலுக்கு மிகச்சிறந்த முன்னோடியாகத் திகழ்வதை மறுக்க இயலாது. அதுபோல உலகின் பல நாடுகளில் செயல்படும் தமிழ்க் கல்விக் கழகங்கள் அல்லது கல்விக் கழகத் தமிழ் இருக்கைகள் இணையம் மூலமாகத் தமிழ்க் கல்வியை முன்னெடுத்து வருகின்றன. அவ்வாறான வலைதளங்கள் சில பின்வருமாறு:

1. http://www.youtube.com /user/tamildigest.
2. www.tamil.org
3. http://www.tamildigest.com/
4. www.tamilvu.org
5. www.southasia.upenn.edu/tamil
6. www.languageshome.com/english-tamil.html.

**தமிழ் வலைத்தளங்கள் - தமிழ் வலைப்பதிவுகள்**:

தமிழ் வலைத்தளங்கள் இன்று ஆயிரக்கணக்கில் இருக்கின்றன. இவற்றுள் மிகப் பெரும்பான்மையான கேளிக்கை, பொழுதுபோக்கு, மனமகிழ்ச்சி, வணிகம் ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டவையே அதிகமாயினும் தமிழ்க் கல்வியை இணையத்தில் வளர்க்கும் நோக்கத்தோடு செயல்படும் வலலைத் தளங்களும், வலைப்பதிவுகளும் ஏராளமாகவே உள்ளன. மேலும் பல உருவாகியும் வருகின்றன. இவை கற்றல் கற்பித்தலுக்கு உதவக்கூடிய கற்றல் மூலங்களை (Learning search) வழங்குகின்றன. அதுமட்டுமல்லாது கற்றல் கற்பித்தல் தொடர்பான வலைத்தளங்களையும் வலைப்பதிவுகளையும் உருவாக்கி நிருவகிக்கவும் இவை பெரும் வாய்ப்பினை வழங்கிக் கொண்டிருக்கின்றன.

**தமிழ் கற்பித்தல் தொடர்பான வலைதளங்களும் - வலைப்பதிவுகளும்**:

1. www.tamil.net/projectmadurai.
2. www.tamilheritage.org
3. http://www.thirutamil.blogspot.in
4. http://www.hongkongtamil.blogspot.com
5. http://www.spmilakiam.blogspot.com

**இணையத்தில் தமிழ்ப் பாடநூல்கள்:**

தமிழ்நாடு, இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் முதலான நாடுகளில் அரசாங்கத்தின் பார்வையில் தமிழ் மொழியைக் கல்வி முறையாகப் பயிற்றுவிக்கப்படுகிறது. அதற்காகத் தனியான கலைத்திட்டமும் பாடநூல்களும் பயன்படுத்தப்படுகின்றன. கனடா, ஆஸ்திரேலியா, அமெரிக்கா முதலிய இன்னும் பிற நாடுகளில் தாய்மொழிக் கல்வி தனியார் நிறுவனங்கள் வழியாகவும் தன்னார்வ அடிப்படையிலும் கற்பிக்கப்படுகின்றன. மேற்சொன்ன அவ்வந்த நாடுகளிலும் பயன்படும் கலைத்திட்டமும் பாடநூல்களும் இணையத்தில் ஏற்றப்பட்டு பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. இந்த பகிர்தலின் வழியாக, தாய் மொழிக் கற்றல் கற்பித்தலில் அறிவார்ந்த பரிமாற்றங்களும் புதிய வளர்ச்சிகளும் ஏற்பட வாய்ப்புகள் நிரம்ப உள்ளன.

**வலைதளங்களில் - தமிழ் மொழிக் கற்றல் கற்பித்தல் :**

1. http://www.textbooksonline.tn.nic.in
2. http://www.moe.gov.my/bpk
3. http://www.etatamilschool.org/shtml/curriculum.shtml

**தமிழ் மொழியைக் கற்றல் கற்பித்தல்:**

தகவல் தொடர்புத் தொழில்நுட்பத்தின் மிக விரைவான வளர்ச்சி கல்வித் துறையிலும் மிகப்பெரியத் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

கணினியையும் இணையத்தையும் பயன்படுத்தாத கல்வி நிறுவனங்களே இல்லை எனலாம். இன்று அடிப்படை நிலை முதல் உயர்கல்விக் கழகங்கள் வரையில் எல்லா இடங்களிலும் இதன் ஆதிக்கம் பெருகி வருகின்றது. இத்தகைய சூழலில் கற்றல் கற்பித்தலில் இணையமும் இணைய ஏந்துகளும் முக்கிய இடத்தைப் பிடித்து விட்டன.

இதன் அடிப்படையில் இணையம் வழியான கற்றல் கற்பித்தல் முறைமை இன்று மிகவும் புகழ்பெற்றதாகும் எல்லாராலும் விரும்பப்படுவதாகவும் இருக்கின்றது. ஆகவேதான் இணையத்தை பயன்படுத்திக் கற்றல் கற்பித்தலை வழி நடத்துவதற்கு உலக முழுவதிலும் உள்ள எல்லா கல்வி நிறுவனங்களும் தனியார் தன்னார்வ நிறுவனங்களும் முண்டியடித்துக் கொண்டு முயற்சிகளை முன்னெடுக்கின்றன.

**ஒரு மொழியயினை கற்பிக்க:**

1. திட்டமிடுதல்
2. ஆர்வமூட்டல்
3. ஆலோசனை வழங்குதல்

4. மதிப்பிடுதல்

5. ஊக்குவித்தல்

6. ஒழுங்கினை ஏற்படுத்துதல்

7. வினாவுதல்

போன்ற உத்திகள் கையாளப்படுகின்றன.நவீனத் தொழில்நுட்ப வசதிகளுக்கேற்ப இத்தகைய உத்திகளைக் கொண்டு கல்விமுறையில் தரப்படுத்துதலும், புதுமையும் கொண்டு விளங்குகிறது.

**இணையம் வாயிலாகத் தமிழ் கற்பித்தலின் போது:**

1. கணினியில் ஏற்படும் சிக்கல்கள்.
2. மென்பொருள் பற்றிய அறியாமை.
3. எழுத்துருச் சிக்கல்கள்.
4. அகராதிகளைத் தெளிவுறப் பார்க்கும் நேரமின்மை.

போன்ற காரணங்களினால் இணையம் வழி- தமிழ்க் கற்பித்தல் நடைபெறச் சிக்கல்கள் ஏற்படுகின்றன. கணினி பற்றிய போதிய தெளிவு பெறத் தினமலர் - கம்ப்யூட்டர் மலர், (இணைய இதழ்) போன்றவற்றை பயன்படுத்தலாம். தினமலர் - கம்ப்யூட்டர் மலர்( இணைய இதழ்) தமிழ்க் கணினி - தொடர்பான பல செய்திகளை தருகிறது. கற்றல் திறன் சிறப்பாக நடைபெற கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் போன்ற நான்கு படிநிலைகளில் நடைபெறுகின்றன. இன் நான்கு படிநிலைகளில் திறன் பெற்றவர்களால் மட்டுமே படைப்பாக்கத் திறனை உருவாக்க இயலும்.

வலைத்தளம் 2011-ஆம் ஆண்டு முதல் புதிய வடிவமைப்புடன் தமிழ்க் கல்வியினைச் சிறப்பாக ஆங்கிலமும் கலந்தது அளித்து வருகிறது. இணையம்வழி - மழலைக்கல்வி கற்பித்தலின் ஒளி வடிவக் காட்சி சிறப்பாக அமைந்துள்ளது.

**இணையவழி தமிழ் மொழியை கற்றல் கற்பித்தலின் மேன்மைகள்**:

இணையம் வழியாகத் தமிழ்மொழியைக் கற்றல் கற்பித்தல் நடைபெறுவதால் குறிப்பிடத்தக்க நன்மைகள் விளைகின்றன. அவற்றை பின்வருமாறு பட்டியலிடலாம்,

1. மாணவர்கள் பாடங்களை எளிதாகப் புரிந்து கொள்ள முடிகிறது.
2. ஒன்றைப் பற்றிய மேலதிகத் தகவல்களை அறிந்து கொள்ளும் வகையில் தொடுப்புகளை Hyperlink கொண்டிருக்கிறது.
3. எழுத்து (Test), ஒலி (Sound), காட்சி (Visual ), அசைவு படம் (Graphics), நிகல் படம் (Video), உடலியக்கம் (Psychomotor), இரு வழித் தொடர்பு(Interactive) என பலதரப்பட்ட வகையில் கற்பதற்குரிய சூழல் இருக்கின்றது.
4. மாணவரை இலக்காகக் கொண்டு கற்றல் கற்பித்தல் சிறப்பாக நடைபெறுகிறது.
5. மாணவர்களின் ஆக்கச் சிந்தனையும் ஆய்வுச் சிந்தனையும் வளர்த்துக் கொள்ள உதவுகிறது.
6. குறிப்பிட்ட காலம், இடம், சூழல் என எந்தவிதக் கட்டுப்பாடும் இல்லாமல் கற்பதற்கு உரிய வாய்ப்புக் கிடைக்கிறது.
7. கிடைப்பதற்கு அரிய தகவல்களை விரைவாகவும் விரிவாகவும் பெறமுடிகிறது.

8. கற்றலில் ஏற்படும் சிக்கலுக்குரிய தீர்வுகளைப் பல முறைகளில் இருந்து உடனடியாகப் பெற முடியும்.
9. தகவல்களைத் திரட்டவும், சேமிக்கவும், புதிய தகவல்களை இவற்றில் உட்படுத்தவும்(Update) தேவையற்ற விவரங்களை நீக்கவும், விரும்பியபடி மாற்றங்களைச் செய்து கொள்ளவும் முடிகிறது.
10. உலகத்தில் எந்தப் பகுதியில் இருந்தாலும் ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்ளவும், இணைய உரையாடல் கருத்துப் பரிமாற்றம் செய்யவும், நிகழ்பட கருத்துரையாடல் நடத்தவும், மின்னஞ்சல் வழி தகவல்களைப் பரிமாறவும் வாய்ப்புகள் திறந்து கிடக்கின்றன.

தமிழ்மொழியினைக் கற்றல் கற்பித்தலைப் புதிய இலக்கு நோக்கி நகர்த்த வேண்டிய பொறுப்பும் கடமையும் கல்வியாளர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் இருக்கின்றது. ஆகவே, உலக உருண்டையில் தமிழும் தமிழ்க் கல்வியும் நிலை பெற வேண்டுமானால், இணையம் வழியாகவும் இணைய ஏந்துக்களின் வழியாகவும் தமிழைக் கற்கவும் கற்பிக்கவும் வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இதனை உணர்ந்து, தமிழ் மொழியைக் கற்பிக்கும் ஆசிரியர்களும் தமிழைக் கற்கும் ஆசிரியர்களும் தமிழைக் கற்கும் மற்றும் கற்க விரும்பும் மாணவர்களும் இணையத்தையும் இணய ஏந்துகளையும் பயன்படுத்த முன்வரவேண்டும்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்" என்பதற்கேற்ப பல்துறையில் தோன்றி வரும் மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் கவனத்தில்கொள்ள வேண்டும். தமிழ் போன்ற நெடிய பாரம்பரியத்தினைப் பெற்று விளங்கும் மொழியில் சூழ்நிலைகளால் ஏற்படும் மாற்றங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். தமிழ் வளர்ச்சிப் போக்கினைக் கணினியின் துணைக் கொண்டு இணையம் வழி மேம்படுத்த உலகளாவிய தமிழர்கள் அனைவரும் பாடுபட வேண்டும்.

**பயன்படுத்தப்பட்ட நூல்கள்:**


- இணையத்தமிழ் - மு. பொன்னவைக்கோ, சா. கிருட்டினமூர்த்தி, கு.சுப்பையா பிள்ளை, பதிப்பு - 2003.
- தமிழ் கணினி இணைய பயன்பாடுகள் - துரை.மணிகண்டன், த.வானதி, முதல் பதிப்பு 2012. இரண்டாம் பதிப்பு 2016.
- தமிழ் வளர்ச்சியில் ஊடகங்களின் பங்கு - ப. ஞானம், து. அசோகன் முதல்பதிப்பு 2014.
- தமிழ் இலக்கிய வளர்ச்சியில் இணையத்தின் பங்களிப்பு - ம. பிரகாஷ், பதிப்பு 2014.

லிட்டெரி ஃபைண்டிங்ஸ்
பல்துறை ஆய்வுக்கான பன்னாட்டு ஆய்விதழ்
LITERARY FINDINGS
A Peer Reviewed International Journal of Multidisciplinary Research - ISSN :2278-2311

VOL: 12 JULY - 2023 ISSUE: 3

# வாஸந்தியின் 'ஆகாச வீடுகள்' நாவலின் - பெண்ணியம்

## VAASANTHI'S 'AAGASA VEEDUGAL' NOVEL'S - FEMINISM

** A. Josephine & Dr. S. Vanitha*

***அ. ஜோஸ்பின்**
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
சிதம்பரம்.
**&**
***முனைவர் ச. வனிதா**
நெறியாளர், தமிழியல் துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
சிதம்பரம்.

***Abstract***

Feminism is the struggle for equal rights for all types of women. Coordinated promotion of equal rights for both men and women. Women should be entitled to all kinds of lifestyles and occupations. The research objective of this article is that feminism should be upheld in all situations.

***Key Words: Feminism - Struggle - Equal Rights - Entitled - Upheld***

**முன்னுரை**

நகரவாசியாக வாழ்ந்த பெண் லலிதா. கிராமத்தில் சபேசன் என்பவருக்கு மனைவியாகிறாள். கிராமத்தின் ஒரு பகுதியான அக்ரஹாரத்தின் கதை. அக்ரஹாரத்தில் வாழ்ந்துவரும் ஒரு குடும்பத்தை மையமாக வைத்துக் கொண்டு, அந்தக் குடும்பத்தோடு பழகும் வேறு சில குடும்பங்களின் நிலையையும் பற்றி எழுத்தாளர் வாஸந்தி அவர்களின் **"ஆகாச வீடுகள்"** என்ற நாவல் எடுத்துரைக்கிறது. குடும்பத்தலைவி லலிதாவை ஓர் உன்னதமான லட்சியப் பெண் படைப்பென்றே சொல்ல வேண்டும். இந்த நாவலில் லலிதா தன் கணவனின் செயல்களுக்கு எதிராகப் போராடவில்லை. அதற்கு மாறாக கணவனுக்கு ஏற்றார்போல் தன்னை மாற்றிக்கொண்டாள். லலிதாவை பொருமையின் சிகரமாகவும், தெய்வத்தன்மை கொண்ட பெண்ணாகவும் சித்தரிக்கப்பட்டுள்ளது மிகவும் போற்றுதற்குரியது.

**எழுத்தாளர் வாஸந்தியின் குறிப்புகள்**

பங்கஜம் எனும் இயற்பெயரைக் கொண்ட இவர் மைசூர் பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியம் மற்றும் வரலாற்றுத்துறைகளில் பட்டம் பெற்றவர் மற்றும் நார்வே நாட்டின் ஆஸ்லோ பல்கலைக்கழகத்தில் முதுகலைச் சான்றிதழ் பெற்றவர். 'இந்தியா டுடே' தமிழ் பதிப்பின் ஆசிரியராக ஒன்பது ஆண்டுகள் பணியாற்றிய துணிச்சலான பத்திரிகையாளர். கலை, கலாச்சாரம், அரசியல் என்று பல்வேறு புள்ளிகளைத்

தொட்டு செல்லும் இவரது கட்டுரைகளில் பல அவை வெளிவந்த காலத்தில் தீவிர கவனம் பெற்றதுடன் விவாதங்களையும் தோற்றுவித்தன.

பெண் சார்ந்த பிரச்சனைகளைப் பற்றி பல ஆய்வுக் கட்டுரைகள், ஆய்வறிக்கைகள் எழுதி வருபவர். உலக எழுத்தாளர் மாநாட்டில் சொற்பொழிவு ஆற்றியுள்ளார். கூர்மையான அரசியல் ஆய்வாளர். 'ஆகாச வீடுகள்' ஹிந்தி மொழிபெயர்ப்புக்கு உத்தர பிரதேச அரசு'சாஹித்ய சம்மான்' விருது வழங்கியுள்ளது.[1]

**பெண்ணியம் விளக்கம்**

ஆங்கிலத்தில் பெமினிசம் (Feminism) என்ற சொல்லுக்குத் தமிழில் பெண்ணியம், பெண்ணிய வாதம், பெண்ணிலை ஏற்பு, மகளிரியல், பெண்ணியக் கொள்கை எனப் பல சொற்கள் வழங்கப்படுகின்றன. 1980-க்கு முன்பு 'Womanism' என்றிருந்தது. பிறகு 'Feminism' என அழைக்கப்படுகிறது. 1894-இல் வெளிவந்த ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி 'பெமினிசம்' என்ற சொல்லுக்குப் பெண்ணின் தேவையை நிறைவேற்ற அவர்கள் சார்பாக வாதாடுவது, போராடுவது என்று பொருள் கூறப்படுகிறது.[2]

**பெண்ணியம் பற்றிய தொல்காப்பியக் கருத்துக்கள்**

**"பெருமையும் உரனும் ஆடூஉமேன"** **(தொ-பொரு-களவியல் - 7)**

இதன் அடிப்படையில் ஆண்மகன் உரனுடையவனாகப் பெருமைக்குரியவனாக உருவாக்கப்படுகிறான்.

**"அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல் நிச்சமும் பெண்பாற்குரிய"** என்ற பெண்ணுக்குரிய பண்புகளாகவும் சொல்லப்படுகிறது. மேலும் 'கற்பு' பெண்ணிற்குக் கட்டாயமாக்கப்படுகிறது.

பெண்மகள் அச்சம், நாணம், மடம் என்ற இயல்புகளைக் கொண்டு அழகுடையவளாக, இரக்கமுடையவளாக, அடக்கம், அமைதியின் உருவாகவும், ஆற்றல் இல்லாதவளாக, செயல் திறனற்றவளாக உருவாக்கப்படுகிறாள்.

மேற்கூறிய மனோபாவத்தில் ஆண், பெண் என இருபாலருக்கும் தனித்தனி வரையறைகள் வகுக்கப்பட்டுள்ளன. பெண்தான் மெல்லியள், இப்படித்தான் கட்டுப்பாடுடன் இருக்கவேண்டும். வீட்டைவிட்டு வெளியே செல்லக்கூடாது என்றெல்லாம் கூறி வளர்க்கப்படும்போது அக்கருத்துக்கு மாறாக பெண் தன்னை மாற்றிக் கொள்ளாது தன்னை ஆட்படுத்திக் கொள்கிறாள்.

**"பொம்பளை சிரிச்சாப் போச்சு**

**புகையிலை விரிச்சாப் போச்சு"** என்றும்

பேதைமை என்பது பெண்ணிற்கு அணிகலன் (ஔவையார்) என்றும் இகழ்பனவே காதலன் தான் செய்யும் கொண்டாளை யல்லால் யறியாக் குலமகள் (குலசேகர ஆழ்வார்) என்றும்,பழமொழிகளும், புது மொழிகளும் தோன்றிபல பாலியல் சார்ந்த கருத்துக்களைப் பரப்பின. இவ்வாறாக ஆண்களை ஆள்பவனாகவும், அதிகாரம் செய்பவனாகவும் உருவாக்கிப் பெண்களை அடக்கி, ஒடுக்கி முடக்குகிறது.[3]

**குறுந்தொகை கூறும் பெண்ணியம் பற்றிய கருத்துக்கள்**

சங்கக் காலப் பெண்கள் ஆணாதிக்கச் சமுதாயத்தில் இரண்டாம்தரக் குடிமகளாக, கணவனே தெய்வம் என்று கொண்டாடுபவர்களாக ஆணின் தேவையை மட்டும் நிறைவேற்றும் பணிப் பெண்களாக வாழ்ந்தார்கள்.

**வினையே ஆடவர்க்குயிரே வாள்நுதல்**

**மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிர்** **(குறுந் - 135)**

இவற்றிலிருந்து தொழில் செய்தல் ஆடவர்க்கு உயிர், வீட்டில் வாழும் பெண்ணிற்கு ஆடவர்தான் உயிர் என அக்கால சமுதாயம் கருதி வாழ்ந்தது. கணவனைப் பின்பற்றித்தான் மனைவி வாழ்தல் என்பதனைவிட அடிமைகளாக இருந்தது தெரிய வந்தது.

உலகம் முழுவதும் பால் வகை என்பது ஆண் பெண்ணை அதிகாரம் செய்யும் பான்மையில் அமைந்துள்ளது. ஏனெனில் ஆணாதிக்க சமூகம் வகுத்ததுதான் பால் வகை என்பது ஆண் தனக்குரிய சமூகக்கனவாக இராணுவம், தொழிற்சாலை, அரசியல், நீதி, தொழில்நுட்பம், கல்வி போன்றவற்றைத் தெரிந்து கொண்டான். பெண்ணுக்கு இல்லம் என்பதை உரிமையாக்கி அதற்குள் அவளை ஆட்படுத்துகிறான்.

ஆதலால் சமூகத்தில் பெண்ணின் இயக்கம் குறைந்தது. குடும்ப அமைப்பில் அடங்கிக் கிடக்கும் பெண், சமூகத்தை அணுக, அவளுக்குக் கணவன் என்ற துணை தேவைப்பட்டது. ஆதலால் அவள் சுயசிந்தனை இல்லாதவளாக ஆடவன் கைப்பாவையாக உருவாக்குவதற்குத் துணை போயிற்று. ஆண், பெண் இடையே அதிகார உறவுகள் வளர்ந்து பெருக குடும்பம் என்ற அமைப்பும் காரணமாயிற்று.

தமிழ் இலக்கிய வரலாற்றில் கி.பி.100 – 500-இல் தோன்றிய இரட்டைக் காப்பியத்தில் ஒன்றான'மணிமேகலை தனது தாய் மாதவியின் குலத்தொழில் செய்யாது, குடும்ப வாழ்க்கையைத்துறந்து நாட்டு மக்களின் பசி தீர்த்தும் மக்களுக்கு அறமொழிகளை எடுத்து உரைத்தும் பல நல்லறங்களையும் செய்து பௌத்த நெறியின்படி 'முத்தி' பெற்று அறச் செல்வியாகக் காணப்பட்டாள்.

**"அறமெனப் படுவது யாதெனக் கேட்பின்**

**மறவாது இதுகேள் மன்னுயிர்க்கு எல்லாம்**

**உண்டியும் உடையும் உறையுளும் அல்லது**

**கண்டதில்லை".**

காப்பியத்திலேயே பெண்ணியம் மணிமேகலை வாயிலாகப் பேசப்பட்டது அறியலாம்.[4]

**பெண்ணின் இரக்கப்பண்பு**

சற்று முன்னால் அடியும் திட்டும் வாங்கின நினைவேயில்லாமல் நிதானமாக ரசித்து சாப்பிடும் ராஜுவை அவள் யோசனையுடன் பார்த்தாள். இந்தப் பிள்ளை பக்கத்து வீட்டில் பிறந்திருந்தால் அந்தக் கோபாலியை விட அதிக சாமர்த்தியமாய் இருந்திருப்பான் என்று தோன்றிற்று. பக்கத்து வீட்டில் வெளிச்சம் அதிகம் இருந்திருக்கும். சுவாசிக்கக் காற்று இருந்திருக்கும். கோபாலி மாதிரி இவனும் பளிச்சென்று சிரித்திருப்பான், பேந்தப் பேந்த விழிக்காமல் இரண்டு வருஷமாக நித்யம் சொல்லும் வாய்ப்பாட்டைத் தவறிச்சொல்லாமல்-

"இன்னும் கொஞ்சம் சேப்பங்கிழங்கு கறி வேணும்…."

இந்தமாதிரி சுரணை கெட்டுப் போகாமல்--

சட்டென்று அவன் சுயநினைவுக்கு வந்தான்.

நமக்கு என்ன நேர்ந்துவிட்டது இன்றைக்கு மீனு கேட்ட கேள்வி மனசைக் குழப்பிவிட்டதா?

'இப்படி சிரிச்சுண்டே காரியம் செய்யறவாளெப் பார்த்ததில்லே.'

'சிரிக்கல்லேன்னா காரியம் ஆகுமோ?' என்று அவள் தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

கஷ்டங்களை சவாலாக ஏற்றுக்கொள்ளும் மனது

"சராசரி மனசு அப்படித்தான் இருக்கும். உங்களுக்கிருக்கிற மனசு மாதிரி யாருக்கும் இருக்காது".

"போச்சுடா மறுபடியும் என்னைப் பத்திப் பேசறியா? அதைவிட உபயோகமான காரியம் பார்க்கலாம் வா. சமையல் ஆறிப்போறது திருப்பி சுடவைக்க காஸ் இல்லே, தெரியுமோ?.

"ராஜுவை மாமா அப்படி அடிச்சதைப் பார்த்ததும் அதிர்ச்சியாப் போயிடுத்து மன்னி எனக்கு! நினைச்சுப் பார்த்தாலே இரண்டு நாளைக்கு சாப்பாடு வேண்டி இருக்காது போலேயிருக்கு".

"நினைச்சே பார்க்காதே!"

மீனு ஒரு விநாடி அவளை லேசான வியப்புடன் பார்த்தாள். பிறகு தெருவைப் பார்த்துக்கொண்டு சொன்னாள்".

"நா சொன்னா தப்பா நினைக்கமாட்டேளே மன்னி. மாமாவுடைய கோபத்தைவிட, ஒண்ணும் நடக்கல்லியே இப்பங்கற மாதிரி நீங்க வளைய வர்றதுதான் அநியாயமாபடறது எனக்கு செயற்கையாப்படறது…"

லலிதா திடுக்கிட்டுப் போய் அவளைப் பார்த்தாள் பிறகு சமாளித்துக்கொண்டு சிரித்தாள்.

"என்ன செய்யச் சொல்றே என்னை? நானும் சேர்ந்து கத்தணும்கிறயா?".

“கத்தாட்டாலும் எதிர்ப்பையாவது காட்டலாமோல்லியோ?”

“எப்படி? அதனாலே பிரயோஜனமில்லேன்னு நிச்சயமாத் தெரியும்போது எதிர்ப்பானேன்?”

“இந்தமாதிரி என் புருஷன் இருந்தான்னா நா ஓடிப்போயிடுவேன்!”

“பேசறது ரொம்ப சுலபம் மீனு!”

“அவ ஏன் ஓடிப்போனா?”

“எவ?”

“அதான் அந்தப் பையனோட அம்மா!”

“தெரியாது!”

“பொய், மாமா கோச்சுப்பான்னு பயப்படறேன்!”

“அதனாலேன்னு இல்லே. நமக்கெதுக்கு மீனு அதைப் பத்தியெல்லாம்?” ஒவ்வொருத்தர் ஒவ்வொரு காரணம் சொல்லுவா. போனவளுக்குத்தான் உண்மையான காரணம் தெரியும்”.[5]

**சூழ்நிலைக்கு ஏற்றார்போல் தன்வயப்படுத்துபவள் பெண்**

ருக்மிணியின் பார்வை தாழ்ந்தது ஏதோ சொல்லத்தயங்குகிற மாதிரி இருந்தது. வார்த்தைகளை ஜோடிப்பதைப் பெரிய கஷ்டம்போல அவள் உட்கார்ந்திருந்ததைப் பார்க்க சகிக்காமல் லலிதா மெல்லக் கேட்டாள்.

“என்ன விஷயம் மாமி?”

“கிருஷ்ணனுக்கு உடம்பு சரியாயில்லையாமே?”

“ஆமாம், உங்களுக்கு எப்படித் தெரியும்?”

“டவுன்லே டாக்டரோட பொண்ணு சொன்னா மனசு கேக்கல்லே. உடனே பஸ்ஸைப் பிடிச்சு வந்தேன்”.

இதைச் சொல்வதற்குள் ருக்மிணியின் முகம் சிவந்து போயிற்று. நெற்றியில் வியர்வை துளிர்த்தது.

லலிதா வியப்புடன் அவளைப் பார்த்தாள்.

இந்த உறவே வேண்டாம் என்று அறுத்துக்கொண்டு போனவள் இவள் என்று நம்புவது கஷ்டமாக இருந்தது.

இந்த மாதிரி ஒரு வாழ்க்கை வாழறதைவிட தூக்குப் போட்டுக்கொண்டு சாகலாம் லலிதா!” என்று இரண்டு வருஷங்கள் முன்பு நடுக்கூடத்தில் உட்கார்ந்து இவள் கண்ணீர் விட்டது நினைவுக்கு வந்தது.

கடைசியில் பல்லைக் கடித்துக்கொண்டு உட்காரவும் இல்லை, தூக்குப் போட்டுக்கொண்டு சாகவும் இல்லை. ஒரு நாள் இரவு வீட்டை விட்டுப் போய்விட்டாள். ஊர் இன்னமும் தூற்றிக்கொண்டு இருக்கிறது இவளை. டவுனில் யாரோ ஒரு செட்டியாருடன் இருக்கிறாள் என்கிறது. பாலு வாத்தியார் தெருவில் போகும்போது தலை நிமிர்ந்து நடப்பதில்லை.

சோர்வும், லேசாய் மூப்பும், முகத்தில் தெரிய ‘மனசு கேக்கல்லை’ என்று இன்று இந்த வெயிலில் வந்து நிற்கும் இவளைப் பார்க்கும்போது அதிர்ச்சி ஏற்பட்டது. இந்த மாதிரி மனசுடையவள் இன்னும் கொஞ்சம் ஏன் பல்லைக் கடித்துக்கொண்டு உட்காரவில்லை என்று தோன்றியது.[6]

**ருக்மிணியின் தைரியம்**

ருக்மிணி கண்களைத் துடைத்துக்கொண்டு லலிதாவை தீர்க்கமாகப் பார்த்தாள்.

“பசியோட கொடுமை அதை அனுபவிச்சவாளுக்குத்தான் தெரியும். அவர் கொடுத்த காசு ஒரு வாரச் சாப்பாட்டுக்குத்தான் காணும் அப்புறம் என்ன பண்ணுவேன்? எனக்கு சில சமயம் தோணும் லலிதா, அந்த சித்தேரி இருக்கு பாரு, அங்கே பிறந்திருந்தா எவ்வளவு நன்னாயிருக்கும்னு தோணும். எந்த வேலையை வேணும்னாலும் கூச்சமில்லாமெ செய்யலாம். வயித்தை நிரப்பிக்கலாம். இங்கே அக்ரஹாரத்திலே ஒரு பள்ளிக்கூட வாத்தியாரோட பெண்டாட்டியா இருந்துண்டு நா என்ன வேலைக்குப் போக முடியும்? டவுன்லே யார் வீட்டிலேயாவது சமைக்கப் போகலாம்னு எவ்வளவோ பார்த்தேன் வேலை கிடைக்கல்லே என்ன செய்யட்டும்?.

லலிதா தலையை குனிந்தபடியே உட்கார்ந்திருந்தாள் 'நா உங்களை எந்தக் காரணத்தையும் கேட்கலியே?' என்று தனக்குள் சொல்லிக்கொண்டாள் லலிதா.[7]

**ருக்மிணியின் அசாத்திய துணிச்சல்**

"மாமி நீங்க ஓடிப் போனதிலே ஏதும் தப்பில்லே. நானாயிருந்தா அப்படித்தான் செஞ்சிருப்பேன்" என்று தனக்குள் மீனு சொல்லிக்கொண்டாள்.

'சாப்பாட்டுக்குப் பணத்தைக் கொடுக்காமலே குடிச்சுண்டு, சூதாடிண்டு புருஷன் இருந்தா பெண்டாட்டி அது பொறுக்காமெ வெளியிலே போனா என்ன தப்பு?'.

அந்த ருக்மிணி மாமி ரொம்ப சுவாரஸ்யமான கேரக்டர் என்று அவள் நினைத்துக்கொண்டாள். சுயமாகச் சிந்திக்கத் தெரிந்தவள் மகா கட்டுப்பெட்டித்தனமாக இருக்கும் இந்த கிராமத்தில் பிறந்த ஒருத்தி, இந்த மாதிரி செய்ய வேண்டுமென்றால் அசாத்திய துணிச்சல் இருக்க வேண்டும் என்று தோன்றிற்று, கட்டுப்பாட்டை மீறுபவர்கள்தான் அதிக சுவாரஸ்யமானவர்கள், ராமாயணத்து ராவணன் மாதிரி 'மில்ட'னின் சைத்தான் மாதிரி.[8]

**நம்பிக்கை நட்சத்திரம்**

"மீனு அக்கா அதோ பாரு மறுபடி மேலே நாரை!"

இப்பொழுது மேலே பெரிய கூட்டமாக இருந்தது. புதிதாக வேறு பல நாரைகள் சேர்ந்துகொண்டிருந்தன. நீல நிற ஆகாசப் பின்னணியில் அதன் வெளுப்பு கண்ணைப் பறித்தது.

"நாமும் அதோட ஓடலாமா ராஜு?"

"ஓ".

இருவரும் கலகலவென்று சிரித்துக்கொண்டு வயலோரப் பாதையில் ஓடினார்கள். நாரைகள் அவசர அவசரமாகப் பறக்கையில் ராஜுவின் உற்சாகம் பிடிபடாமல் போயிற்று. பறவைகள் கண்ணுக்குத் தெரியாமல் மறைந்துபோன பிறகு மூச்சிறைக்க முகம் சிவக்க பெரிய புன்னகையுடன் அங்கிருந்த மண்மேட்டில் ராஜு உட்கார்ந்தான். மீனு ஒரு லேசான ஆச்சரியத்துடன் அவன் அருகில் உட்கார்ந்தாள். இவன் அதுவரை அவள் பார்த்திராத ராஜு.

அவன் சட்டென்று அவளுடைய கையை எடுத்துத்தன் கையில் வைத்துக் கொண்டான்.

"மீனு அக்கா! நீ இங்கேயே இருந்துடேன்".

அவன் கண்களில் தெரிந்த ஏக்கத்தையும் பிரியத்தையும் பார்க்கையில் இந்தப் பிள்ளைக்காக எதுவும் செய்யலாம் என்கிற திடீர் வெறி அவளுள் ஏற்பட்டது.

அவள் மென்மையாகப் புன்னகைத்தாள்.

"இருந்துடலாம்தான். ஆனா எனக்குப் படிப்பு இருக்கே! காலேஜிலே படிக்கணும். இந்த ஊரிலே காலேஜ் கிடையாதே?".

"பக்கத்து டவுன்லே இருக்கு. பஸ்ஸிலே போகலாம். ரொம்ப தூரம் இல்லே மீனு அக்கா!"

மீனு யோசனையுடன் அவனைப் பார்த்தாள். இந்தப் பிள்ளை அன்புக்காக எத்தனை ஏங்குகிறது— காய்ந்துபோன மண் நீரை உறிஞ்சுகிற மாதிரி![9]

**தைரியம் தருபவள் மீனு**

"எண்ணைய் விக்கிற விலையிலே அஞ்சரை மணிக்கே வாசல்லே விளக்கேற்றி வெச்சறது. விளக்கை ஏத்தி வச்சுண்டு திண்ணையிலே பெண்கள் உட்கார்ந்துண்டா என்ன அர்த்தம்ங்கறேன்? வீடு உருப்படுமா?"

மீனு காதைப் பொத்திக்கொண்டாள்.

நட்ட நடுக்கூடத்தில் மாமா நின்றுகொண்டு கத்திக்கொண்டிருந்தார்.

லலிதா சமையறைக்குள் நுழைந்துவிட்டாள். ராஜு உள்ளறைக்குச் சென்று புத்தகப் பையைப் பிரித்து வைத்துக் கொண்டான். மீனு தன்னையறியாமல் அவனருகில் போய் உட்கார்ந்துகொண்டாள்.

"படவா, விளக்கேத்தி வெச்சதும் பாடங்களைப் படிக்கணும்னு எத்தனை தடவை சொல்லியிருக்கேன்? பெண்டுகளோட அரட்டை அடிக்கிறியா, நீ?"

புத்தகங்களைப் பிரிக்க ஆரம்பித்திருந்த ராஜுவின் கைகள் நடுங்க ஆரம்பித்திருப்பதை அவள் கவனித்தாள்.

“நா பக்கத்தில் இருக்கேன். ஜோராகப்படி ராஜு!” என்றாள் மெல்ல.

ராஜு அவள் கைகளைப் பிடித்தபடியே படிக்க ஆரம்பித்தான்.[10]

**லலிதாவின் மேன்மையான குணம்**

மாமா என்றைக்குமே எந்தத் தருணத்திலுமே மன்னியுடனும், ராஜுவுடனும் சிரித்துப் பேசினதில்லையா என்று அவளுக்கு ஆச்சரியாக இருந்தது. இருபத்தி ஆறு மாடி கட்டிடத்தில் பம்பாயில் வளர்ந்து பத்து க்ளாஸ் வரை கான்வென்டில் மன்னி படித்தவள் என்று அம்மா சொல்லியிருந்தது ஞாபகத்திற்கு வந்தது. அதனால்தான் மன்னியைப் பார்க்கும்போதெல்லாம் ஆச்சரியமேற்படுகிறது. எப்படி ஒரு நாகரிகச் சூழலில் நாகரிகமாக வளர்ந்தவள் இந்தக் கிராமத்தில் அநாகரிக வார்த்தைகளை நாள் முழுவதும் கேட்டுக்கொண்டு சுரணையில்லாமல் சிரித்துக்கொண்டிருக்கிறாள் என்று திகைப்பேற்படுகிறது. அந்த மாதிரி வளர்ந்தவள் இப்படி இந்த வாழ்வோடு ஐக்கியமாகிப் போய்விட முடியுமா? தப்பே சொல்லாமல், தப்பாகவே நினைக்காமல் குறையே படாமல், எப்படி சாத்தியம்?

மன்னி அசாதாரண மனுஷிதான். அந்தக் குணம் சுரணை கெட்டத்தனம் இல்லை. தெய்வீகத்தன்மை.[11]

**தொகுப்புரை**

**‘ஆகாசவீடுகள்’** நாவலில் இடம்பெற்றுள்ள கதைத்தலைவனாகிய சபேசன் சிறந்த ஒழுக்கமுள்ளவனாகவும், சிறந்த உழைப்பாளியாகவும் படைக்கப்பட்டுள்ளான். தன் குடும்பத்திலுள்ளவர்களிடம் அன்பாக நடந்துகொள்வதில்லை. எந்த நேரமும் மனைவி, மகனிடம் கோபத்துடனே நடந்து கொள்கிறான். சபேசன் மருமகள் மீனா சில நேரங்களில் சபேசனின் செயல்களுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் தைரியமான பெண்ணாகப் படைக்கப்பட்டுள்ளாள். லலிதா கணவனிடம் எதிர்த்து பேசுவதேயில்லை. மாறாக கணவனின் குணநலன்களுக்கு ஏற்றார் போல் நடந்துகொள்கிறாள். எவ்வளவு பிரச்சனை ஏற்பட்டாலும் எதுவுமே நடக்காதது போல், எந்த நேரமும் சிரித்துக்கொண்டே அவளது வீட்டுக்கடமைகளை செவ்வனே ஆற்றுகிறாள். அக்ரஹாரத்திலுள்ள ஒவ்வொரு குடும்பமும் ஒவ்வொரு பிரச்சனையில் வாழ்வதாக கதையில் சுட்டப்பட்டுள்ளது. மீனா மாமாவின் செயல்களை அறிந்து ஊரிலுள்ள குழந்தைகளுக்கு பள்ளி ஒன்றை தனது இல்லத்திலேயே ஆரம்பித்தாள். அவளது காதலன் மீனாவைப் போன்று அந்த ஊரிலேயே மருத்துவமனை ஒன்றை அமைத்து, தனது தங்கையைப் போன்று உடலளவில் ஊனமுற்றவர்களுக்கு உதவிசெய்கிறான்.

**முடிவுரை**

**‘ஆகாச வீடுகள்’** என்ற கதையானது பல்வேறு குணநலன்களுடைய மாந்தர்களைப் பற்றி சித்தரித்துள்ளது. லலிதா என்ற பெண்ணே லட்சியவாதியாகச் சித்தரிக்கப்பட்டுள்ளாள். இன்னும் லலிதாவை போன்ற இலட்சியப் பெண்கள் குடும்பச் சுமைகளைச் சுமந்துகொண்டு வாழ்ந்து வருகிறார்கள் என்பதைச் சித்தரிப்பதாக இக்கதை இடம் பெற்றுள்ளது.

**அடிக்குறிப்பு விளக்கம்**

1. வலைதளம் விக்கிபீடியா
2. மேலது
3. மேலது
4. மேலது
5. வாஸந்தியின் ‘ஆகாச வீடுகள்’, ப.15, திருவரசு புத்தக நிலையம், சென்னை-17. பன்னிரெண்டாம் பதிப்பு-டிசம்பர் 2015
6. மேலது., ப.24,25
7. மேலது., ப.28
8. மேலது., ப.35
9. மேலது., ப.57
10. மேலது., ப.66
11. மேலது., ப.67